இலண்டன்

£1.00 / இலங்கை ரூ. 35.00 / RM 4

# சுடரொளி

CHUDEROLI MAR - APR பங்குனி - சித்திரை 2008

அருள்மிகு
இலண்டன்
முத்துமாரியம்மன்
மகாகும்பாபிஷேகம்
21.03.2008






இலண்டன்
கர்நாடக
இசை விழா
2008
4 - 6 ஏப்பிரல்



எழுத்துலகச் 'சிற்பி'
'கலைச்செல்வி' ஆசிரியர்
சிவசரவணபவன்
பவள விழா நினைவாக

THE INTERNATIONAL SEMINAR ON
THE ETHNIC CONFLICT IN SRI LANKA
22ND & 23RD MARCH 2008
UNIVERSITY OF EAST LONDON





LEWISHAM TAMIL SCHOOL incorporating
London School of Carnatic Music
Presents

# LONDON CARNATIC ISAI VIZHA 2008

Supported by Western Jewellers

LONDON SIVAN KOVIL
4a CLARENDON RISE
LONDON SE13-5ES

4th April 2008
Preliminaries of Music Competitions in
Vocal and Violin
from 4.00pm to 8.00pm

05-04-08
Doors Open 5.30pm

Vocal Recital: V.K Manimaran
Violin:Sri Durai Balasuramanian
Miruthangsm A:Somasundara Desigar
Morsing: Sri K Sithamparanathan

Violin Duo Recital: By
Smt Kanyakumari & Sri Sanjeev Venkat
Miruthangsm A:Somasundara Desigar
Morsing: Sri K Sithamparanathan

06-04-08
Venue Forest School, Hainault Essex
Doors Open 6.00 pm
Concert by:
Winners of London Music Idol Concert

Youth Orchestra
Senior Students of Leading Artists from the U.K

Vocal Recital
Smt Bhushany Kalyanaraman
Violin: Sri Sanjeev Venkat
Miruthangsm: A Somasundara Desigar
Morsing: Sri K Sithamparanathan

Entry tickets
Sponsor Ticket £25.00, £15.00 Per day
Rear Stall: £10.00 Per day
Family Ticket £25.00 Per Day
Music Students £5.00 Per Day Available from teachers

Contact
Dr S Navaratnam 01277 223981, Mr ARaveendran 0208 851 9288, Dr P Ambikapathy mobile No 07956394062, M.Sathiamoorthy 0208 407 4078
Mrs Thavamani Jesudasan 0208 697 8374, Dr P Sivayokan 01388 607732, Dr Kathirgamathamby 0208 468 7765, Mrs Suganthy Srinesan 0208 551 8906

MAXIMUM MEDIA

இலண்டன்
# சுடரொளி
# CHUDEROLI

*கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்*

சுடர் 4 ஒளி 23 பங்குனி-சித்திரை 2008

***கௌரவ ஆசிரியர் :***
*திரு. சி. சரவணபவன் (சிற்பி),* M.A.,

***பிரதம ஆசிரியர் :***
*திரு. ஐ.தி. சம்பந்தன்*

***சிரேட்ட ஆலோசகர்கள் :***
*திரு. பொன் பாலசுந்தரம்*
*திரு. என். செல்வராஜா (நூலகவியலாளர்)*

***ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :***
*திரு. மயில் மனோகரன்*
*திரு. எஸ். கருணானந்தராசா*
*திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்*

***பதிப்பாசிரியர் :***
*திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,*

***நிர்வாகம் :***
*திருமதி. செல்வதி சம்பந்தன்,* B.A.(Hons)

***வடிவமைப்பு :***
*உலகத் தமிழர் பதிப்பகம், சென்னை*
Email : utpmathi@yahoo.co.in

***கணினி :***
*திருமதி. சரோஜா இலட்சுமணன்*

***வெளியீடு :***
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ UK
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com

***தமிழகப் பிரதிநிதி :***
*திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,*
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com

***இலங்கைப் பிரதிநிதி :***
*திரு. V. தருமலிங்கம்*

***மலேசிய தொடர்பாளர் :***
*திரு. இராஜசிங்கம், Tel : 017-3793997;*
E-mail : Pooganesvari.Arumugan.nielsen.com

| Subscription | | Annual | Life |
|---|---|---|---|
| UK | : | 9 12 | 120 |
| Europe | : | 9 15 | 150 |
| India | : | Rs. 200 | 2000 |
| Sri Lanka | : | Rs. 300 | 3000 |
| Malaysia | : | RM 30 | 300 |
| Singapore | : | SG$ 15 | 150 |
| Other countries | : | 9 20 | 200 |

படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு

## இந்த இதழில்

1. எமது நோக்கு இலங்கை அரசியலில் குடும்ப ஆதிக்கம் அஸ்தமிக்கிறது 3
2. ஈழத்து நாடக மேதை வைரமுத்து - காரை சுந்தரம் பிள்ளை 5
3. தென்கிழக்காசியாவில் தமிழர்கள் - ப. கனகலிங்கம் 7
4. தனித் தமிழீழம் தவிர வேறெதுவுமில்லை-தந்தை செல்வா 10
5. வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் 12
6. அற்புதங்கள் நிகழும் திருத்தலம் - பொன். பாலசுந்தரம் 16
7. தைப் பொங்கல் தினமே தமிழ்ப் புத்தாண்டு! - சபேசன் 19
8. மணிவிழாக் கண்ட மகேஸ்வரி சிதம்பரம் பிள்ளை 24
8. தமிழ்ப் புத்தாண்டுப் போராட்ட வரலாறு-விவேகானந்தன் 32
9. சிவராத்திரியும் சிவ வழிபாடும் 35
10. பக்தியினால் விதியை ஜெயிக்கலாம்-ஸ்ரீனிவாச ராமானுஜர் 36
11. சிறுகதை : இனங் காணப்பட்ட இலக்கு - ஆராதாரா 40
12. தமிழ் சினிமாவின் வரலாறு - கே. டபிள்யூ. செல்வராசா 44
13. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!! - சோம. வள்ளியப்பன் 46
14. Malaysian Govt. Sponsored Atrocities-Alex Doss 49
15. கதை நேரம் : தி.க. சந்திரசேகரன் 52

### பவளவிழாக் காணும் சிவசரவணபவன் ''சிற்பி''



''ஈழத்துப் பிரபல இலக்கிய எழுத்தாளரும் ''கலைச் செல்வி'' ஆசிரியரும் இலண்டன் சுடரொளியின் கௌரவ ஆசிரியருமாகிய திரு. சிவசரவணபவன், எம்.ஏ., (சிற்பி) அவர்கள் அகவை எழுபத்தைந்தை எய்திய ஆண்டு இதுவாகும்.

எட்டு ஆண்டுக்காலம் ''கலைச்செல்வி'' என்னும் இலக்கியச் சஞ்சிகையை நடத்திச் சாதனை படைத்தவர். பல சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கவிதைகள் அவரது எழுத்துலகப் படைப்புகளாகும்.

ஆசிரியராகவும் கல்லூரி அதிபராகவும் செங்குத்தர் இந்துக் கல்லூரி, யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி ஆகியவற்றின் மூலம் கல்விப்பணி ஆற்றியவர். மாணவர்களுக்குக் கல்வியூட்டுவதில் விற்பன்னர். இவரது கல்வியூட்டும் திறமையால் பல மாணவர்களின் இதயங்களில் இன்றும் நடமாடிக் கொண்டிருப்பவர். இலண்டனில் வாழும் செங்குந்தர் இந்துக் கல்லூரி மாணவர்கள் சிலர் (சத்தியசீலன், தேவசகாயம், சிங்காரவடி, வாமதேவன்) போன்றவர்கள் இவரது ஆசிரியத் திறமையை இன்றும் பாராட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். அது ஓர் உதாரணம். இப்படிப் பல மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்த ஆசிரியர்.

அதே போன்று எழுத்துத் துறையிலும் பல எழுத்தாளர்களின் நன் மதிப்பைப் பெற்றவர். பல எழுத்தாளர்களை வளர்த்த பெருமைக்குரியவர். ஓர் இலட்சிய எழுத்தாளன் என்ற நற்பெயரைப் பேணிவந்தவர். புகழுக்காக எழுதாது இலட்சிய நோக்கத்திற்காக எழுதிவருபவர். அவரது படைப்புகள் அதற்குச் சான்று.

தமிழகத்திலுள்ள பிரபல எழுத்தாளர்கள் அகிலன், பார்த்தசாரதி, செல்லப்பா, ஜெயகாந்தன் போன்றவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். நல்லுறவை வளர்த்தவர். ஆசிரியத் துறையாலும் எழுத்துத் துறையாலும் எல்லோராலும் மதிக்கப்படும் திரு. சரவணபவன் (சிற்பி) அவர்களின் பவள விழா ஆண்டு இவ்வாண்டாகும். சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் இலங்கையிலிருந்து வெளிவரும் ''ஞானம்'' பவளவிழா மலர் ஒன்றை வெளியிட்டுச் சிறப்பிக்கவுள்ளது. இலண்டனிலுள்ள செங்குந்தர் இந்துக் கல்லூரி மாணவர் சங்கம் ஆசிரியர் திரு. சரவணபவன் அவர்களுக்குப் பொற்கிழி வழங்கிக் கௌரவமளிக்கவுள்ளனர்.

தமிழ்ச் சமுதாயத்திற்கு நல்ல படைப்புகளைத் தொடர்ந்தும் படைக்கும் நல்லகாலம் பவளவிழாவுடன் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம். இந்நன்னாளில் சுடரொளி வெளியீட்டுக் கழகம் கௌரவ ஆசிரியர் சிற்பி அவர்களை வாழ்த்திக் கௌரவிக்கிறது. *

சிந்தனைப் பகுதி

# தோன்றின் புகழொடு தோன்றுக

– சி. மாசிலாமணி



ஒரு செயல் மற்றவர்களைக் கவரும் வகையில் செய்யப்படவேண்டும். இது செயற்கரிய செயல் என்று மற்றவர்கள் போற்றவேண்டும். இது எளிதில் சாதிக்கக் கூடிய விடயம் அல்ல. அவ்வகையில் ஒரு செயலை ஆற்ற வேண்டுமென்றால் எம்மை நாமே அர்ப்பணித்துக் கடும் உழைப்புடன் செயல்பட வேண்டும். எவ்வளவு தான் நாம் எம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டாலும், எம் இயல்பான ஆற்றல் அதற்கு எவ்வளவுக்கு ஒத்துழைப்புத் தரும் என்பதையும் கணிக்க வேண்டும். எடுத்துக்காட்டிற்குக் குரல் வளம் அமையப் பெறாத என்னைப்போன்ற ஒருவர், கடும் உழைப்புடன் பல்லாண்டுக் காலம் சங்கீதம் பயின்று வாய்ப்பாட்டிற்காக மேடை ஏறினாலும் அவரின் அபயக் குரல் ஒரு போதுமே அவருக்கு அபயம் கொடுத்து அவரை இனிமையாகப் பாட வைக்காது. இது ஒரு எளிதான கணிப்பு. இந்த வகையான சுய ஆற்றல் கணிப்பு எல்லோருக்கும் தேவை. எல்லாத் துறைக்கும் தேவை.

மேடையில் பாடுவதைப் பொறுத்தமட்டில் குரல் வளம் இல்லாதவர்கள் கதை முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படும் கதைபோல் தோன்றலாம். ஆனாலும் மன வலிமையும் கடும் உழைப்பும் கொண்டவர்கள் எந்தத் துறையுள் நுழைந்தாலும் அந்தத் துறைக்குப் புகழ் ஈட்டுவதுடன் தாங்களும் புகழ் பெறுவார்கள். குரல் வளம் இல்லாவிட்டாலும் அப்படியானவர்கள் சங்கீதத் துறையுள் நுழைந்தாற்கூடத் தங்கள் உழைப்பின் பயனால் கிடைத்த ஆற்றலைப் பிரயோகித்து எத்தனையோ குரல் வளம் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாக மாறித் தாங்களும் புகழ் பெறுவார்கள்.

புகழ் விரும்பாதவர்கள் எவரும் இல்லை. இதைக் கூறும்போது ஒரு மனோ தத்துவ நிபுணரின் கூற்று ஞாபகத்திற்கு வருகிறது. பாலியல் இயக்கும் சமூகத்தில் தன் பெயர் முக்கியம் வகிக்க வேண்டுமென்ற எண்ணமுமே மனித வாழ்வின் உந்து சக்திகளாம். அதற்காக சண்டியன் பட்டம் பெற்றாவது தன் பெயரை முன்வைக்க முயலக் கூடாது. இங்கு நான் கூற முற்படுவது புகழ் எம் வாழ்வின் இன்றியமையாத அங்கம் என்பதையே.

மனவலிமை, கடும் உழைப்பு ஆகியவற்றுடன் நம் நோக்கும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எமது சமூகத்திற்குத் தேவைப்படும் பணிகளில், ஒரு குறிப்பிட்ட பணியில் தொய்வு ஏற்படுகிறது. அதற்கு முண்டு கொடுக்க வேண்டும் என்று ஒருவர் வலிந்து பணி செய்யச் செல்வாரானால் அவருக்கு அது புகழையும் கொடுக்கும். அதற்கு மேலாக மன நிறைவையும் கொடுக்கும். இன்றைய தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தின் நியாயங்கள் தொய்வு கண்டுள்ளன. அவற்றைப் பரப்புரை செய்தாலே அதன் பயன் எமக்கு மன நிறைவைத் தருவதுடன் எம் இனத்திற்குப் பெரும் சேவையாகவும் அமையும்.

மேலே கூறப்பட்ட எல்லாவற்றையுமே வள்ளுவர் சுருக்கமாகக் கூறிவிட்டார். தோன்றின் புகழொடு தோன்றுக என்ற மூன்று சொற்களுள் அடக்கிவிட்டார். இந்த மூன்று சொற்களும் அடங்கிய குறளுக்குத்தான் எத்தனை வகை உரைகள் எழுதிக் குழம்பி உள்ளார்கள். முதலில் அந்தக் குறளையும் அதற்கு டாக்டர் மு. வரதராசன் அளித்த சரியான தெளிவான உரையையும் தந்துவிட்டு குழப்பங்களைப் பார்ப்போம்.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழொடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பது நல்லது.

டாக்டர் கண்ணன் என்பவர் உரை எழுதிக் குழம்பியதுடன் நில்லாது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகுக்கே தவறான செய்தியை அனுப்பியுள்ளார். ஈ.வி.எஸ். என்னும் கல்விக் குழுவின் உரையில், பிறந்தால் புகழுடன் பிறக்கக் கடவர், அப்புகழ் இல்லாதவர் பிறத்தலினும் பிறவாமை நன்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுரைகளும் கற்பு உடையவள் பெய் என்றால் மழை பெய்யும் என்ற சாயல் கொண்டதாகவே உள்ளது. வள்ளுவரே! உம்மை உலகினுக்களித்து வான் புகழ் கொண்ட தமிழுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். ✱

---


**விரைவில் வெளிவருகிறது!**

## தமிழ் ஒலைகள் 15 ஆவது பதிப்பு

தமிழ் உலகில் சிறந்த வர்த்தக, சமுதாய, சமய, கலை, கல்வி முதலான தகவல்கள் - விளம்பரங்கள் அடங்கிய தமிழ் ஒலைகள் 15 ஆவது பதிப்பு பல புதிய விவரங்களுடன் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டில் வெளி வருகிறது. அதில் இடம்பெறவேண்டிய தகவல்கள் விளம்பரங்களை மார்ச் 30க்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

தொடர்புகளுக்கு

020 8543 2126 Mob : 0771 800 3838, 0771 800 3839
52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF
E-mail : editor@tamilpages.org

# எமது நோக்கு

## இலங்கை அரசியலில் குடும்ப ஆதிக்கம் அஸ்தமிக்கிறது

அனுரா பண்டாரநாயக்காவின் மறைவுடன் பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆதிக்கம் அஸ்தமிக்கிறது. இலங்கை அரசியலில் ஆட்சி நடத்திய ஆட்சியாளர்கள் தமிழர்களின் பிரச்சினைகளை அடித்தளமாக வைத்து சிங்கள இனவெறியர்களின் ஆதரவுடன் ஆட்சி நடத்திவருவது வரலாறு. இந்து சமுத்திரத்தில் முத்து என வர்ணிக்கப்பட்ட இலங்கை நாட்டைக் குடும்ப அரசியல் அபிலாசைகளினால் படுகுழியில் தள்ளி விட்டனர்.

### தேசியத் தலைமைக்கு இடமே இல்லை

இரத்தம் சிந்தாது எவ்விதப் போராட்டமும் இன்றி இலகுவாகப் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தைத் துர்ப்பிரயோகம் செய்ய முற்பட்டனர். சுதந்திர இலங்கையின் முதற் பிரதமர் திரு. டி.எஸ். சேனநாயக்க தொடக்கம் மகிந்த ராஜபக்ஸா வரையும் தமிழர் பிரச்சினையை மையமாக வைத்து ஆட்சிக்கு வந்து நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் சென்ற வரலாற்றை மக்கள் மறக்க மாட்டார்கள். தமிழர்களை வதைத்து ஆட்சி நடத்திய ஆட்சியாளர்களின் குடும்ப ஆதிக்கம் அஸ்தமிக்கத் தொடங்கிவிட்டது. தமிழர்களுக்குக் கொடுமை செய்த அரசியல் தலைவர்கள் சிலர் அவஸ்தை மரணத்தையும், மக்கள் செல்வாக்கையும் இழந்த நிலையில் மரணத்தையும் தழுவிக் கொண்டனர்.

தமிழ்த் தலைவர்களின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்த டி.எஸ். சேனநாயக்க குடும்பத்தின் ஆட்சி அவரது மகன் டட்லிசேனநாயக்க அவர்களின் மறைவுடன் அஸ்தமித்துவிட்டது. திரு. டி.எஸ். சேனநாயக்க பிரதமராக வந்ததும் 10 இலட்சம் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை, குடியுரிமையைப் பறித்து நாடற்றவர்களாக்கினார். அந்தக் கொடுமைக்குக் கிடைத்த தண்டனையே 1952 இல் அவர் குதிரையிலிருந்து விழுந்து மரணமடைந்த நிகழ்வு.

திரு. டி.எஸ்.சே. செய்த துரோகத்தால் அவருடன் இருந்த திரு. எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்துத் தமிழர் பிரச்சினையை முன்வைத்து 1956 இல் ஆட்சிக்கு வந்தார். ''சிங்களம் மட்டும்'' சட்டத்தை நிறைவேற்றித் தமிழர்களுக்கு அநீதி இழைத்த திரு. பண்டாரநாயக்கா 1959 இல் பௌத்த பிக்கு ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன்பின் ஆட்சியில் அமர்ந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்து சட்டத்தில் தமிழர்களுக்கு இருந்த பாதுகாப்பை அகற்றியும், தரப்படுத்தலையும், சிங்களம் மட்டும் சட்டத்தையும் தீவிரமாக அமுல்நடத்தித் தமிழர்களுக்கு பெரும் கொடுமை இழைத்தார். அவருக்குக் கிடைத்த தண்டனை அவரது குடியுரிமை இழந்து சில வருடங்களில் அரசியல் அனாதையானார். சுதந்திரக் கட்சிக்குள் அனுரா செய்த குளறுபடியால் நிம்மதியற்ற வாழ்வு. பரம்பரை வாரிசு அனுரா தனிமைப்படுத்தப்பட்டதால் கட்சியை மகள் சந்திரிகாவிடம் கொடுத்து விட்டு நோயுள்ள நிலையில் முடங்கிய பிரதமராக மறைந்தார்.

சுதந்திரக் கட்சியைப் பறித்தெடுத்த திருமதி சந்திரிகா குமாரதுங்கா தமிழர் பிரச்சினையைத் தீர்த்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று தமிழர்களின் பெருந்தொகை வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தார். ஆட்சி அதிகாரத்தைச் சுவைக்கத் தொடங்கியதும் கொடுத்த வாக்குறுதியை மறந்து தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான யாழ்பிரதேசத்தைச் சிங்கள இராணுவ பலத்தால் ஆக்கிரமித்து 5 இலட்சம் தமிழர்களைக் குடாநாட்டிலிருந்து ஓடவைத்தார். அவர் 11 வருட ஆட்சியின் பின் இலங்கை நாட்டை விட்டோடி வெளிநாட்டில் அரசியல் அஞ்ஞான வாசம் புக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். தந்தை பண்டாரநாயக்க வளர்த்த சுதந்திரக் கட்சியையும் பறிகொடுத்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டார். தமிழர்களுக்குச் செய்தக் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

### தனி அரசே தமிழர்க்கு வழி

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக 12 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக் காலத்தில் இரு இனக் கலவரங்களால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவர்களது கோடானு கோடி சொத்துகள் அழிக்கப்பட்டன. பெறுமதிமிக்க யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டதும் அவரது காலத்திலேயே. ஜே.ஆர். தமிழர்களுக்குச் செய்த கொடுமையால் மறையும்போது மக்கள் செல்வாக்கற்ற தலைவராக மறைந்தார். அவர் மறைவுடன் ஜே.ஆர். சகாப்தம் அஸ்தமித்து விட்டது. தனக்குப்பின் ஆட்சியில் இருக்க வேண்டுமென்று நம்பி உருவாக்கிய திரு. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்ததும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நாட்டில் சமாதானத்தை உருவாக்கியிருந்தார். அதைச் சரியாக நடைமுறைப் படுத்தத் தவறியதோடு இவரை நம்பி உடன்படிக்கை செய்துகொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்குக் கிழக்குத் தளபதி கருணாவைப் பிரித்தெடுக்கச் செய்த சூழ்ச்சியால் ஜனாதிபதியாக வரும் வாய்ப்பை இழந்தார். அதன்பின் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. அவர் தமிழர்களுக்குச் செய்த சூழ்ச்சியால் அரசியல் அவலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இன்று பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சியை அபகரித்துத் தனது குடும்பச் சொத்தாகிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸா தமிழினப் படுகொலையைச் செய்து சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தி வருகின்றார். அவரது ஆட்சியும் கட்சி ஆதிக்கமும் அஸ்தமிக்கும் காலம் விரைவில் வந்து கொண்டிருக்கிறது.

இந்த வரலாறுகளை நோக்கும்போது இனிமேல் சிங்கள அரசியல்வாதிகளிடையே ஒரு தேசியத் தலைமை உருவாகுவதற்கான வாய்ப்பு இல்லை. அதனால் ஐக்கிய இலங்கை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஜனநாயக ஆட்சிமுறையில் 2/3 வீதமாக சிங்களப் பெரும்பான்மை தமிழ்பேசும் இனத்தைப் பதம் பார்த்துக் கொண்டே இருக்கும். தமிழினம் அழிவிலிருந்து தப்ப வேண்டுமானால் என்ன விலை கொடுத்தேனும் தனி ஆட்சி அமைப்பது ஒன்றே வழி. சிங்களத் தலைமைகள் விட்ட தவற்றால் பிறந்த வழியே தனியாட்சி. இதைச் சர்வதேசச் சமூகம் புரிந்து செயலாற்றவேண்டும். ✱

## "தை" பிறப்பே ஆண்டுப் பிறப்பு!

### டாக்டர் மு. வரதாசனார்

இன்று 'பொங்கல்' என்று திருவிழாக் கொண்டாடுகிறார்களே! என்ன காரணம் தெரியுமா?

ஒருவாறு தெரியும். அறுவடையெல்லாம் முடிந்து விட்டது. அத்தனை மாதமாகப் பாடுபட்டு உழைத்த பயன் கிடைத்துவிட்டது. வீடுகளில் தானியங்கள் நிரம்பி விட்டன. புது வெல்லம், புதுக் காய்கறிகள் முதலானவை கிடைக்கின்றன. இவ்வளவு நன்மைக்குக் காரணம் யார்? சூரியனே அல்லவா? சூரியன் இல்லாவிட்டால் மழை ஏது? புல் ஏது? தழை ஏது? எல்லா ஒளியும், நிறமும், வளர்ச்சியும் சூரியனால்தானே உண்டாகின்றன?

சூரியனே பயிர்களுக்கு உயிர் கொடுத்து வளர்ப்பவன். குடியானவர் வாழ்வுக்கே சூரியன்தான் முதல் காரணம். சூரியனே கண்கண்ட தெய்வம் என்று அவர்கள் கொண்டாடுகிறார்கள். சூரியனால் கிடைத்த புதிய பொருள்களைப் பொங்கிச் சமைத்து உண்பதற்கு முன், சூரியன் செய்த நன்றியை மறக்காமல் பொங்கல் விழாக் கொண்டாடுகிறார்கள்.

நகரங்களிலும் பொங்கல் விழாச் செய்கிறார்களே; அது ஏன்? உழவுத் தொழில் செய்யும் கிராம மக்கள் நன்றாக வாழ்ந்தால்தான் நகரங்களில் இருப்பவர்களும் வாழ முடியும். ஆகையால், அவர்களும் பொங்கல் விழா கொண்டாடுகிறார்கள்.

இன்னொரு காரணமும் உண்டு. முன் காலத்தில் வருடப் பிறப்புச் சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாள்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாள் முதல் எல்லாருடைய வாழ்வும் பல வகையிலும் புதிய வாழ்வாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தினார்கள். உண்ணுவதில் புதுமை, உடுப்பதில் புதுமை, வீட்டில் புதுமை, தெருவில் புதுமை, ஊரெல்லாம் புதுமை, மனத்திலும் புதுமை, புதிய பச்சரிசியைப் பொங்குகிறார்கள். புதிய காய்களைச் சமைக்கிறார்கள். புதிய ஆடைகளை வாங்கி உடுக்கிறார்கள். வீட்டுக்கு வெள்ளை அடித்து அழகு செய்கிறார்கள். தெருவில் புதுமண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்கிறார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துகிறார்கள். பழைய பகையெல்லாம் மறந்து விடுகிறார்கள். மனத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்கிறார்கள். எல்லாரோடும் அன்பாகக் கலந்து பேசுகிறார்கள், மகிழ்கிறார்கள். இப்படி நகரங்களில் புது ஆண்டுப் பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்.

இலண்டன் சுடரொளி ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன் புதல்வர்

## ஞானலிங்கம் திருமணப் பதிவு வைபவம்

இலண்டன் சுடரொளியின் பிரதம ஆசிரியர் (காரைநகர்) ஐ.தி. சம்பந்தன் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் செல்வன் திரு. ஞானலிங்கம், எம்.பி.ஏ., அவர்களுக்கும் இலங்கை மத்திய வங்கி சிரேட்ட உத்தியோகத்தார் (தாவடி) திரு. பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி செல்வி மலர்விழி, பி.எஸ்.சி., அவர்கட்கும் 28-1-2008 அன்று கொழும்பு ஹோட்டல் சபையர் மண்டபத்தில் திருமணப் பதிவு மிகச் சிறப்பாக நடந்தேறியது. தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராசா, யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவப் பீடாதிபதி திரு. தேவராசா திருமணப் பதிவை உறுதிசெய்து கையொப்பம் இட்டனர்.

நிகழ்வுக்குச் சமய, சமூக, அரசியல், ஊடகவியலாளர் உட்படப் பெருந்தொகையானோர் வருகை தந்து தம்பதிகளை வாழ்த்தினார்கள். மன்னார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. சூசைதாசன், கல்வி அமைச்சின் செயலாளர் திரு. தில்லை நடராசா, அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், துணைத்தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, கதிர்காமயாத்திரிகர் சபைத் தலைவர் திரு. சின்னத்துரை அருளானந்தம், சைவத் திருநெறிமன்றத் தலைவர் எஸ்.ரி.ஆர். தியாகராசா, மலையக மக்கள் முன்னணிச் செயலாளர் டாக்டர் குமரகுருபரன், வீரகேசரி ஆசிரியர் திரு. தேவராஷ், தினக்குரல் ஆசிரியர் திரு. தனபாலசிங்கம், இலண்டன் சுடரொளி (கொழும்பு) துணை ஆசிரியர் திரு. தருமலிங்கம், ஊடகவியலாளர் திரு மாணிக்கவாசகர், திரு குலமணி, திரு. வேல் அமுதன், திரு. ஞானசுந்தரம், காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. இராசையா, செயலாளர் திரு. மார்க்கண்டு, கம்பன் கழகம் திரு. ஜெகதீசன், யுறோ விமானச் சேவை முகாமையாளர் திரு, மனோகரன், வேலிகம ஸ்ரோஸ் அபர் தி.எஸ். பொன்னம்பலம், மத்திய வங்கி சிரேட்ட அதிகாரிகள், இரு பகுதியினரின் உறவினர், உற்றார், நண்பர்கள் உட்பட பலர் வருகை தந்து தம்பதிகளை வாழ்த்திச் சிறப்பித்தனர். (வண்ணப் படங்கள் பக்கம் 26, 27)

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

## வாழ்க்கை வரலாறு (18)

*விரல்கள் தாளம் போடும் விழிகள் நடமாடும்*
*சுருதி குருதியோடு சுவைகலந்து பேசும்*

**- அரியாலையூர் வே. ஐயாத்துரை**

### 2ஆம் பகுதி

**வை**ரமுத்து சில சமயங்களில் 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தில் எமனாக நடிப்பதுண்டு. பொதுவாக எமனை ஒரு அச்சம் தரும் பாத்திரமாகவே பலரும் மேடையிற், சித்திரிப்பதைக் கண்டுள்ளோம். ஆனால், வைரமுத்து எமனை வீரம், நீதி, கருணை என்பன நிறைந்த பாத்திரமாகக் காட்சியளிக்க வைப்பது வழக்கம்.

வலிமையும் வீரமும் உறுதியும் மிக்கவன் எமன். அவன் தாராண்மைக் குணமும் படைத்தவன். இதனை வைரமுத்து மிகவும் அழகாகச் சித்திரிப்பார்.

'அடாணா' ராகத்திலமைந்த பின்வரும் பாடலை வைரமுத்து பாடும் பொழுது வீர ரஸம் கொப்புளிக்கும்.

**''விண்டலமும் மண்டலமும் எண்டிசையடங்கலும்**
**விளங்கு நீதி மார்க்கமெடுப்பேன் - நல்ல**
**வேத விதிப்படி தானே நடப்போரை**
**மேலுலகம் விடுப்பேன்''**

மேற்படி வரிகளைப் பாடும்பொழுது கண்களில் கனிவு, குரோதமின்மை, குரலில் ஒரு மிடுக்கு, (அது நீதியால் வந்த மிடுக்கு) என்பன தோன்ற நடிப்பார். அடுத்து,

**''நெறிவிட்ட துஷ்டர்களைக்**
**கட்டிவந்து நரகத்தினில் விடுப்பேன்**
**உயிர் வேதனை மிகவும் கொடுப்பேன்''**

எனும் வரிகளைப் பாடும்போது வீரம் கொப்புளிக்கக் காணலாம். ''இவற்றை நான் எவ்வித சிரமமுன்றிச் செய்வேன். எனைத் தடுப்பவர் யாரும் இல்லை'' எனும் தன் முனைப்புடன் ஆனால் ஆணவமின்றிக் காட்சி தரும் ஒருவனாக எமனைக் காண வைப்பார் வைரமுத்து.

**''இன்னும் மேலும் மேலும் பாவிகளைக்**
**காணக் கோபமாக வெவ்வேறு**
**ஆய்க்கினைகள் செய்யத் தொடுப்பேன்''**

எனும் வரிகளை அழுத்திப் பாடி ஒரு முத்தாய்ப்பு வைத்தபின் வைரமுத்து தோன்றும் காட்சி ஒரு வீரனை நினைவுபடுத்தும். இங்கே எமன் தருமராஜனாகக் காட்சியளிப்பானேயொழிய தண்டராஜனாகக் காட்சியளிப்பதில்லை.

### 6. பயானகம்

பயானக ரஸம் (பயம்) வெளிப்படும் வகையில் வைரமுத்து சத்தியவான் சாவித்தரி நாடகத்தில் நடிக்குமிடம் மிகவும் சிறப்பானது, எமன் சத்தியவானுக்கு மட்டும் தெரியும் வகையில் தோன்றித் தன்னுடன் எமலோகத்திற்கு வரும்படி அழைப்பான். அதனால் பீதியடைந்த சத்தியவான் மனைவியை இறுகப் பற்றியபடி:

**''வாரான் ஒருவன் மானே - அதோ**
**வாரான் ஒருவன் மானே - அவன்**
**வாவென் றழைக்கிறானே - என்னை**
**வாவென்றழைக்கிறானே!**

**கன்னங் கரியநிறம் - அவன்**
**கண்களோ சிவப்பு நிறம்**
**பார்க்கப் பயங்கரமே - மிகப்**
**பதறுதே நெஞ்சம் ஐயோ!''**

புன்னாகவராளியில் அமைந்த இப்பாடலைப் பாடும்போது வைரமுத்துவின் முகம் மாற்றமடைந்து கொண்டு வருவதை அவதானிக்கலாம். தேகம் நடுங்குவதையும், மயக்கமுறுவதையும், சொற்கள் தடுமாறுவதையும், அவருடைய நடிப்பிற் காணும்போது பார்ப்போரும் அச்சமடையும் நிலைக்கிட்டுச் செல்லப்படுவர்.

### 7. பீபத்ஸம் (அருவருப்பு)

வைரமுத்து அருவருப்பை வெளிப்படுத்தி நடிக்கும் இடங்கள் இரண்டேயிரண்டு நாடகங்களில் மட்டும் உண்டு. முதலாவது நாடகம் நல்லதங்காள் மற்றையது பூதத்தம்பி. நல்லதங்காள் நாடகத்தில் நல்லதங்கையின் அண்ணனாக-நல்லண்ணனாக நடிக்கும் இவர் ஏழு பிள்ளைகளுடன் தன்னுடைய தங்கை கிணற்றில் விழுந்து மடிந்து விட்டதைக் கண்டதும், இதற்குத் தன்னுடைய மனைவிதான் காரணம் என்றறிந்ததும் அவளைப் பார்க்கவே அருவருப்புப்படும் நிலையைச் சித்திரிக்கும் காட்சி வெகு சிறப்பாகவிருக்கும். வெறுப்போடு முகத்தைச் சுளித்தபடி 'அடாணா' ராகத்தில் பின்வரும் பாடலைப் பாடுவார்.

ராகம் : அடாணா தாளம் : ஆதி

*பல்லவி*

அடிபோடி குடிகேடி நிர்மூடி
பழிதேடி வைத்தவளே (போடி)

*அனுபல்லவி*

படியிலென் தங்கைக்குப் பங்கம் விளைந்திட்ட
பாதகியே கொடுங் காதகியே (போடி)

*சரணம்*

மூதேவி மூளியை மொட்டையடித்து
முகத்திலே செகப்புக் கறுப்புமிட்டு
மூதேவி வாகன மீதினிலேற்றி
முச்சந்தி வீதியி லக்ஷணங்காட்டி (போடி)

இப்பாடலைப் பாடியபடி மூளியலங்காரியின் தலை மயிரைப் பிடித்து அலைக்கழிப்பதும், காறியுமிழ்வதும், அசைவுகளால் அருவருப்பை வெளிக்காட்டுவதுமாக அற்புதமாக இவர் நடிப்பார்.

## 8. அற்புதம்

அற்புத ரஸம் வெளிப்படும் வகையில் வைர முத்து நடிக்கும் பாத்திரம் 'நந்தனார்' ஆகும். தில்லைக் கூத்தனின் திருநடனத்தைக் கண்டு, தன்னை மறந்தவராக, அதிசயித்தபடி ஆடிப்பாடும் காட்சி உண்மையில் அற்புதமானதுதான். 'மாயாமாளவகௌளை' ராகத்திலமைந்த இப்பாடல் அற்புத ரஸத்தை வெளிக்கொணரும் வகையில் இவரால் பாடியாடப்படும்.

ராகம் : மாயாமாளவகௌளை தாளம் : ரூபகம்

*பல்லவி*

நடன மாடினார் - ஐயா
நடன மாடினார் (நடனம்)

*அனுபல்லவி*

நடனமாடினார் தில்லைநாயகர் பொன்னம்பலந்தனில்
தாகுஜணுத தகஜம்தரி தகஜணு
தகதிமி தித்தோம் தத்தளாங்கு
தகதளாங்கு தகதிக ததிங்கிணதோமென்று
(நடனம்)

*சரணம்*

முத்தி மடத்தை சித்திக்க சித்திக்க
மோக வலைகள் பத்திக்க பத்திக்க
பத்தாகள் மனது தித்திக்க தித்திக்க
பாதச் சிலம்பு சத்திக்க சத்திக்க
பனிமதி சடையாட பதஞ்சலிமாமுனி மறைபாட
பண்ணவர்கள் கொண்டாடப் பாலகிருஷ்ணன்
மத்தளம்போட ; (நடனம்)

## 9. சாந்தம் :

'சாந்தம்' எனும் ரஸத்தை ஒன்பதாவது ரஸமாகப் பிற்காலத்தில் வந்தவர்கள் சேர்த்துக் கொண்டனர். பரதர் எட்டு ரஸங்கள் பற்றியே கூறியுள்ளார். தொல்காப்பியரும் அவ்வாறே எணவகை மெய்ப்பாடுகளையே சொல்லியுள்ளார். விருப்பு வெறுப்பு இல்லாத சாந்த ரஸத்தில் பல உணர்ச்சிகள் தோன்ற வாய்ப்பில்லை. ஆகவே இதை ஒரு ரஸமாக ஏற்றுக் கொள்ளலாமா என்ற வினாவைச் சில அறிஞர்கள் எழுப்புகின்றனர்.

நாட்டில் சாஸ்திரத்துக்கு வரை வகுத்த அபிநவகுப்தா வேதாந்தக் கண்ணோட்டத்தோடு சாந்த ரஸத்தை நோக்கியுள்ளார். சாந்த ரஸம் ஆன்மீக அனுபவம் என்றும், உடல் உணர்ச்சிக்கு அப்பாற்பட்டதென்றும் இவர் கருதுகின்றார். (பத்மா சுப்பிரமணியம் 1986:141)

வைரமுத்துவும் நந்தனார் நாடகத்தில் 'சாந்த' ரஸத்தை இறுதிக் காட்சியில் மிகவும் அற்புதமாக வெளிப்படுத்துவார். தில்லைக் கூத்தனின் தரிசனத்தைக் கண்டு ஆடிப்பாடிய பின்னர் சாந்தமாக அசையாதிருக்கும் காட்சியினூடாக 'சாந்தரஸம்' பிறக்க வைக்கின்றார்.

இதுவரை நவரஸத்துடன் வைரமுத்துவின் நடிப்பை நோக்கினோம். இனிப் பொதுவாக அவர் நாடக அரங்கில் பாடலைக் கையாண்ட முறைமையைப் பார்ப்போம். *

*(தொடரும்)*

# ஆருயிரிற் கலந்தாய்!

## புலவர் வெற்றியழகன்

தமிழாகி நின்றாய் - உயிர்
தானாகி ஒன்றாய்!
அமிழ்தாகி வென்றாய் - என்றும்
அசையாத குன்றாய்! -தமிழாகி

தாயாக வந்தாய் - மொழிகளின்
தாயாய்உ வந்தாய்!
நோயாக வந்த - மொழிகளை
நொறுக்கியே நின்றாய்! -தமிழாகி

கனியாகக் கனிந்தாய் - அறிஞர்
கருத்துள்ளே படிந்தாய்!
தனியாகப் பிறந்தாய் - இந்தத்
தாரணியிற் சிறந்தாய்! -தமிழாகி

வானாக விரிந்தாய் - என்றன்
வாழ்வாக மலர்ந்தாய்!
தேனாக இனித்தாய் - நூல்கள்
தேட்டத்தால் களித்தாய்! -தமிழாகி

ஒளியாக நிலைத்தாய் - நெஞ்ச
உரமாகத் தழைத்தாய்!
வளியாகத் திகழ்ந்தாய் - என்றன்
மூச்சோடு கலந்தாய்! -தமிழாகி

முகிலாகப் பொழிந்தாய் கவி
மழையாக வழிந்தாய்!
அகிலாக மணந்தாய் - என்றன்
ஆருயிரிற் கலந்தாய்! -தமிழாகி

# தென்கிழக்காசியாவில் தமிழர்கள்

ப. கனகலிங்கம்

தமிழரின் தாயகம் பற்றிய ஓர் ஆய்வுக்கு அடிக்கல் நாட்டியவர் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் வீ.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஆவார். அவரே ஏனையோருக்கு வழி காட்டியாகக் கொள்ளப்பட்டார். அவரது கருத்து சிலது முரண்பட்டவையாக இருந்த போதும் தமிழரின் தாயக வரலாறு குறித்த செய்திகள் பயன்பாடுடையதாக அமைந்தன. தமிழ், தமிழர் வரலாறு பற்றி உலகம் இன்னமும் முழுமையாக விளங்கிக் கொள்ள ஆர்வமில்லாது இருக்கும் சூழ்நிலையில் இராமச்சந்திர தீட்சிதரின் கருத்து ஆழமானது.

தென்னிந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் இணைத்த கடல் கொண்ட தென்னாடுதான் தமிழரின் தாயகம் என்ற பேராசிரியர் இராமச்சந்திர தீட்சிதரின் கூற்றை நோக்கி ஆய்வைத் தொடர்வோம். குமரிக் கண்டத்தில் (குமரிக் கடல்)துண்டு துண்டு நிலமாகக் கடலில் மிதக்கும் இலங்கை, பிலிப்பைன்ஸ், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, வியட்நாம், கம்பூச்சியா, மியன மார் போன்ற நாடுகள் குமரிக் கண்டத்தின் எச்சங்கள் என்பது மொழியியல் அறிஞர்களின் கோட்பாடு. இதனை நா.சி. கந்தையா அவர்களின் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழர் பண்பாடு என்னும் நூலிலும், பண்டிதர் டி. சவரி நாயன் எழுதிய The Tamilian Antiquary நூலிலும் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

அந்த வழிப்பரப்பலின் இறுதிக் கட்டமாக எழுந்து நிற்கும் தென் கிழக்காசிய நாடுகளிலிருந்தும் தமிழர் வலுக்குன்றியதை இப்போது காண்கிறோம். தமிழ், தமிழருடைய வரலாறு பற்றி எழுதுவோரும் பேசுவோரும் குமரிக் கண்டம், தென்னாடு என்று வடக்கே இமயம் சென்று சிந்துவெளியூடாக மேலை ஆரியம் (ஐரோப்பா) வரை சென்று சேர்ந்த செய்திகளைக் கூறுவர். இதற்கு ஒரு காரணமாக நமது நாடு ஐரோப்பியரின் காலனித்துவத்துக்கு உட்பட்டதனால் கூட அது நிகழ்ந்திருக்கலாம். ஆனால் அது போன்ற அல்லது அதைவிடக் காத்திரமான வரலாற்றைத் தமிழும், தமிழரும் தென்கிழக்காசியாவில் கொண்டிருக்கின்றனர் என்பது அறியப்பட வேண்டியதொன்றாகும்.

பண்டைய சுமேரியா அல்லது மொசப்பத்தேமியா வரலாற்றில் எல்-ஈழம் என்ற சந்ததியின் வரலாறு பற்றிப் பேசப்படுகிறது. இவை ஈழ மக்கள் உலகம் பூராகவும் பரந்த செய்தியையும் கூறுகிறது என நா.சி. கந்தையா தமிழர் பண்பாடு நூலில் குறிப்பிடுகிறார்.

தென்கிழக்காசியக் கடல்களில் தமிழ்க்கொடி பறந்த காலமொன்று பண்டைய தமிழர் வரலாற்றில் நிகழ்ந்தது.

அந்த வகையில் தென்கிழக்காசியாவில் தமிழரின் ஆதிக்கம் சிறப்பு வாய்ந்தது. குறிப்பாகப் பருமா (மியன்மார்) இந்தோனேசியாவின் வரலாற்றை உற்று நோக்குவோம்.

பழந்தமிழர்கள் கடலைக் கடக்கும் ஆற்றலையும் கடல் கடந்து நாடுகளை வெல்லும் வல்லமையையும் வென்ற நாடுகளை ஆளும் திறமையையும் கொண்டிருந்தனர்.

குறிப்பாகத் தென்கிழக்காசிய நாடுகளில் தமிழர்களின் கொடி உயரப் பறந்தது. அறிவிலும், வணிகத்திலும் சிறந்து விளங்கினர். தமிழ் வணிகர்களையும், துறவிகளையும், படை வீரர்களையும் ஏற்றிச் சென்ற கப்பல்கள் இந்நாடுகளில் இறக்கிவிட்டுத் திரும்பி வந்தன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிழக்காசிய நாடுகளுடன் தமிழர்கள் பண்பாடு, சமயம், வணிகம், அரசியல் போன்ற துறைகளில் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார்கள். பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, கம்போடியா, மியன்மார், லாவோஸ், மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் தமிழர்கள் அரசியல் ரீதியாகத் தொடர்புபட்டிருந்தனர்.

தென்கிழக்காசிய நாடுகளில் புத்த சமயத்தைப் பரப்பியதில் தமிழ்நாட்டுப் புத்த துறவிகள் பங்கு கணிசமானது. அதேபோன்று சைவ, வைணவ மதங்கள் பரவி சிற்பக் கலை, கட்டடக் கலை வடிவத்தில் கோவில்களும் கட்டப்பட்டன. தமிழர்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பன இன்றளவும் இந்நாடுகளில் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கடல்களில் கம்பீரமாகச் சென்ற தமிழர்களின் வணிகக் கப்பல்களுக்குச் சோழர் கடற்படை பாதுகாப்பு அளித்தது. அந்தக் காலங்களில் தென்கிழக்காசிய நாடுகளில் சீனா உள்ளிட்ட வேறு எந்த நாட்டிலும் சோழர் கடற்படைக்கு இணையான கடற்படை இருக்கவில்லை. இதனால் அங்கு அரசியல், சமயம், பண்பாடு, வணிகம் போன்றவற்றில் ஆதிக்கம் செலுத்தினர். பல்லவர், சோழர், பாண்டியர் ஆகிய தமிழ் வேந்தர் குலங்களைச் சேர்ந்தவர்கள் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் ஆட்சிபுரிவதற்கு நியமிக்கப்பட்டனர். (இது ஆங்கில ஆட்சியில் கவர்னர் போன்றது) இவர்களின் வழித்தோன்றல்கள் பல ஆண்டுகளாக ஆட்சி புரிந்தனர். இவர்களுக்கு உறுதுணையாகத் தமிழ்நாட்டு மன்னர்கள் திகழ்ந்தார்கள்.

பிற்காலச் சோழர், பாண்டியர் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண

டதால் இரு குலத்தாரும் பலவீனமடைந்தனர். இதன் விளைவாக அந்நியர் எட்டிப்பார்க்க அஞ்சிய தமிழகத் தில் விஜயநகரத்து நாயக்கர்களும், மராட்டியர்களும் நவாப்புகளும் உள்ளே புகுந்து தமிழகத்தைக் கைப் பற்றினர்.

தமிழ்நாட்டில் மன்னர் குலங்கள் வலிமையற்றுப் போனதால் தென் கிழக்காசிய நாடுகளில் இருந்த தமிழர் அரசுகள் துணையற்றுப் போயின. இதனைப் பயன் படுத்திய இஸ்லாமிய நுழைவும் இதனைத் தொடர்ந்து சீனா செல்வாக்குப் பெற்றதும் அதைத் தொடர்ந்து ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்பும் ஏற்பட்டுவிட்டன. அத்தோடு இந்நாடுகளுக்குத் தமிழகத்தோடு இருந்த உறவு முற்றிலுமாக அறுந்துபோனது.

தமிழ்நாடு வேற்றினத்தாரிடம் வீழாமல் இருந் திருக்குமானால் தென் கிழக்காசியாவில் தமிழர் அரசுகள் இன்றளவில் நிலைத்திருக்கும். தென்கிழக்காசிய நாடு களில் தமிழர்களின் கொடி பறந்த காலம் போய் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதே தென்கிழக்கா சிய நாடுகளுக்குக் கப்பல் கப்பலாகத் தமிழர்கள் அடிமைகளாக ஏற்றப்பட்டனர்.

தமிழர் முற்காலத்தில் எந்தெந்த நாடுகளில் குடி யேறி ஆண்டார்களோ அங்கெல்லாம் அடிமைச் சேவகம் புரிய தமிழகத்தில் இருந்து ஆங்கிலேயர் கொண்டு சென்ற தமிழர்கள் இப்போது அரசியல் அநாதைகளாகி, மொழி இழந்து, பண்பாடு இழந்து, முகவரியற்று வாழும் இழிவு நிலை ஏற்பட்டுள்ளது. இங்கே குறிப் பிட்டுச் சொல்ல வேண்டும். தென்னாட்டில் இருந்து மட்டுமல்ல ஈழத்தில் இருந்தும் தென் கிழக்காசிய நாடு களுக்குச் சென்ற தமிழர்கள் அங்கு மதம், வாணிகம் போன்றவை தழைக்க உழைத்ததோடு அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தினர் என்பதை அறிய முடிகிறது.

பருமா இப்போது மியன்மார் என்று அழைக்கப் படும்போதும் இதன் முற்காலத்துப் பெயர் ''மாறன்மா தேயம்'' எனத் திரு. கனகசபை அவர்கள் குறிப்பிடு கிறார். கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் மாறன் என்ற பெயருடைய பாண்டியகுல வேந்தன் மியன்மாரை ஆண்டுள்ளான். மாறன்மார்கள் ஆண்டதால் ''பாளி மொழியில்'' மாறன்மாதேசம் என்று பெயர் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். மாறன்மா என்ற பெயரே இப்போது மியன்மா என மருவி வழங்கப்படுவதாகக் குறிப்பிடு கின்றனர்.

தென்கிழக்காசியாவிலுள்ள பல நாடுகளில் தமி ழரின் பெருமையை நிலைநாட்டும் கல்வெட்டுகள் அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்து வருகின்றன. பருமிய மக்களால் போற்றப்படும் அநுராத மன்னன் தமிழனே என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின் றனர். இவனே பருமாவை ஆண்ட முதல் மன்னன் ஆவான். இது போன்று பருமிய வரலாற்றில் தமிழ் அரசர்களின் சிறப்புப் பற்றி விதந்து போற்றுகிறார் வரலாற்றாசிரியரான நீலகண்ட சாத்திரியார்.

மியன்மா எழுத்துகளில் 33 உயிர் எழுத்துகள் இருக்கின்றன. அவற்றுள் மிகுதியான எழுத்துகள் அப்படியே தமிழ் எழுத்துகள் என்று கூறப்படுகின்றன. அந்த 33 மியன்மா உயிர் எழுத்துகளுமே தமிழ் உயிர் எழுத்துகளின் ஒலியையே கொண்டிருக்கின்றன என்ப தும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் எழுத்துகளை வட்டவடிவமாக எழுதுவது போல மியன்மாவிலும் அதே உரு மாறாது எழுதுகின் றனர். எடுத்துக்காட்டாகத் தமிழில் ய-ர-ல என்ற எழுத்து களை உரு மாறாமல் ஒலியும் மாறாமல் எழுத்தும் உச் சரிப்பும் இடம் பெறுகின்றன. இதேபோன்று மொழி யிலும், எழுத்திலும், உச்சரிப்பிலும் தமிழ் வியாபித்து நிற்கின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர் படையெடுப்பிலும் அதன் பின் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்திலும் தமிழர்கள் சென்று குடியேறினர்.

1900களில் பருமாவில் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர் குடியேறினர். பத்தொன்பதாம் நூற் றாண்டின் முதல் கால் பகுதியில் ''பருமா தலைநகர் யங்கூன் (ரங்கூன்) ஒரு கிராமமாக இருந்தது. அங்குச் சுமார் பத்தாயிரத்துக்குக் குறைவான மக்களே இருந்த னர். தமிழர்களின் குடியேற்றம் காரணமாக ''யங்கூன்'' நகரமாகியது. பருமா தலைநகரின் மக்கள் தொகையில் 40 சதவிகிதம் தமிழராக இருந்தனர்.

1958 ஆம் ஆண்டில் பருமிய அரசு கொண்டு வந்த நிலச் சட்டங்கள் காரணமாகத் தமிழர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளானார்கள். இதன் மூலம் தமிழருக் கிருந்த நில உரிமை, சொத்துரிமை, வாரிசுரிமை போன்ற அனைத்தும் பறிக்கப்பட்டு நிர்க்கதியாகினர்.

ஏற்கெனவே இரண்டாம் உலக மா போரின் போது யப்பானியர் பருமாவைக் கைப்பற்றினர். அதன் போது பருமியர் தமிழர் மீது வன்முறைகளைத் தூண்டி விட்டு விரட்டியடித்தனர். அப்போது ரங்கூனை விட்டு ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் உடுக்கக்கூட உடையின்றி வெளியேறினர்.

அடுத்துச் சாவகத்தை எடுத்துப் பார்த்தால் இன் றைய இந்தோனேசியாவைப் பண்டைய தமிழர்

புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி பரிசளிப்பு விழா 30-12-2007 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

''சாவகம்'' என்றே அழைத்தனர். அதுவே மருவி ஜாவா என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்டது.

முதலாம் சங்க காலத்தில் இரண்டாவது வேந்த னாகக் கருதப்படும் ''ஆழி வடிவலம்ப நின்ற நெடி யோன்'' என்ற பாண்டிய மன்னன் கடலில் கலம் செலுத்திப் பல நாடுகளைக் கண்டுபிடித்து வென்று கையகப்படுத்தினான் என்றும் அவ்வூர்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் நினைவாகக் கடற்கரையிலுள்ள பாறைகளில் தன் அடிச்சுவடுகளைப் பொறித்து அவற்றைக் கடல் நீர் அலை அலம்பிச் செல்லுமாறு செய்துள்ளான். இதனால் இவனுக்கு ''ஆழி வடிவலம்ப நின்ற நெடியோன்'' என்ற பெயர் நிலைக்கத் தக்க வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசியா பதின்மூவாயிரத்துக்கு மேற்பட்ட தீவுக் கூட்டங்களைக் கொண்டனவாக இருந்தபோதும் சுமத்திரா, ஜாவா போன்றவையே பழம் நாகரிகத்தின் இருப்பிடமாகவுள்ளது. சுமத்திரா என்னும் பெருந்தீவு பழந்தமிழர் காலத்தில் நன்மதுரை என்றே அழைக்கப் பெற்றது. பின்னாளில் நல்ல என்ற பொருள் தரும் சு. இணைக்கப்பெற்று சுமத்திரா ஆனது. அராபியர் இதனைக் கிலாமுரி தேசம் என்று குறிப்பிடுகின்றனர். கிலாமுரி என்பது ''லெமூரி'' என்ற சொல்லேயாகும்.

பண்டைக் காலத்தில் நன்மதுரை, சாலியூர் (ஜாவா) போன்ற நாடுகளில் பாண்டியர் அரசுரிமை பெற்றிருந்த னர் என்பதும் இப்போதும் பெறப்படும் செய்திகளில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

சுமத்திராவில் வாழும் மக்களிடையே இன்றள வும் வழங்கும் குடிப்பெயர்கள் தென்னிந்தியப் பெயர் களை ஒத்ததாக இருக்கிறது. இப்பழங்குடி மக்களின் குமுகாய அமைப்பு தொல்பழங்காலம் முதல் நின்று நிலவி வருவனவாகும். இப்பெயர்களைக் கொண்டோர் தென்னிந்தியாவில் பேராற்றலும், பெருமதிப்புமுடைய வர்களாக விளங்கிய காலத்தில் இந்நாட்டு மக்களால் விருப்பத்தோடு கொண்டு வரப்பட்டவையாக இருக்க வேண்டுமென்பர். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார், வடசுமத்திராவில் வாழும் படாக்குப் பழங்குடி மக்களி டத்து இன்றும் சேர, சோழ, பாண்டிய, பல்லவர் எனும் தமிழ்க்குடிப் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

தமிழகத்தைச் சேர்ந்த பாண்டிய மன்னர்கள் சிவ பெருமானுடைய மரபிலே வந்தவர்கள் என்று உரிமை கொண்டாடியவர்களாவர். சாவக அரசர்கள் ''மீனங்கித சைலேந்திரா'' என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டு ஆண்டனர் என்றும் அவர்களது கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. சைலம் என்ற வடமொழிச் சொல் லிற்கு மலை என்ற பொருளும் இந்திரர் என்ற சொல்லிற்குத் தலைவர், அரசர் எனப் பொருள் கொள்ள லாம். மீனங்கித என்பதற்கு மீனினை இலச்சினையாக உடைய என்பது பொருளாகும். எனவே அத்தொடருக்கு மீனினை இலச்சினையாகவுடைய மலைகளின் தலைவர் என்பது பொருளாக இருக்க வேண்டும்.

பாண்டிய வேந்தர்களின் கொடியில் எப்பொழு தும் இரட்டைக் கயல் மீன் சின்னமாக இருந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. தென்கிழக்காசியாவை ஆட்சி புரிந்த சைலேந்திரர்களுக்குக் கயல் மீன் சின்னமாக இருந்தமை ஒப்புநோக்கத்தக்கது. எனவே ''சைலேந்தி ரர்'' குலம் தென்னாட்டிலே தோன்றியிருக்க வேண்டு மெனப் பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் வலி யுறுத்துகிறார்.

இது போன்றே இந்தோனேசியாவிற்கு அருகில் உள்ள போனியா, பவுவா, நியூகினியா போன்ற நாடு களின் பழங்குடிகளும் தமிழரே என சாத்திரியார் நிறுவு கிறார். நியூகினியாவிலிருந்து சாலி (Java)க்கும், சாலியி லிருந்து தமிழ் நாட்டுக்கு கரும்பும் கொண்டு செல்லப் பட்டுள்ள செய்தியை ஔவையார் பாடுவது புறநானூற் றில் வருகிறது.

இதனிடையே சாவகத்தில் தமிழர்கள் பொன் எடுத்த செய்தியையும் இலக்கியங்கள் குறிப்பிடுகின் றன. புறநானூற்றில் சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய எருங்காட்டூர்த் தாயங் கண்ணனார்.

''வலம்படு தீவிற் பொலிம் பூண்வளவன்'' என்று பாடுகிறார். வலம்படு தீவு என்பது சாவகத்தைக் குறிக் கிறது. இக்கலப்பகுதியில் சாவகத்தைத் தேவர் கோன் (அரசன்) என்ற தமிழ் வேந்தன் ஆண்டான் என அறியப் படுகிறது.

இதுபோன்று தென்கிழக்காசியாவின் ஏனைய நாடுகளிலும் தமிழர் செலுத்திய அரசியல், மதம், பண்பாடு, சமூகவியல் போன்றன நோக்கத்தக்கது.

இக்கட்டுரைக்குக் கீழ்வரும் நூல்கள் உசாத் துணைக்குப் பயன்படுத்தப்பட்டன.


1. *அறிஞர் பாவாணரின் ''தமிழர் வரலாறு''*
2. *பழ. நெடுமாறனின் ''பழந்தமிழர் பரவிய நாடுகள்''*
3. *அறிஞர் டீ.ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் ''தமிழரின் தோற்றமும் பரவலும்''*


*


**சுடரொளி வெளியீட்டுக் கழகப் பதிப்பாக விரைவில் வெளிவர உள்ளது**

நாடாளுமன்ற உறுப்பினர் **தியாகராசா மகேஸ்வரன் அரசியல் வாழ்வு** எனும் நூல். நாடாளுமன்றத்தில் ஒலித்த தமிழர் பிரச்சினைகளின் தொகுப்பாக உருவாகி வருகிறது.

தொகுப்பாசிரியர் ஐதி. சம்பந்தன்

தொடர்பு : I.T. Sampnthan
Chuderoli Publication Society
15 Rutland Road, London E7 8PQ

# தனித் தமிழீழம் தவிர வேறெதுவுமில்லை

## தந்தை செல்வா

*(முதறிஞர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்களின் 130ஆவது பிறந்த நாள் நினைவாக திரு. சபாரத்தினம் அவர்கள் எழுதிய ''தந்தை செல்வா - ஓர் அரசியல் வாழ்க்கை சரிதை'' நூலிலிருந்து...)*

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்பு தமிழ் மக்களுக்கென வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் தமிழ் ஈழத்தை அமைப்பது பற்றியே தந்தை செல்வா பேசத் தொடங்கினார். 1976 நவம்பர் மாதத்தில் திருகோண மலையில் தந்தை இவ்வாறு பேசினார்:

எனக்கு இப்போது வயது 78 ஆகிவிட்டது. நான் இன்னும் கனகாலம் இருப்பது ஐமிச்சம். ஆனால், சாகு முன்பு தமிழினத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்து விட்டுச் சாக விரும்புகிறேன்.

தாயைப் போல் நீண்ட வயது வரை வாழ விரும்பியவர் 1976 பிற்பகுதியில் தன் உடல் பலம் குன்றி வருவதை உணர்ந்துவிட்டார். நாடாளுமன்றத்தில் 1976 நவம்பர் 19 இல் தமிழர் பிரச்சினை பற்றித் தந்தை பேசினார். அதுவே, அவரின் நாடாளுமன்றக் கடைசிப் பேச்சாக அமைந்துவிட்டது. அதில் அவர் சொன்னது இதுதான்:

தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்கு நாங்கள் ஒரு காலத்தில் சமஷ்டி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால், சமஷ்டி மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப் படாது என்பதைக் கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது உணர்ந்துகொண்டு விட்டோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழவேண்டியதுதான் சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யா விட்டால், தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒரு போதும் மீட்டுக் கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்த னர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத் திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஒரு தனியிடம் இருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமை யான இராச்சியத்தை மீள அமைக்கவேண்டும் என்பதே எங்கள் நிலையாகும். தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறு கிறது.

தனித் தமிழ் ஈழம் நிறுவுவது இலகுவான காரிய மல்ல என்பதும் மிகவும் கஷ்டமானது என்பதும் எங் களுக்குத் தெரியும். ஆனால் நாம் சிங்களவரின் அதி காரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும் அல்லது அழிந்து போக வேண்டும். எனவே, நாங்கள் போராடித் தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம். நாங்கள் சமஷ்டிக் கோரிக்கையைக் கை விட்டு விட்டோம். எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அகிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.

1976 திசம்பர் மாதத்தில் வெளிநாட்டுப் பத்திரி கையாளர் சிலருடன் தந்தை செல்வாவைச் சந்தித்தேன். தனித் தமிழ் ஈழக் கோரிக்கை பற்றியே வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தந்தையைப் பேட்டி கண்டனர். அப்பேட்டி சம்பந்தமான என் குறிப்புப் புத்தகத்தி லிருந்து இவற்றைத் தருகிறேன்.

*கேள்வி : நீங்கள் சமஷ்டியில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் அயராத நம்பிக்கை வைத்திருந்தீர்கள். சமஷ்டி ஆட்சி முறைக்கு இணங்க சிங்கள மக்கள் முன்வராததனால்தான் தனித் தமிழ் ஈழக்கோரிக்கையை முன் வைக்கின்றீர்கள். இந்தக் கட்டத்திலாவது சமஷ்டி அமைப்பை இலங்கையில் நிறுவச் சிங்களத் தலைவர்கள் இணங்கினால் அதை ஏற்றுக் கொள்ள முன் வருவீர்களா?*

**தந்தை செல்வா** : இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது என்பது என் அசையாத நம்பிக்கை. அதை அடைவதற்கு முதலில் போராட்டம் நடத்தினேன். பின்பு சிங்கள அரசியல்வாதிகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் சமஷ்டி ஆட்சி முறையை அமைக்கத் திட்ட மிட்டோம். சமஷ்டி ஆட்சிக்கான அடிப்படையை அமைப்பதற்காக எவ்வளவு தூரம் இறங்க முடியுமோ அவ்வளவு தூரம் இறங்கினோம். அதைத் தருவதற்குக் கூட சிங்களத் தலைமைப் பீடத்திற்கு அரசியல் விருப்போ துணிவோ இல்லை. இந்த நிலையில் தனித் தமிழ் ஈழத்தைக் கோருவதைத் தவிர எமக்கு வழியெது வும் இல்லை. தனித் தமிழ் ஈழத்துக்கான போராட்டம் மிகவும் நீண்டதாகவும் கஷ்டமானதாகவும் இருக்கும் என்பதை நாம் உணருகிறோம். அந்த நீண்ட போராட் டத்தின்போது சிங்களத் தலைவர்கள் சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவது பற்றிய ஓர் இணக்கத்துக்கு எம்மோடு வரின் நாம் அதை ஏற்கத் தயாராக இருப்போம் என்றே நினைக்கிறேன்.

*கேள்வி : உங்கள் பாராளுமன்றப் பேச்சில் தனித் தமிழ் ஈழத்துக்கான உங்கள் போராட்டம் அகிம்சை அடிப்படை யிலேயே நடைபெறும் என உறுதியாகக் கூறியுள்ளீர்கள். ஆயுதப் போராட்டத்தைச் சில தமிழ் வாலிபர்கள் தொடங்கி யுள்ளனரே அது பற்றிய உங்கள் கருத்து என்ன?*

**தந்தை செல்வா** : தமிழ்ச் சமூகம் அதிருப்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுவிட்டது. அதனால்தான் உணர்ச்சி மிக்க சில இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கி உள்ளனர். ஆயுதங்கள் அழிவுக் கருவிகள், ஆயுதத்தைத் தூக்கியவருக்கும் அது அழிவை கொடுக்கும். அகிம்சை அப்படியானதல்ல. போராடுபவர்களின் தார்மீக உணர்வை வளர்க்கும். போராடுவோரை ஆளவோ, அடக்கவோ

முடியாத நிலைமையை ஆளவும் அடக்கவும் முயல்வோருக்கு ஏற்படுத்தும். அகிம்சைப் பாதையில்தான் எம் போராட்டம் அமையும். அதிலிருந்து சற்றும் விலக மாட்டோம்.

*கேள்வி : தனித் தமிழ் ஈழப் போராட்டத்தை நடத்தத் தயாராகிறீர்களா?*

**தந்தை செல்வா** : உரிமைப் போராட்டம் என்பது வெறும் வெற்றிடத்தில் நடத்தப்படுவதல்ல. மக்கள் சமுதாயத்தில் நடப்பது. எனவே, அகிம்சைப் பேராட்டத்தைத் தொடங்குவோர் சமுதாயத்தில் நிலவும் அரசியல் சூழலைக் கணக்கில் எடுக்க வேண்டும். அடுத்த ஆண்டில் (1977) தேர்தல் நடக்கவிருப்பது உங்களுக்குத் தெரியும். தேர்தல் வரும் சமயத்தில் நாங்கள் போராட்டத்தைத் தொடங்குவது நல்லதல்ல. சிங்களத் தீவிர வாதத்தைப் பலப்படுத்த அது உதவும். தேர்தல் முடிந்த பின் புதிய அரசாங்கத்தின் போக்கையும் கணக்கில் எடுத்துத்தான் எமது அகிம்சைப் போராட்டத்தைத் தொடங்குவோம்.

தேர்தல் 1977 ஜூலையில் வந்தது. தந்தை ஏப்பிரலிலேயே போய்விட்டார்.

*

## கண்டதும் உண்டதும்

இலண்டன் சுடரொளி தரமாக வந்து கொண்டிருக்கிறது. நல்ல தமிழ் நடை, உயிரோட்டமான தொடர்கள், நெஞ்சத்தை உறையவைக்கும் நேசமிகு கதைகள், சிந்திக்கத் தூண்டும் சிந்தனைப் பகுதி, வண்ணப் புகைப் படங்கள், மனிதனை வளப்படுத்தும் வாழ்வியல் வழிகாட்டி என பயனுள்ள பல பகுதிகள். ''மெல்லத் தமிழினி வாழும்'' என்பதற்கு ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன், உழைப்புச் செம்மல், இரா. மதிவாணன் போன்றோரின் சீரிய பணியே எடுத்துக் காட்டாகும் என்று மனநிறைவுடன் பாராட்டுகிறேன்.

கவியரசர் கண்ணதாசன் பாடல்களில் பக்தி நெறி நூல் நயவுரை வெளியிட்டுச் சிறப்பு செய்தமைக்கு எம் நன்றியை உரித்தாக்குகிறேன்.

**புலவர் கே.கோ. விஜயலெட்சுமி,**
எம்.ஏ., எம்.ஃபில்., சென்னை

உண்மைதான் நண்பரே... தங்களின் உள்ளக் குமுறல் உலகெங்கும் எதிரொலிக்கட்டும். தமிழர்களே வாழ்வளிக்கும் நாட்டை வணங்குங்கள். அந்நாட்டுச் சட்ட, திட்டங்களை மதித்து நடந்துகொள்ளுங்கள். தாய்நாட்டுச் சாதி மத சாத்திரக் குப்பைகளை வாழும் நாட்டில் கொட்டி மாசு படுத்தாதீர்கள். எச்சில் துப்பும் இடங்களிலும் சிறுநீர் கழிக்கும் இடங்களிலும் கோயில் கட்டிக் குழப்பம் உண்டாக்காதீர்கள். தமிழா... நீ ஒருபோதும் இந்து அல்லன். இல்லாத ஒன்றில் (மதம்) நீ எப்படி இருக்கமுடியும்... வேண்டாம் விட்டு விடு. உழைத்து முன்னேறு. உலகளக்கும் நீ ஏய்த்துப் பிழைப்பவனுக்கு இடம் கொடுக்காதே.

**களப்பாள்குமரன்**

உலகத் தமிழர் மையப் பொதுச் செயலாளர்

## இரா. மதிவாணனுக்குச் "செந்தமிழ்த் தேனீ" விருது அளிப்பு

கடந்த பத்து ஆண்டுகளாகத் திருக்குறள் நெறி பரப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற திருக்குறள் பேரவை, உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளரும், இலண்டன் சுடரொளி இதழின் பதிப்பாசிரியருமான இரா. மதிவாணன் அவர்களுக்குச் ''செந்தமிழ்த் தேனீ'' விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

1330 திருக்குறளையும் மனனம் செய்து ஒப்புவிக்கும் (முற்றோதல்) சிறுவர் சிறுமிகளைப் பாராட்டியும், வள்ளுவம் தொடர்பான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா முதலானவற்றை நடத்தி அவற்றில் வெற்றி பெறும் மாணவர்களுக்குப் பரிசளித்தும், தமிழுக்கும் குறளுக்கும் துறைதோறும் தொண்டாற்றும் சான்றோர் பெருமக்களை இனம் கண்டு விருது அளித்துப் பாராட்டியும் திருக்குறள் நெறி பரப்பும் பணிகளைத் திருக்குறள் பேரவை தொடர்ந்து செய்து வருகிறது. மேலும் மாதந்தோறும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் இலக்கியக் கூட்டம் நடத்தியும் வருகிறது.

அந்த வகையில் பேரவையின் 10ஆவது ஆண்டுத் தொடக்கவிழாவும் 100 ஆவது மாதாந்திர விழாவும் 27-1-08 அன்று திருவள்ளுவர் தினச் சிறப்பு விழாவாகப் பேரவைத் தலைவர் இளங்கோவன் தலைமையில் குரோம்பேட்டையில் நடைபெற்றது. ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பிச்சை முதலியார் எழுதியுள்ள 'சிந்தனைச் சுடர் நூலில் திருக்குறளின் தாக்கம்' என்னும் தலைப்பில் அறிவியல் அறிஞர் அ. பாலகிருஷ்ணன் திறனாய்வுரை நிகழ்த்தினார். முன்னதாக புலவர் கு. கணபதி வரவேற்புரை நல்க, இறுதியில் நூலாசிரியர் பிச்சை முதலியார் அவர்களும், விருதுபெற்ற இரா. மதிவாணன் அவர்களும் ஏற்புரை நல்கினர். இறைமறைதாசன் அவர்களின் நன்றியுரைக்குப் பின் சிற்றுண்டி வழங்கலோடு விழா நிறைவுற்றது.

பெரும்புலவர் வீராசாமி, ச. சீனிவாசன், ந. கருணாநிதி, புலவர் அரசு, கவிஞர் நெல்லை இராமச்சந்திரன், பேராசிரியர் ஏசுதாசன், திருமதி விஜயலட்சுமி உள்ளிட்ட திரளான இலக்கிய ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

## தமிழ் அமுதம் காலாண்டுச் சஞ்சிகை வெளியீட்டு விழா

**22-3-08 மாலை 5.30 மணி**

உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையக் கருத்தரங்கு
தமிழ் அமுதத்தை அள்ளிப் பருக
அலைகடலென ஆர்வத்தோடு வருக!
தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம்
சிங்கப்பூர்த் தமிழர் சங்கம்

# வவுனியா மாவட்ட
# வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமும் பணிகளும்

வலுவிழந்தாலும் சமுதாயத்திற்குப் பணிசெய்ய முடியுமென்பதை நிரூபித்துக்காட்டியவர் திரு. வெள்ளையன் சுப்பிரமணியம் அவர்கள். வவுனியா மாவட்டத்திலுள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் திரு. வெள்ளையன் சுப்பிரமணியம் அவர்கள் தமது அமைப்புத் தொடர்பான பணிகளையும் வேலைத் திட்டங்களையும் புலம் பெயர் தமிழர்களுக்கு எடுத்துக் கூறுவதற்காகவும் அதற்கு உதவுபவர்களைச் சந்தித்து உரையாடுவதற்காகவும் அண்மையில் இலண்டன் வந்திருந்தார்.

அந்த மதிப்புக்குரிய சமூகப் பணியாளரை வெம்பிளியிலுள்ள சிறீகாந்தா அன்கோ சட்டத்தரணி நிறுவனத்தில் சந்திப்பதற்கான வாய்ப்பை சட்டத்தரணி சிறீ காந்தலிங்கம் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அவ்வலுவலகத்தின் ஓர் அறையிலிருந்து திரு. வெள்ளையன் சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து உரையாடுவதற்கான வசதியையும் திரு. சிறீ காந்தலிங்கம் ஏற்பாடு செய்து தந்தார். மிகக் கம்பீரமாகக் காட்சியளித்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் எம்.ஜி.ஆர். போல் ஒரு கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தார். அவ்வாறு ஏன் அணிந்திருக்கிறார் என்று வினவியபோதுதான் கண்விழி இழந்தவர் என்பதை அறிந்து கொண்டேன். வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு ஒரு வலுவிழந்தோர் தான் தலைவராக இருக்கவேண்டுமா? அந்தப் பணியை எவ்வாறு திறம்படச் செய்கிறீர்கள் என்று கேட்டேன்.

சாதாரண மனிதனாக வாழ்ந்த அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் காலத்தில் அவர்மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் விழிப்புலனை முற்றாக இழந்தார். வலுவிழப்பு என்பது எந்த நேரத்திலும் யாருக்கும் வரலாம். அதற்காக மனம் தளரக்கூடாது என்ற தன்னம்பிக்கை கொண்டவர். வலுவிழந்தாலும் அதைத்தாங்கிக் கொள்ளவேண்டும் என்று உறுதியாகக் கூறினார். அதை எதிர்கொண்டு வாழ்க்கையில் முன்னேறவேண்டும். இதுவே தனது மன உறுதி என்றார்.

திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு 24 வயதில் வலு இழப்பு ஏற்பட்டது. இப்பொழுது அவரது வயது 53 ஆகும். வலு இழப்பு ஏற்பட்டபோது மூன்றுமாதம் மருத்துவ சிகிச்சை பெற்றதாகக் குறிப்பிட்டார்.

பின்னர் நபீல்ட பாடசாலையில் பிறேயில் முறையைக் கற்றுக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் படிப்பைத் தொடர்ந்தார். பட்டதாரியானார். அதன் பின் யாழ் பிரியோவான் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

விழிப்புலனற்ற மங்களராணி (கிறிஸ்தோப்பர்) பிறப்பிலேயே வழிப்புலனற்றவர். இவரும் யாழ்



பல்கலைக்கழகப் பட்டதாரி. இவரையே தனது துணைவியாகத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரு பிள்ளைகள் உண்டு. இவரது மனைவியார் மங்களராணி இரு வருடங்களுக்கு முன்னர்க் காலமாகிவிட்டார். இந்த இழப்பின் மத்தியில் இழப்புகளையிட்டு மனம் தளர்ந்துவிடாது முழுநேர ஆசிரியர் பணி, குடும்பச் சுமை, இவற்றிடையே விழிப்புலனற்றவர்கள், செவிப்புலனற்றவர்கள், மனவளர்ச்சி குன்றிய சிறார்கள் போன்ற அனைவருக்கும் Organ அமைப்புமூலம் சிறந்த சேவை ஆற்றிவருபவர் திரு. வெள்ளையன் சுப்பிரமணியம் அவர்கள்.

அவரது மனோ வலிமையையும், வலுவிழந்தோர் மீது அவர் கொண்டிருக்கும் காருண்ய சிந்தனைகளையும் அவருடன் உரையாடியபோது அறிந்து வியப்படைந்தேன். அவர் ஒரு அற்புத மனிதர் என்றே கூறலாம்.

ஆண்டவனால் சகல வல்லமையும் கொடுக்கப்பட்ட எம்மவர்களில் பலர் வசதி வாய்ப்புடன் இருந்தும் எத்தகைய சேவையும் செய்யமுன்வராத நிலையில் கண் பார்வை இழந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஆற்றி வரும் பணிகளை அறிந்து பெருமைப்பட்டேன். இவர் இலண்டனுக்கு வந்தபடியால் நேரடியாகப் பல தகவல்களைப் பெறக்கூடியதாகவிருந்தது. போர்ச் சூழல் நிறைந்துள்ள வவுனியா எல்லையில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் ''புதுவாழ்வுப் பூங்கா'' ஆகியன எவ்வாறு செயற்படுகிறது என்பதையும் அதன் வேலைத் திட்டங்களையும் புலம்பெயர் தமிழர்கள் அறிந்துகொள்ள முடிந்தது. அந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த இலண்டன் Organ அமைப்பின் இணைப்பாளர் சட்டத்தரணி சிறீ. காந்தலிங்கம் அவர்களும் செயற்குழுவினரும் பாராட்டிற்குரியவர்கள்.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் இலண்டனிலுள்ள ஊடகங்கள் மூலம் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் பணிகளை வெளிப்படுத்தியுள்ளார்,

நாட்டில் நடைபெறும் போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டு அல்லல் படுவோர் பலவகையினர். போர்க்காலச்



சூழலில் வலுவிழந்தோர் தொகை அதிகரித்து வரு கிறது. பிறப்பால் எவ்விதக் குறையுமின்றிப் பிறப்பவர்கள் கூட, எதிர்பாராதவிதமாக வலுவிழந்தோராக மாறும் நிலை ஏற்படுகிறது. நாட்டில் நடைபெறும் போரினால் மக்கள் அவயங்கள் இழப்பதும், மனநிலை பாதிக்கப் படுவதும் பன்மடங்காக அதிகரிக்கப்படுகிறது.

போரின் பாதிப்பினால் அங்குப் பிறக்கும் குழந்தைகளின் மன நிலை பாதிப்புக்குள்ளாவதும் நேர் கின்ற அவலங்களாகும்.

இவ்வாறான வலுவிழந்தோரின் நல்வாழ்வுக்காக 1999இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் நிறுவனமாகும். அது ஓர் அரசு சார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கத்தின் உதவி பெருமளவு கிடைப்ப தில்லை. சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள். சர்வ தேச அபிவிருத்தி அமைப்புகள், ஆகியவற்றின் உதவி யுடன் அதன் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வரு வதாகத் திரு. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

மனவளர்ச்சியற்றவர்களுக்குப் பயிற்சியளிக்கும் ''புதுவாழ்வுப் பூங்கா'' திட்டத்திற்கு ஐக்கிய இராச்சி யத்தில் இயங்கிவரும் Orhan (UK) அமைப்பே தேவை யான உதவிகளை வழங்கிவருகிறது. இலண்டனிலுள்ள Scan, Miot போன்ற தமிழர் அமைப்புகளும் சிறிய அளவு உதவிகளை வழங்கிவருகின்றன.

இப்பூங்காவில் மனவளர்ச்சி குன்றிய 52 பிள்ளை களுக்குப் பயிற்சியளித்து வருகின்றனர். மேலதிக தொண்டர்களும் பணியாளர்களும் அமர்த்தப்படவேண் டும். 15 பேர் கொண்ட குழுவினால் புனர்வாழ்வு நிறு வனத்தின் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பண்டாரிக்குளம், தவசிக்குளம் ஆகிய இடங்களில் நிரந் தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஓகன் வவுனியா நிறுவனம் நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு வேலைத்திட்டங்களில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான ''புதுவாழ்வுப் பூங்கா'' என் னும் பயிற்சி நிலையம் முக்கியமான ஒன்றாகும். இந் நிலையம் பிரித்தானிய நாட்டிலுள்ள ஓகன் சிறீலங்கா அமைப்பின் நிதி உதவியுடன் 2004ஆம் ஆண்டு தொடக்கம் நடத்தப்பட்டுவருகிறது. இத்திட்டம் ஆரம்பிக் கப்பட்டதும் எதிர்பாராதவிதமாகப் பயனாளிகளின் தொகை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இதை நிருவகிப்பவர்களும் பணியாற்றுபவர்களும் வெற்றிகர மாக அத்திட்டத்தை நடைமுறைப்படுத்திவருவதாகத் திரு. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்கள்.

சட்டத்தரணி திரு. சிறீகாந்தலிங்கம் அவர்களின் தலைமையில் இலண்டனில் இயங்கிவரும் ஓகன் அமைப்பினர் வழங்கிவரும் உதவிகளினாலேயே ''புது வாழ்வுப் பூங்கா'' சிறப்பாக இயங்கிவருகிறது. மேலும் புலம்பெயர் தமிழர்களும் தமிழ் அமைப்புகளும் இந்த அமைப்புடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்கு மாறு ஒரு பணிவான வேண்டுகோளைத் திரு. சுப்பிர மணியம் விடுத்துள்ளார். இறுதியாக அவர் கூறியது ''வலுவிழப்பு ஏற்பட்டுவிட்டால் சோர்ந்து போய்விடாதீர் கள். வலுவிழந்தவர்களுக்கு அனுதாபம் காட்டாதீர்கள். அவர்களுக்கு உணர்வு கலந்த ஆதரவை வழங்குங்கள் எனச் சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறேன். வலுவிழந்த வர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுங்கள். அவர்கள் சாதித்துக் காட்டுவார்கள்'' என்றார் திரு. சுப்பிரமணியம் அவர்கள். நலன்விரும்பிகள் இந்த அமைப்பின் பணி களுக்கு உதவலாம்.

Organisation for Rehabilitation of the Handicapped, No. 95/34-F, 1st Lane, Sooriyappar Road, Vavuniya, Sri Lanka. Tel: +94-24-5670088 E-mail: infor@orhanlk.org. *


அனைத்து வயதினருக்குமான
பல், வாய் சம்பந்தமான
வியாதிகளுக்கும் சிகிச்சைகள்
செய்யப்படும்

பிரபல பல் வைத்திய நிபுணர்
டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

முரசு கரைதலை நிறுத்துதல்
பல் வேர்களை அடைத்தல்
அழகுபடுத்தும் பல் சிகிச்சை
முதியோர் பல் பராமரிப்பு
கிளிப் போடுதல்
பற்களை வெண்மையாக்கல்
ஞானப்பல் எடுத்தல், கட்டுப்பற்கள்
பவுண்பல் கட்டுதல்
நிரந்தரமான செயற்கைப்பற்கள்
குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
வாய் துர்நாற்றம் அகற்றல்
பல் அடைத்தல்

Warden & Sheppard சந்திப்பில்
வாரத்தில் 7 நாட்களும் சேவை
2191 Warden Avenue,
Suite 300, Scarborough



# AKILAN ENTERPRISES

**Come and meet Guruji, the Chief Tribal Adivasi Herbal Medical practitioner and get relief from all kinds of diseases. Illness diagnoised only by pulse reading. Giving wonderful natural herbal treatment.**

**Also Herbal Treatment for more than 360 kinds diseases without any side effects**

| | | |
|---|---|---|
| Asthma | Menstrual Problem | Paralysis |
| Allergy | Ulcer | Neuropathy |
| Diabetes | Dermatitis | Leprosy |
| Arthritis (Joint pain) | Kidney Failure | Piles |
| Fear | Heart Failure | Kidney Stone |
| Memory Loss | Cancer | Hair Fall |
| Blood Allergy | Skin Diseases (Psoriases) | Ezema |

## ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை

கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான அனைத்து நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஆஸ்த்துமா | மாதவிடாய்ப் பிரச்சினை | பக்கவாதம் |
| ஒவ்வாமை (அலர்ஜி) | குடற்புண் | நரம்பியல் கோளாறு |
| நீரிழிவு | மூலநோய் | ஞாபகமறதி |
| புற்றுநோய் | முடி உதிர்தல் | தோல் வியாதி |
| சிறுநீரகப் பிரச்சினை | பயம் | மூட்டுநோய் |
| இருதய வியாதி | எக்சிமா | இரத்த அலர்ஜி |

**மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி குணப்படுத்த முடியும்**

கீழ்க்காணும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

**274 High Street North, Manor Park, London E12 6SA**

**Web : www.tribaldr.com Mob : 07984 127 964 & 07918 808 859**

மலேசியாவின் 12ஆம் பொதுத் தேர்தலுக்குப் பின்

# ஆட்சியில் தமிழர்கள் பங்கு

அண்மையில் 8-3-2008 இல் நடந்த மலேசியப் பொதுத் தேர்தலில், மலாயர், சீனர், இந்தியர் ஆகிய மூன்று இனக் கட்சிகள் இணைந்த தேசிய முன்னணி, நடுவண் அரசாட்சியை மீண்டும் கைப்பற்றியது. எனினும், முன்னர்ப் பெற்றிருந்த மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை இம்முறை கிடைக்கவில்லை. நடுவண் அரசாட்சியைத் தேசிய முன்னணி கைப்பற்றினாலும், 14 மொத்த மாநிலங்களுள் 5 மாநிலங்களின் ஆட்சியை எதிர்க்கட்சிகள் கைப்பற்றின. முன்னர்க் கிளந்தான் என்ற ஒரு மாநிலம் எதிர்க்கட்சியிடம் இருந்தது. இப்போது மேலும் சிலாங்கூர், பேரா, பினாங்கு, கெடா ஆகிய 4 மாநிலங்களும் எதிர்க்கட்சிகளின் வசமாயின.

தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளுள் ஒரே இந்தியக் கட்சியான மலேசிய இந்தியர் காங்கிரஸ் (மஇகா), போட்டியிட்ட 9 நாடாளுமன்றத் தொகுதி களில் மூன்றை மட்டுமே வென்றது. மாநிலச் சட்ட மன்றங்களிலும் மிகச்சில இடங்களையே வென்றது. தேசிய முன்னணியின் மற்றப் பங்காளிக் கட்சிகளும் இதுபோன்றே முந்தைய பல இடங்களை இழந்தன. மஇகாவின் தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ ச. சாமிவேலு, நாடாளுமன்றத் தொகுதியில் 1800 வாக்குகள் வேறு பாட்டில் தோல்வியடைய நேர்ந்ததால், தாம் கடந்த 29 ஆண்டுகளாக வகித்த பொதுப்பணித் துறை அமைச்சர் பதவியை மேலவை உறுப்பினராகிப் பெற விரும்ப வில்லை என்று கூறித் தவிர்த்துவிட்டார். இவர் பரிந் துரைத்தபடி, மஇகா சார்பில் வெற்றி பெற்ற 3 நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப் பட்டன. டத்தோ டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மனித வளத்துறையின் முழு அமைச்சர் பொறுப்பை ஏற்றார். எஸ்.கே. தவமணி, பிரதமர் துறையில் துணை அமைச்ச ராகப் பொறுப்பேற்றார். டத்தோ மு. சரவணன் கூட்ட ரசுப் பகுதிக்கான அமைச்சில் துணை அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

தேசிய முன்னணியின் மற்றொரு பங்காளியும், பல்லின மக்களை உறுப்பினராகக் கொண்டதும் ஆகிய கெராக்கான் கட்சியைச் சார்ந்த ஏ. கோகிலன் மேலவை உறுப்பினராக்கப்பட்டு, தோட்டத் தொழில் மூலப்பொருள் அமைச்சின் துணையமைச்சர் பொறுப்பு வழங்கப் பெற்றுள்ளார்.

மொத்தத்தில், மலேசிய நடுவண் அரசில், தமிழர் களுக்கு ஒரு முழு அமைச்சர் பதவியும் மூன்று துணை யமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய முன்னணி அல்லாத மற்றக் கட்சிகள் கைப்பற்றிய மாநிலங்களில் பினாங்கு மாநிலத்தில் முனைவர் பி. இராமசாமி முதன்முறையாகத் துணை முதலமைச்சர் பதவி வழங்கப் பெற்றுள்ளார். மாநில அமைச்சு நிலையில் முந்திய காலத்தைப் போலவே இம் முறையும் இந்தியர் சிலர் பதவி வழங்கப் பெற்று உள்ளனர்.

துணை அமைச்சரான டத்தோ சரவணன் தமிழ கத்திலுள்ள இலக்கியவாதிகளுடன் அணுக்கத் தொடர் பைப் பேணி வருபவர். மலேசியாவில் 'கண்ணதாசன் அறவாரியம்' நிறுவி அதன் தலைவராகத் தமிழ்ப் பணி ஆற்றி வருபவர். கம்பன் விழாவைக் கோலாலம்பூரில் மூன்று நாள்கள் அவ்வப்போது நடத்தி வருபவர். பெரியபுராண விழாவையும் சிறப்பாக நடத்துபவர். சென்னையில் நடைபெறும் கம்பன் விழாவுக்குத் தவறாமல் வருகை தருபவர்.

இலண்டன் சுடரொளியின் சார்பில் அமைச்சர் டத்தோ சரவணன் அவர்களைத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தபோது ''தமக்கு அமைச்சர் பொறுப்பை வழங்கிய பிரதமர் அப்துல் படாவி, ம.இ.கா. தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு ஆகியோ ருக்கு நன்றி தெரிவிப்பதாகவும், தமிழுக்கும் தமிழர் களின் மேம்பாட்டுக்கும் தம்மால் இயன்ற அனைத்து வழிகளிலும் பணியாற்ற இருப்பதாகவும்'' குறிப்பிட்டார். மேலும் ''தமக்கு மேலுள்ள அமைச்சர் டத்தோ ஜுல் ஹஸ்னன் ரஃபீக் அவர்களோடு இணைந்து மலேசியர் களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட உள்ளதாகத்'' தெரிவித்தார்.

மலேசியாவின் நடுவண் அரசிலும் மாநிலங்களின் அரசுகளிலும் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்களாகவும் பொறுப்பேற்றுள்ள தமிழ்ப் பெருமக்கள் தொடர்ந்து தமிழின மேம்பாட்டுப் பணி களை மேற்கொள்ள இலண்டன் சுடரொளி வாழ்த்துகிறது. ❋


டாக்டர் சுப்பிரமணியம்


எஸ்.கே.தேவமணி


டத்தோ.எம்.சரவணன்



கோகிலன்

# அற்புதங்கள் நிகழும் திருத்தலம்

தமிழ்நெறிக்கிழார் பொன். பாலசுந்தரம், இலண்டன்

*சிவயோகம் ஏற்பாட்டில் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் குடமுழுக்கு விழா 21-3-08 அன்று நிகழவிருப்பதையிட்டு அம்மனின் அற்புதங்கள், ஆதீன சந்நிதானங்கள் வழங்கிய ஆசிச் செய்திகளின் சுருக்கம், குடமுழுக்கு விழா நிகழ்ச்சி நிரல் முதலானவை தரப்படுகிறது. - ஆசிரியர்.*

## கலங்கும் நெஞ்சங்களுக்குக் கருணை சொரியும் இலண்டன் முத்துமாரி



கனத்த நெஞ்சங்கள், கலங்கிய கண்கள், சீர் குலைந்த எண்ணங்கள், வாடிய முகங்களுடன் திக்குத் தெரியாத காட்டில் ஈழ மக்கள் நின்ற காலம் அந்தக் காலம். அந்நிய மண, அந்நிய மொழி, அந்நிய கலாச் சாரம். இப்படித்தான் எல்லாம் அந்நிய மயம். இதன் மத்தியில் மக்களின் தத்தளித்த நிலை. பூமிக்கு வானம் துணை நிற்கிறது. கப்பலுக்குத் திசைகாட்டி துணை நிற்கிறது. மரங்களுக்கு மழை துணை நிற்கிறது. ஆனால் ஈழ மக்களுக்குத் துணையாகக் கைகொடுத்து நின்றது தெய்வங்கள்தாம்.

ஆலயங்கள் எமது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவை. ஆன்மீக வழி நடத்தல் எமது வாழ்வின் வழிகாட்டி அதை எமக்கும், எம் சந்ததியினருக்கும் எம் சமய ஞானிகள் சொல்லி வைத்திருக்கிறார்கள். அரிய வார்த்தைகளில் அற்புதமான தத்துவம் பொதிந்துள்ள தைக் காணலாம். காலத்தை வென்ற கருத்தாழம் நிறைந்த அறிவுரை இவை. சிறிது சிந்திக்கலாம்.

''கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம்'', ''ஆலயம் தொழுவது சாலவும் நன்றி''

சமயம் பேணும் தமிழர்களுக்கு இவை வேத வாக்குகள். இதன் நிமித்தம்தான் தாம் வாழும் இடங் களில் எல்லாம் கோயில்களை அமைத்தனர்.

தெரு ஓரங்களில் காவல் தெய்வம் வைர வருக்குச் சிறு குடில் இருக்கும். சில இடங்களில் வானம் பார்த்தவர்களாகவும் இருப்பார்கள். ஆற்றங்கரை ஓரங் களில் விநாயகர் அரச மரம், ஆலமரம் போன்ற விருட் சங்களின் நிழலில் இருந்து அருள் பாலிப்பார். வேப்ப மரத்தடியில் வேப்பிலைக்காரியாக அன்னை அம்பாள் தாயாக எழுந்தருளி இருப்பாள். இன்று பெரிய ஆலயங் களாக வளர்ந்துள்ள கோயில்களுக்கு எல்லாம் முன் னோடியாக எழுந்தருளியவர்கள் இவர்கள்தாம்.

இந்தப் பாரம்பாரியத்திலிருந்து மாறுபடாமல் இன்றுவரை வாழ்ந்து வருபவர்கள் நம் சைவ மக்கள். ''திருக்கோயில் இல்லாத திருவிலூரும் திருவெண்ணீ றணியாத திருவிலூரும் அவை எல்லாம் ஊரல்ல அடவி காடே'' என்றார் நாவுக்கரசர் பெருமான்.

''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாத ஊரிலும்'' ''இறைவன் நாமத்தை ஒருகால் ஆகுதல் ஓதாத ஊரிலும்'' சைவர்களாகிய நாம் வாழக்கூடாது என்றும் அறிவுறுத்து கிறார்.

ஆதியும், அந்தமும் இல்லாத சமயத்திற்கு உரிய வர்களாகிய நாம் சமய ஞானிகளின் அருள் வாக்கு களுக்கமைய வாழ்ந்து வருவது பெருமைக்கு உரியது. இதன் உதாரண புருஷர்களாக ஈழத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருவதை இன்று உலகளாவக் காணலாம்.

இந்த மனோநிலைக்கு அமையத்தான் பன்னி ரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனுக்கு இலண்டன் மாநகரிலுள்ள ரூற்றிங்கில் ஆலயம் நிறுவப்பட்டது. இப்போது ஆகம விதிகளுக்கமைய முறைப்படி அன்னைக்குக் குடமுழுக் குப் பெருவிழா நடைபெறுகிறது.

கண்ணீருடனும், கலக்கத்துடனும் தன்னை நாடி வரும் மக்களுக்கு அபயமளித்து அருட்கருணை சொரி யும் அன்னையாக எழுந்தருளி நிம்மதி தரும் சந்நிதி என இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் மக்களின் மனங் களில் குடிகொண்டிருக்கும் குலதெய்வமாகப் போற்று வோர் தொகை அளப்பரியதாக இருப்பது ஒரு புதுமை யாகும்.

பாரம்பரியம் நிறைந்த ஆலயங்கள் அற்புத நிகழ்வுகளால் பொலிவு பெற்றிருப்பதைக் காணலாம். பரம்பரை பரம்பரையாக வாய்மொழி வாக்கில் வந்த அற்புதங்கள் பல இன்றும் ஆலயங்களுடன் வளர்ந்தும், வாழ்ந்தும் வருவதைக் காணகிறோம்.

இதேபோன்ற அற்புதங்கள் நிகழும் சந்நிதியாக இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலயம் இன்று விளங்குகிறது. சென்ற சில ஆண்டுகளாக இவை பற்றிய பல செய்திகள் பக்தர்கள் மனங்களில் குடிகொண்டிருப் பதை அறியமுடிகிறது.

''வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என்னும் திருவாக்கின்படி இந்த அற்புதங்கள் பல, இலண்டன் முத்துமாரி அம்மன் சந்நிதியில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் அறியமுடிகிறது. செவி வழிவரும் செய்திகளாக அடியார்களின் மனங்களில் பதியப்பட்டும் வருகின்றன.

அன்னையின் அருளாட்சி நடைபெறும் ஆலயங்களில் எல்லாம் இப்படியான அற்புதங்களுக்குக் குறைவில்லை என்பார்கள். அதற்கமைய இலண்டன் முத்துமாரி அன்னையும் தன் அடியார்களுக்கு அருள் பாலிக்கிறாள் எனக் கொள்ளலாம்.

எல்லா ஆலயங்களும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்குக் காணவேண்டும் என்பதே நியதியாகும். இவ்விழாவைத் திருக்குட நன்னீராட்டு விழா எனவும் அழைப்பார்கள். இவ்விழாவினால் ஆலயம் புனிதமாகிறது. விக்கிரகங்கள் புதுப்பொலிவும், சக்தி வலிமையும் பெறுகின்றன. ஏதாவது குறைகள் இருப்பின் அவை யாக பூசைகளினாலும், யந்திர பூசைகளினாலும் நிவர்த்தி பெறுகின்றன.

குடமுழுக்குக் காலத்தில் நடைபெறும் பூசைகளில் கலந்துகொள்ளும் அடியார்கள் ஓமகுண்டப் புகையினால் புனிதம் பெறுவார்கள் எனவும், புதுப் பொலிவுடன் விளங்குவார்கள் எனவும் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஆலயம் அமைக்கும் பணியும் இறைவனுக்குச் செய்யும் தொண்டுகளில் முதன்மையாகக் கருதப்படுகிறது. மக்களுடன் தொடர்புடையவையாக ஆலயங்கள் விளங்குவதால் சமயம், கலை, பண்பாடு, அறிவு வளர்ச்சி, வசதி அற்றோருக்கு வாழ்வளித்தல், பொருளாதார மலர்வு போன்றவற்றிற்கு அவை உதவுகின்றன.

ஆலயங்களின் இப்படியான பணிகளை நிறைவு செய்யும் மனப்பாங்குடன் ''சக்தி ஆன்மீகச் சுடரொளி'' **நாகேந்திரம் சீவரத்தினம்** ஐயா அவர்களினால் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலயம் நிம்மதி தரும் திருத்தலமாகவும், ஆன்மீக ஒன்றுகூடல் தலமாகவும், அருள் சொரியும் தலமாகவும், அற்புதங்கள் நிகழும் தலமாகவும் விளங்குவது சைவர்களாகிய நாம் செய்த புண்ணிய பலன் என்றே கூறவேண்டும்.

இறைவன் திருவருளால் செய்யப்படும் செயல்களே நின்று, நிலவி, நிலைத்துப் புகழுடன் விளங்கும் என்பது எமது சமயக் கூற்றின் தத்துவமாகும்.

# ஆதீன சந்நிதானங்கள் வழங்கிய ஆசிச் செய்திகள்

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனுக்கு நடைபெறும் குடமுழுக்கு விழாவிற்குச் சைவ சமய தலைமைப் பீடங்களான ஆதீனங்களில் பீடாதிபதிகளிடம் இருந்து ஆசிச் செய்திகள் வந்துள்ளன. அவை சுருக்கமாக இங்குத் தரப்பட்டுள்ளன.


பேரூர் ஆதீனம் கயிலை மாமுனிவர் வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் வாழ்த்துப் பாவிலிருந்து:

**பக்தியோடு அடியேம் உன்னைப் பணிந்திடப் புரிவாய் போற்றி**
**புத்தியோடு உயரும் செல்வம் பொருந்திட அருள்க போற்றி**
**எத்திக்கும் புகழும் இலண்டன் மாநகர் இறைவி போற்றி**
**முத்து மாரித்தாய் போற்றி முத்திக்கு வித்தே போற்றி**

திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் வழங்கியுள்ள ஆசி:

அயல் நாட்டில் நமது ஆன்மீகப் பண்பாட்டிற்கு அரியதோர் விளக்கமாகத் திகழும் இத்திருக்கோயிலில் நித்திய பூசைகள் நியமமாக நடைபெறுவதோடு, திரு வீதி உலாவும், தங்கத் தேர்ப் பவனியும் நடைபெறுவது மிகுந்த சிறப்பிற்கு உரியது. தினமும் அடியார்களுக்கு மகேசுவர பூசையும் நடைபெறுவது போற்றுதற்குரிய புண்ணியச் செயலாகும்.

திருப்பனந்தாள் காசித் திருமடம் கயிலை மாமுனிவர் திருவளர் திரு காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் வழங்கியுள்ள ஆசி:



ஸ்ரீ முத்துமாரி அம்மன் மீது கொண்ட முதிர்ந்த பக்தியின் வெளிப்பாடாகக் குடமுழுக்கு விழாச் செய்ய இருப்பது பாராட்டிற்குரியது. தொடர்ந்து நாகரிகம், பண்பாடு, இலக்கியம் கலைகள், முதலியவற்றின் பதிவிடங்களாக நமது திருக்கோயில்கள் திகழ்கின்றன.

மதுரை ஆதீன கர்த்தர் 292ஆவது குருமகா சந்நிதானம் புனிதமிக்க ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞான சம்பந்த தேசிக பரமாச்சாரியார் வழங்கியுள்ள ஆசி:

மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து, மதித்து, மனிதநேயத்துடன் திகழ்ந்து, ''நிலையாமையை'' உணர்ந்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திக்கிறோம். எல்லோர்க்கும் ஆசீர்வாதம்.

தருமபுர ஆதீன மௌன மடம் (திருச்சி) கட்டளை விசாரணை ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் வழங்கியுள்ள ஆசி:

மாரி, செல்வி முதலியன நமக்கு மழைக்குரிய தெய்வங்களாகப் போற்றப் பெறுகின்றன. மிகப்பெரிய அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தை இத்திருக்கோயில் பெற்று



விளங்குவதும், நாளும் நாளும் ''உன்னைச் சிங்காரித்து உன் அழகு பார்த்தல்'' என்ற திருஞானசம்பந்தர் வாக்குக்கிணங்க அம்மையை அலங் காரச் சிறப்பில் பக்தர்கள் கண்டு மகிழ்வதும் சிறப்புடையதாகும்.

யாழ்ப்பாணத்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பர மாச்சாரிய சுவாமிகள் வழங்கியுள்ள ஆசி:

அண்டசராசரத்திற்கும் தாயாக விளங்கும் அன்னை பராசக்தி எனப் போற்றப்படும் இலண்டன் முத்துமாரி அம்பாளுக்கு நிறைவான ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகம் காண்பது அனை வருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாலயம் சிவயோகம் என்னும் அறக்கட்டளை நிதியத்தை உரு வாக்கி ஈழத்தில் வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருக் கும் தமிழர்களுக்கு உதவும் பணி போற்றற்கு உரியது.

ஈழத்துத் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ் தான தலைவர் துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கியுள்ள ஆசி:

எம் தமிழ் மக்கள் தாங்கள் எங்குச் சென்று குடியேறினாலும் அங்கு தாம் வழிபடுவதற்கென்று ஒரு கோயிலை அமைக்கத் தவறில்லை. அந்த வழமையில் இலண்டன் மாநகரில் அமைந்த முத்துமாரி அம்மன் கோயில் பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாகும். எங்கும் எதிலும் நல்லனவற்றைக் காணும் சிறப்பு எம்மவருக்கு உண்டு. ஆகவே அருள் குளிர்ச்சியினால் அகிலத்தை வாழவைக்கும் முத்துமாரித் தாய்க்குக் குடமுழுக்கு விழா எடுப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடை கிறேன்.

## குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 16-3-2008 | ஞாயிற்றுக்கிழமை கிரியைகள் ஆரம்பம் |
| 17-3-2008 | திங்கட்கிழமை நவக்கிரக பூசை யாகபூசை ஆரம்பம் |
| 18-3-2008 | செவ்வாய்க்கிழமை சுவர்ணாபிஷேகம் |
| 19-3-2008 | புதன்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்துதல் |
| 20-3-2008 | வியாழக்கிழமை விம்பசுத்தி பூசை |
| 21-3-2008 | வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் தங்கத்தேர்ப் பவனி |

குடமுழுக்கு யாகபூசைக் காலங்களில் தினுமும் கிரியா விழாக்களும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

குடமுழுக்கு விழாவைத் தொடர்ந்து பன்னி ரண்டு தினங்களுக்குக் காலை 9.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் மண்டலாபிஷேகமும் சிறப்புப் பூசை யும் நடைபெறும்.

மண்டல பூர்த்தி தினமாகிய 2-4-2008 புதன் கிழமை காலை 9.00 மணிக்கு 108 வலம்புரிச் சங்கு களால் அபிஷேகமும், மண்டல பூர்த்தியும், சிறப்புப் பூசையைத் தொடர்ந்து அம்பிகை ஆலயத்தை வலம் வருதலும் நடைபெறும்.

## அன்னையின் சேவையில் அடியார்கள்

என்றும் பிரகாசமாய் அங்கிங்கெனாதபடி அடிய வர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அன்னையின் பாதாரவிந்தங்கள் போற்றித் தொழுவோமாக!

சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக ஆலயம் அடைந்த இந்தப் புனிதமான வளர்ச்சிக்குத் தங்க தூண் களாக நின்று தாங்கி ஒத்துழைப்பு நல்கிய பெரி யோர்களுக்கும்,

அம்பாளின் தரிசனத்திற்காகவும், கருணைக்காக வும் தினமும் ஆலயத்தை நாடி வரும் அடியார்கள், பக்தர்கள், திருக்கூட்டத்தினர் உட்பட்ட சகலருக்கும்.

மனநிறைவான அர்ப்பணிப்புகளையும், காணிக் கைகளையும் அம்பாளுக்குச் சமர்ப்பித்து அன்னையின் கருணையை நாடி நிற்கும் அனைவருக்கும்,

சிரமங்களைப் பாராமல் அன்னையின் தொண் டிற்குத் தம்மை அர்ப்பணிப்புச் செய்துவரும் அடியார் களுக்கும்,

இப் புனிதமான குடமுழுக்கு விழாவின் போது ஆலய நிறுவனரும், அறங்காவலர் சபையினரும், ஆலய குருமார்களும் தமது மனநிறைவான நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறார்கள்.

**ஆன்மீக அன்பர்கள் வருக!**
**அம்பாளின் அனுக்கிரகம் பெறுக!**

## மனத்தூய்மைக்கு வழி

நல்ல ஒழுக்கம் உடையவர்களின் மனமே தூய்மை அடையும். அத்தகைய தூய மனத்தில் இறைவர் தோன்று வார். தூய கண்ணாடியில் நம் உருவம் நன்கு தெரிவது போல.

நம்மிடம் நல்லொழுக்கம் வளர வேண்டுமானால் கீழ்த்தரமான எண்ணங்களை உடையவர்களிடம் பழகவே கூடாது.

நாள்தோறும் குளிப்பதால் உடல் தூய்மை அடை கிறது. கூட்டுவதால் வீடு தூய்மை அடைகிறது. சான்றோர் களிடம் பழகுவதால் மனம் தூய்மை அடையும்.

ஏழையின் முகத்தை மலரச் செய்பவரே இறை வனின் உண்மையான பக்தராவார். பிறருடைய உள்ளம் நோகும்படி பேசுவதும் ஒரு கொலைதான்.

# "தைப்பொங்கல் தினமே தமிழ்ப் புத்தாண்டுத் தினமாகும்!"

**சபேசன்**, மெல்போர்ன், அவுஸ்திரேலியா

தமிழரின் தேசியத் திருநாளான தைப்பொங்கல் நாள் குறித்துப் பல கருத்துகளை, வரலாற்று வழியாக வும், வாழ்வியல் வழியாகவும், பண்பாட்டு வழியாக வும், ' பண்டைய காலக் கணக்கு முறை' வழியாகவும் முன் வைத்துத் தர்க்கிப்பதுவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழீழத்திலும், தமிழ் நாட்டிலும் மட்டுமன்றி, உலகளாவிய வகையில் இன்று புலம் பெயர்ந்திட்ட தமிழ் மக்களும் தைப் பொங்கல் திருநாளைக் கொண் டாடுகின்ற இக்காலகட்டத்தில் இவ்வகையான தர்க்கங் கள் பல ஆக்கபூர்வமான சிந்தனைகளைக் கிளர்ந்தெழச் செய்து அவற்றைச் செயற்பட வைப்பதற்கும் உதவக் கூடும்!

''பொங்கல்'' என்கின்ற பழந்தமிழ்ச் சொல்லுக்கு உரிய அர்த்தங்கள்தாம் என்ன?

பொங்குகை, பெருங்கோபம், மிளகு, சீரகம், உப்பு, நெய் முதலியன கலந்து இட்ட அன்னம், உயர்ச்சி, பருமை, மிகுதி, கள், கிளர்தல், சமைத்தல், பொலிதல் என்று பல பொருள்களைத் தமிழ் மொழியகராதியும், தமிழ்ப் பேரகராதியும் தருகின்றன. அத்தோடு இன்னு மொரு பொருளும் தரப்படுகின்றது.

'சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும் நாளான தை மாத முதல்தேதியன்று சூரியனை வழிபட்டுப் பொங்கல் நிவேதனம் செய்யும் திருவிழா' என்ற பொரு ளும், பொங்கல் என்ற சொல்லுக்குத் தரப்பட்டுள்ளது. இந்தப் பொருளுக்கு உள்ளே, பல முக்கியமான விட யங்கள் பொதிந்திருப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

அதாவது பொங்கல் திருவிழா என்பது தமிழ் மக்கள் வாழ்வில் வரலாற்று ரீதியாக, ஒரு பண்பாட்டு அங்கமாக, அவர்களது வாழ்வியலில் திகழுகின்ற திரு விழாவாக இருந்து வந்துள்ளது என்பது புலனாகின்றது. அத்தோடு பண்டைத் தமிழர்கள் இயற்கையின் காலக் கணக்கைக் கணித்து, சரியாக எந்த நாளில் தைத்திரு நாளைக் கொண்டாட வேண்டும் என்பதையும் அறிந் திருந்தார்கள் என்பதையும் நாம் அறியக் கூடியதாக உள்ளது.

இதனைச் சற்று ஆழமாகக் கவனிப்போம்.

பண்டைத் தமிழன் இயற்கையை வணங்கி, இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ முனைந்தவன் ஆவான். தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் வித்தியாச மான காலப் பருவங்கள் தோன்றுவதையும் அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவதையும் தமிழன் அவதானித்தான். ஒரு குறிப்பிட்ட காலச் சேர்வையில், மழை, வெயில், குளிர், பனி, தென்றல், வாடை ஆகி யவை மாறி மாறித் தோன்றி, தமிழனின் வாழ்வை ஆண்டு வந்ததால் இந்தக் காலச் சேர்வையைத் தமிழன் 'ஆண்டு' என்று அழைத்தான் - என்று அறிஞர் வெங்கட்ராமன் என்பார் கூறுவார்.

தமிழகத்தில் வானியலில் தேர்ச்சி பெற்ற அறிஞர் களை 'அறிவர், பணி, கணியன்' என அழைத்தார்கள். மூவகைக் காலமும் நெறியினாற்றும் 'அறிவர்கள்' குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அரசர்களுடைய அவைகளில் 'பெருங் கணியர்கள்' இருந்ததாகச் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றது. தொல்காப்பி யத்திலும், சங்க நூல்களிலும் தென்படுகின்ற வானியற் செய்திகள் முழுமையாக உருப்பெற்றமைக்குப் பல ஆயிரம் ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு ஆரியர்களது ஊடுருவலுக்கு முன்னரேயே தமிழர்கள் வானியலில் பெரிய அளவில் முன்னேறி இருந்தனர் என்று பல் நாட்டு அறிஞர்களும் கூறியுள்ளார்கள். மேல்நாட்டு அறிஞரான சிலேட்டர் என்பவர் 'தமிழருடைய' வானநூற் கணித முறையே வழக்கில் உள்ள எல்லாக் கணிதங்களிலும் நிதான மானது' என்று குறிப்பிட்டுள்ளார். தமிழகத்துப் பரதவர் கள் திங்களின் நிலையைக் கொண்டு சந்திரமான காலத் தைக் கணித்தனர் என்றும், தமிழகத்து உழவர்கள் சூரியன், திங்கள் ஆகியவற்றின் இயக்கங்களையும் பருவங்களையும் மிகத் தெளிவாக அறிந்திருந்தனர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (A Social history of the Tamils - Part 1)

தமிழர்கள் இயற்கையை ஆதாரமாகக் கொண்டு, காலத்தைப் பகுத்தார்கள். ஒரு நாளைக் கூட ஆறு சிறு பொழுதுகளாகத் தமிழர்கள் அன்றே பகுத்து வைத்தார் கள். 'வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை; யாமம்' என்று அவற்றைப் பகுத்து அழைத்தார்கள். அது மட்டுமல்ல, அந்த ஆறு சிறு பொழுதுகளின் தொகுப் பையும் அறுபது நாழிகைகளாகப் பகுத்துக் கணக்கிட் டார்கள். அதாவது ஒரு நாளில் ஆறு சிறுபொழுதுகள் உள்ளன. அந்த ஆறு சிறு பொழுதுதான் கழிவதற்கு அறுபது நாழிகைகள் எடுக்கின்றன என்று தமிழர்கள் பண்டைக் காலத்தில் கணக்கிட்டார்கள். ஒரு நாழிகை என்பது தற்போதைய 24 நிமிடங்களைக் கொண்ட தாகும்.

அதாவது பண்டைக் காலத் தமிழர்களது ஒரு நாட்பொழுதின் அறுபது நாழிகைகள் என்பன தற்போ தைய கணக்கீடான 1440 நிமிடங்களோடு அதாவது 24 மணித்தியாலங்களோடு அச்சொட்டாகப் பொருந்துகின் றன. தமிழர்கள் ஒரு நாட் பொழுதை, தற்போதைய நவீன காலத்தையும் விட, அன்றே மிக நுட்பமாகக் கணித்து வைத்திருந்தார்கள் என்பதே உண்மையுமாகும்.

தைப்பொங்கல் தினத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்ற தமிழர்களின் ஆண்டுப் பகுப்பை அடுத்துக் கவனிப்போம்.

பின்னாளில் வந்த ஆரியர்கள் ஓர் ஆண்டை நான்கு பருவங்களாக மட்டும்தான் வகுத்தார்கள். ஆனால் பண்டைக்காலத் தமிழர்களோ, தமக்குரிய ஆண்டை, அந்த ஆண்டுக்குரிய தமது வாழ்வை, ஆறு பருவங் களாக வகுத்திருந்தார்கள்.

1. இளவேனில் - (தை-மாசி மாதங்களுக்குரியது)
2. முதுவேனில் - (பங்குனி-சித்திரை மாதங்களுக்குரியது)

3. கார் - (வைகாசி-ஆனி மாதங்களுக்குரியது)
4. கூதிர் - (ஆடி-ஆவணி மாதங்களுக்குரியது)
5. முன்பனி - (புரட்டாசி-ஐப்பசி மாதங்களுக்குரியது)
6. பின்பனி - (கார்த்திகை-மார்கழி மாதங்களுக்குரியது)

(இதைத் தவிர, ஓர் ஆணின் வாழ்க்கைக் காலத்தை, ஒரு பெண்ணின் வாழ்க்கைக் காலத்தை, ஏன் ஒரு மலரின் வாழ்க்கைக் காலத்தைக் கூடத் தமிழன் பல காலத் தொகுதிகளாக வகுத்து வைத்துள்ளான் என்பதானது இன்னுமொரு தளத்திற்குரிய ஆய்வுக் கருத்துகளாகும்).

காலத்தை, அறுபது நாழிகைகளாகவும், ஆறு சிறு பொழுதுகளாகவும், ஆறு பருவங்களாகவும் பகுத்த பண்டைத் தமிழனின் புத்தாண்டு வாழ்வு இள வேனிற் காலத்தில்தான் தொடங்குகின்றது. இங்கே ஒரு மிக முக்கியமான விடயத்தை வாசகர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். பண்பாட்டுப் பெருமை கொண்ட மற்றைய பல இனத்தவர்களும், தங்களுடைய புத்தாண்டு வாழ்வைத் தங்களுடைய இளவேனிற் காலங்களில்தான் ஆரம்பிக்கின்றார்கள். தமிழர்கள் மட்டுமல்லா். சீனர்களும், ஜப்பானியர்களும், கொரியர்களும், மஞ்சூரியர்களும் எனப் பல கோடி இன மக்கள், தொன்மையான பண்பாட்டு வாழ்வினைக் கொண்ட பெருமை வாய்ந்த மக்கள் தங்களுடைய இளவேனிற் காலத்தையே தமது புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றார்கள்.

உதாரணத்திற்காக யப்பானிய மக்களின் புத்தாண்டைத் தமிழர்களின் புத்தாண்டான பொங்கல் திருநாளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

தமிழர்-யப்பானியப் பண்பாட்டு ஒற்றுமை நிலையை வெளிப்படுத்தும் நடைமுறையாகத் தைப் பொங்கல் விளங்குகிறது. யப்பானியர் தை 14ஆம் திகதி அன்று பழைய பயன்பாட்டுப் பொருள்களை எரிப்பார்கள. தமிழர்களும் அவ்வாறே செய்கின்றார்கள்.

தை 15 ஆம் நாள் யப்பானியர்களும், தமிழர்கள் போன்று தோரணங்களைத் தொங்கவிட்டுப் புதுநீர் அள்ளி, பருப்புச் சேர்த்து சமைத்த பொங்கலைப் பரிமாறுகின்றார்கள். தமிழர்கள் பொங்கல் பானையில் பால் பொங்கும்போது 'பொங்கலோ பொங்கல்' என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள். அதேபோல் யப்பானியர் தமது புத்தாண்டான தை 15 ஆம் நாளில் 'Fonkara - Fonkara' என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்வார்கள்.

தை 16ஆம் நாள் பணியாளர்களுக்குப் புத்தாடை வழங்கல், முன்னோர்க்குப் படையல் செய்தல், கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தல், மாடுகளுக்கு உணவளித்தல் போன்ற காரியங்களைத் தமிழர்கள் செய்வது போலவே யப்பானியர்களும் செய்கிறார்கள்.

**பருப்புத் தவிடு பொங்க – பொங்க**
**அரிசித் தவிடு பொங்க – பொங்க**

என்ற கருத்துப்படப் பாடப்படும் யப்பானிய வாய் மொழிப் பாடலில் 'பொங்க-பொங்க' என்ற சொற்களுக்கு யப்பானிய மொழியில் "uONGA-uONGA' என்றே பாடுகிறார்கள்.

இடையில் தமிழன் மட்டும் மாறிவிட்டான்! ஆள வந்த ஆரியர்களின் அடிமையாக மாறியது மட்டுமல்லாது, இன்றும்கூட ஆரியர்களின் பண்டிகைகளான சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளைத் தன் இனத்துப் பண்டிகைகளாக எண்ணி மயங்கிப் போய்க் கிடக்கின்றான்.

இவை குறித்துப் பேராசிரியர் க.பொ. இரத்தினம் அவர்கள் கீழ் வருமாறு அன்று கூறியிருந்தார்.

''சித்திரை வருடப்பிறப்பு'' என்பது சாலிவாகனன் என்ற வடநாட்டு அரசனால் பின்னாளில் நிலைநாட்டப்பட்டது. இந்த அரசனுக்கு முன்னர்ப் பல்லாயிரம் ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டுப் பெருமகன் ஒருவனுடன் இணைந்த தொடர் ஆண்டை நிலைநாட்ட முயலாதது பெரும் விந்தையாக உள்ளது. (சித்திரை வருடப் பிறப்பை) வரவேற்று, (அதன்மூலம்) தமிழினத்தின் பழைமையையும், பண்பையும், சிறப்பையும், செல்வாக்கையும் (இன்றைய தமிழர்கள்) சிதைத்து வந்துள்ளமை பெரும் வெட்கத்திற்கு இடமானதாகவும் இருக்கின்றது. தமிழ் மக்களிடையே நிகழ்ந்த மானக்கேடான, நகைப்புக்கிடமான செயல் இது ஒன்று மட்டும்தானா? தமிழ் மக்களின் கோவில்களிலே இன்று தமிழ் மொழியும், தமிழ் இசையும் ஒதுக்கப்பட்டுள்ளன என்று பேராசிரியர் க.பொ. இரத்தினம் அவர்கள் மிகக் கடுமையாக விமர்சித்து இருந்தார்.

தமிழர்களின் தேசியத் திருநாளான தைப் பொங்கல் தினத்தைத் தமிழர்களுடைய பண்டைக் காலத்திலிருந்தே வரலாற்று வழியாகவும், வாழ்வியல் வழியாகவும்; பண்பாட்டு வழியாகவும், வானியல் அறிவு வழியாகவும் தமிழர்கள் இனம் கண்டு அறிந்துணர்ந்து கொண்டாடி வந்துள்ளார்கள் என்பதையும் நாம் தர்க்கித்ததோடு, ஆரியர்கள் எம்மீது திணித்த சித்திரை வருடப் பிறப்பு குறித்தும் நாம் சில கருத்துகளைத் தெரிவித்ததற்குக் காரணங்கள் உண்டு!

''தைப்பொங்கல் தினமான, தைத்திங்கள் முதல் நாள்தான் தமிழனுக்குரிய தமிழ்ப் புத்தாண்டுத் தினமாகும்!!''

பொங்கல் திருநாள்-தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள் என்பதானது, சிலர் பிதற்றித் திரிவதுபோல் இந்துக்களின் விழா அன்று! உண்மையில் இது, சமய சார்பற்ற, இயற்கை சார்ந்த, எல்லாத் தமிழர்களுக்கும் பொதுவான திருநாளாகும்! மற்றைய எல்லாத் திருநாள்களையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் அங்கே ஏதாவது ஓர் அரசனை, வீரனை, கடவுளைக் குறிப்பிட்ட 'கதை' ஒன்று புனையப்பட்டு அந்தத் திருநாள் உருவாகியதற்கான காரணம் ஒன்றும் கற்பிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் தைப்பொங்கல் திருநாள் அப்படியான ஒன்றல்ல. அது வான் சார்ந்து, மண் சார்ந்து, முழுமையான இயற்கை சார்ந்து உருவாகிய திருநாளாகும். இது தமிழர்களான எமக்குப் பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகின்ற திருவிழாவாகும். இத்திருநாளைப் புறம் தள்ளுவதும், இதற்கு மதம் சார்ந்த கற்பிதங்களை உருவாக்குவதும், தமிழினத்தைக் கேவலப்படுத்தும் செயல்களாகும்.

தைப்பொங்கல் திருவிழாவிற்குச் சமயச் சாயம் பூச முற்படுபவர்களை மறைமலை அடிகளாரும் கடுமை யாகச் சாடியுள்ளார். இது குறித்த வரலாற்றுப் பதிவு ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

1935ஆம் ஆண்டு திருச்சியில் அகிலத் தமிழர் மகாநாடு என்ற பெயரில் ஒரு மகாநாடு நடைபெற்றது. பசுமலை சோமசுந்தர பாரதியார் தலைமையில் நடை பெற்ற இந்த மகாநாட்டில் கா. சுப்பிரமணியனார், மதுரை தமிழவேள், பி.டி. இராசன், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், புலவர் கா.ப. சாமி, திரு.வி.க., மறைமலை அடிகளார் முதலான பல தமிழறிஞர்கள் கலந்து கொண்டார்கள். தந்தை ஈ.வெ.ரா. பெரியாரும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். இந்த மகா நாட்டின் போது தைப்பொங்கல் சமயவிழாவா? இல்லை சமயமற்ற விழாவா? என்று பலத்த விவாதம் எழுந்தது. இறுதியாக, மறைமலை அடிகளார் திட்டவட்டமாகக் கீழ்வருமாறு கூறினார்.

''பொங்கலைச் சமயவிழா என்று சொல்லிச் சர்ச்சையைக் கிளப்பிக் குழப்பம் செய்ய யார் முயன் றாலும் அவர்கள் இம் மாநாட்டை விட்டு வெளியேறி விடவேண்டும். இது சமய சார்பு இல்லாத விழா! எந்தச் சமயத்துக்காரன், எந்தச் சாதிக்காரன் இந்த விழாவை எடுத்துள்ளான்? எந்தச் சூத்திரம் இதற்கு இருக்கிறது? எந்த இதிகாசம் இதற்கு இருக்கிறது? ஆனால் தமிழில் புறநானூற்றில், பிட்டங்கொற்றன் வரலாற்றில், கதப் பிள்ளை சாத்தனாரின் பாடலில் சான்று இருக்கின்றது. இதை என்னுடைய அருமை நண்பர் ஈ.வெ.ரா. ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி'' என்று மறைமலை அடிகளார் முழங்கினார்.

''இல்லை - நான் ஏற்றுக் கொள்கின்றேன்'' என்று ஈ.வெ.ரா. பெரியார் தெளிவாகப் பதிலுரைத்தார். அனை வரும் கையொலி எழுப்பினர். அதனையடுத்து திரு.வி.க. அவர்கள் இதனைப் பாராட்டிப் பேசினார்.

ஆகவே தைப்பொங்கல் திருவிழா என்பது ஒரு சமய விழா அன்று. தமிழரின் பண்பாட்டு விழா. காலக் கணிப்பை மேற்கொண்டு மிகச் சரியாகத் தமது புத்தாண்டுக்குரிய இளவேனிற் காலத்தின் முதல்நாளை வகுத்தறிந்து தமிழரின் தமிழ்ப் புத்தாண்டு ஆரம் பத்தைக் கொண்டாடும் நாள்!

பொங்கல் திருநாளுக்கு முதல் நாளைப் 'போகி' (போக்கி) என்று அழைத்தார்கள். போகி என்பது போக்கு, போதல் என்பதாகும். (ஓர் ஆண்டைப் போக்கி யது-போகி-போகியது). இத் தினத்தில் பழைய பொருள் களை எரித்தல், பழைய குடில்களை எரித்தல் போன்ற நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (முன்னா ளில் யாழ்ப்பாணத்தில் பட்டி அடைக்கின்ற வயற்குடில் களை எரிக்கும் பழைய நடைமுறை இருந்தது. ஆனால் இப்போது இந்த நடைமுறை அருகிவிட்டது.)

தமிழ்ப் புத்தாண்டான தைப்பொங்கல் தினமன்று புத்தாண்டுக்குரிய சகல நடைமுறைகளும் மேற் கொள்ளப்படும். தோரணம் தொங்கவிடல், புதுநீர் அள் ளுதல், வீட்டை அழகுபடுத்தல், பொங்கலிடுதல், புத்தாடை அணிதல், கையுறை பெறுதல் போன்ற நடை முறைகள் மேற்கொள்ளப்படும்.

தைப்பொங்கல் தினத்திற்கு அடுத்த நாள் நடைபெறுகின்ற நடைமுறைகள் புத்தாண்டின் தொடக் கத்தை உணர வைப்பதாக உள்ளன. பயிர் செய்கை யிலே இணைந்து தொழிற்படும் மாடு, தமிழரால் பொங் கலின் மறுநாள் சிறப்பிக்கப்பட்டு அது மாட்டுப் பொங் கல் தினமாக அறியப்பட்டது. அத்துடன் மாட்டுப் பொங்கலின் மறுநாள், உறவினர் வீடுகளுக்குச் செல்லும் நடைமுறையைக் 'காணும் பொங்கல்' என்று அழைப்பர். தமிழரிடையே இருந்த தவப்படையல் என்ற நடை முறை இப்போது அருகிவிட்டது. யாழ்ப்பாணத்தில், வடமராட்சிப் பகுதியில் தைப் பொங்கல் தினமன்றே தவப் படையல் செய்யப்படும் வழக்கமிருந்தது. இப் படையலில் மீன், இறைச்சி முதலியன படைக்கப் பட்டன. இத்தினத்தில் கலை நிகழ்வுகள், அரங்கேற்ற நிகழ்வுகள், புத்தாண்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சி களும் இடம் பெறும்.

தமிழாண்டின் தொடக்கக் காலகட்டம் உழைப் பின் பயனைப் பெற்று மகிழும் காலகட்டமாகவும் அமைந்தது. புத்தொளி வழங்கிய கதிரவனைப் போற் றிய தமிழ் நெஞ்சம், உழைப்பையும் தனக்குத் துணை நின்ற உயிரையும் போற்றியது. கதிரவனின் சுழற்சியைக் கொண்ட காலக்கணிப்பைக் காட்டும் அறிவியலும், நன்றியுணர்வை வெளிப்படுத்துகின்ற முதிர்ந்த பண் பாடும் பொங்கல் விழாவில்; போற்றப்படுவதை நாம் காணலாம்.

அன்புக்குரிய வாசகர்களே! இன்றைய நடை முறை யதார்த்தத்தை சுட்டிக் காட்டித் தர்க்கிக்கவே நாம் இவ்வாறு மேற்கோள் காட்டினோம். இல்லாவிட்டால் யார்-யார் எந்த எந்த நாளில், எந்த எந்தக் கொண் டாட்டங்களையும் கொண்டாடுவதைத் தடுப்பதற்கு நாம் யார்? எவரும், எதையும், எப்படியும் கொண்டாடட்டும். ஆனால் பெயரை மட்டும் சரியாகச் சொல்லட்டும்.

தனித்துவமான மொழியைப் பேசுகின்ற, தனித் துவமான பண்பாட்டைக் கொண்டுள்ள, தனித்துவமான கலைகளைக் கொண்டுள்ள, தமக்கெனப் பாரம்பரிய மண்ணைக் கொண்டுள்ள மக்கள், ஒரு தேசிய இனத் தவர் ஆவார்கள். அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு உரித்தானதாகும் என்று உலகச் சட்டமொன்று சொல்கிறது. இப்போது எமக்கு ஒரு தனித்துவமான பண்பாடு இருக்கின்றதா? என்று கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

தமிழனின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் எதிரிகள் சிதைத்தது போதாதென்று நாமும் கூட ஆரிய மாயையில் மயங்கிப் போய் எமது பண்பாட்டை இகழ்ந் தும், இழந்தும் வருகின்றோம். இந்தக் காலகட்டத்தில் தமிழ்ப் புத்தாண்டு தினமான தைப்பொங்கல் குறித்துச் சில வரலாற்று உண்மைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள முனைந்தோம். அனைவருக்கும் எமது இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!

*இந்தக் கட்டுரைக்குப் பல நூல்களும், ஆய்வு நூல்களும் பயன்பட்டன. முக்கியமாகத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், எட்டுத்தொகை-பத்துப்பாட்டு, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஒப்பியன் மொழி நூல், வாக்கிய பஞ்சாங்கம், பண்பாட்டுக் கட்டுரைகள், செம்பருத்தி சஞ்சிகைக் கட்டுரைகள், பொங்கலே தமிழ்ப் புத்தாண்டு-மலேசியச் சிறப்பு மலர், தமிழர்-யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல் போன்ற நூல்கள் பேருதவி புரிந்தன. சில சொல்லாக்கங்களும் சொல்லாடல்களும் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் எனது மனங் கனிந்த நன்றிகள்.*

✱

நூல் நயவுரை

# பூந்துணர் பற்றிய ஒரு புரிந்துணர்வு

ஆசிரியர் எஸ்.வீ. பரமேஸ்வரன்




பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கத்தினரால் (ELAB) அண்மையில் வெளியிடப்பட்ட 210 பக்கப் பூந்துணர் நூலை நுகரக் கூடிய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன்.

புலம்பெயர் தமிழ் இலக்கிய வெளியீடுகள், தமிழ் இலக்கிய நிகழ்வுகள் அனைத்தும் உலகெங்கும் தமிழ் மக்கள் பரந்து வாழ்கிறார்கள் என்கிற பதிவினைத் தருவது மட்டுமல்லாமல், புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ்மக்கள் தம் தாய்நாட்டின் மேல் கொண்டிருக்கும் பற்றினையும், தமிழ் மொழி மீது கொண்டிருக்கும் உணர்வினையும், இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தாயகத்தின் விடுதலை நோக்கிய போராட்ட விழிப்புணர்வினையும் உலகிற்கு வெளிக்காட்டுவதில் பெரும் பங்கினை ஆற்றி வருகின்றன என்பது ஓர் ஆரோக்கியமான பங்களிப்பாகும்.

இவ்வாறான தமிழ் இலக்கிய உணர்வாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், வெளியீட்டாளர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இது மட்டுமல்ல, இத்தகைய பங்களிப்பாளர்கள் எமது தமிழ் சமூகத்தால் நன்கு ஊக்குவிக்கப்பட்டு, எதிர்காலத்தில் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டிய சொத்துகள் என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இந்த வகையில் பூந்துணர் இலக்கிய வட்டம் சார்ந்த அத்தனை பேர்களும் நன்றியோடு கூடிய பாராட்டுகளுக்குரியவர்கள். மேலைநாடுகளில் வாழும் எம்மவரைப் பொறுத்த மட்டில், நேரம் ஒன்றே எமக்குரிய வறுமை என்று சொல்லலாம். வேலை, வீடு, குடும்பப் பொறுப்பு என்ற அன்றாட இயந்திர வாழ்விற்குள்ளும், மாதந்தோறும் ஒன்று கூடலை ஏற்படுத்தி, இலக்கிய ஆய்வுகளையும், இலக்கியப் பகிர்வுகளையும் மேற்கொண்டதோடு நின்றுவிடாமல், இப்படியொரு பூங்கொத்தை (பூந்துணரை) வெளியிட்டிருப்பது உண்மையில் பிரமிக்கத்தக்கது.

இப் பூந்துணரில் ஒரே கருப்பொருளில் வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகளும் கவிதைகளும் இடம்பெற்றிருக்கின்றன. ஒரே தலையங்கத்தை அடுத்தடுத்த பக்கங்களில் பார்த்தபோது, வாசிப்பதற்குச் சிறு ஆர்வக்குறைவு தோன்றியது. ஆனால் ஓரிரு கவிதைகளையும், கட்டுரைகளையும் வாசித்தபோது, ஒவ்வொன்றும் வெவ்வேறு பரிணாமங்களில் பதியப்பட்டிருந்தமை மேலும் தேடலுக்கான ஆர்வத்தை என்னுள் ஏற்படுத்தியது. பின்னர்தான் பூந்துணரின் தரமும் அதன் பாரமும் ஓர் இலக்கிய நூலிற்கான அத்தனை தகுதியையும் கொண்டிருப்பதை அறிய முடிந்தது. ஒரு சிறு நேர இடைவெளிக்குள்ளேயே பூந்துணரை வாசித்து முடித்திருந்தேன். அந்தளவுக்கு, ஒவ்வொரு படைப்பும் ஏதோ ஒன்றையாவது மனத்தில் நிறுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது.

குறிப்பாகச் சொல்லுமிடத்து, சமாதானம், உண்மை, பண்பாடு என்னும் தலைப்பிலான கவிதைகளிலும் சரி, கட்டுரைகளிலும் சரி, சரியான அனுபவத்தேடலும் இலக்கிய முதிர்வும் காணப்படுகின்றன. சில கவிதை வரிகள் நெஞ்சில் நிற்குமளவிற்கு நறுக்கெனப் பதிந்துகொள்கின்றன.

**தனித்தனியே, விலக்கின்றி, நாமெல்லாம்**
**வெவ்வேறு அளவுகளில்**
**சுயநலத்தார் என்பதுண்மை...**

எனும் வரிகளும்...

**உட்போர்கள் நடந்ததனால் உடைபட்டுச்**
**சிறகுடைந்து, சிதறிப்போய்ப் பிரிந்ததுண்மை...**

வரிகளும்,

**சமாதானத்தைத் தேடும்... யுகசாரதியின்...**
**கீதையிலா அன்றேல் கிறிஸ்து வரவுரைக்கும்**
**வேதாகமத்துள் விரியும் இதழ்களிலா**
**தூதர் நபிக்கிறைவன் சொன்ன குரு ஆனின்**
**போதனைக்குள்ளா புத்தன் உரைகளிலா...**

என்னும் வரிகளிலும்...

**பேச்சுவார்த்தையின் யதார்த்தமான போக்கைப்**
**பட்டப் பகலில் பகற்கனவு காணகையிலே**
**ஔவைக்கு வேலன்**
**சுட்ட பழமே காட்டில் சுவையுணவாய் ஆயிற்று**

என்ற வரிகளோடு...

**பாண்டவர்க்குத் தீயிட்ட பாவியரின் பான்மையென**
**நீண்ட எம் பெரு நிலத்தில் நெருப்பிட்ட**
**வஞ்சகரைப் பூண்டோடு அழிப்பதெனப்**
**பூண்டுள்ளோம் சபதம்,**
**மீன் தூண்டிலிலே புழுவாய் நாம்துடித்த நிலைமாற...**

என்ற வரிகளும்

**வெற்றி என ஓரினத்தை வேரறுத்துக் கிடைக்கின்ற**
**சக்தியிலே துளியுமில்லை சமாதான சாரம்சம்!...**

என்ற வரிகளும்
கவிதைகளை மெருகூட்டி பூந்துணரை உயர்த்தியிருக்கின்றன.

கவிதைகளுக்கு எந்தவகையிலும் சளைக்காத வகையில் கட்டுரைகளும் மிகத் தெளிவாகச் சொல்ல வந்த கருத்தைத் தெளிவாகவும், எளிமையான நடையிலும் அமைந்து ஆர்ப்பாட்டமில்லாதவாறு அமைந்திருக்கின்றன. கட்டுரை வடிவில் இவை அமைந்திருந்தாலும், ஒவ்வொன்றும் ஒரு சிறுகதையினை வாசிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

முடிவில்... பூந்துணருக்கு மகுடம் சூட்டியதைப் போல அமைந்துள்ள இரு மிகச் சிறந்த வாச மலர்களைச் சுட்டிக் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவது, பேராசிரியர் கோபன் மகாதேவாவின் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு இரணைகள். இவை இலகுவான, உசிதமான, அழகான ஆங்கில வார்த்தைகளுடன் எவருக்கும் விளங்குமாறு அமைந்து வள்ளுவரின் பொருட்சொறிவை மேற்கத்திய இன்றைய உலகுக்கு இலகுவில் எடுத்துரைக்கும் வண்ணம் திறமாக ஆக்கப்பட்டுள்ளன.

அதேபோல, பூந்துணரின் மிகச்சிறந்த வாசமலராகத் திகழ்வது நுணாவிலூர் கா. விஜயரத்தினத்தின் சங்க இலக்கியக் கட்டுரைகள். இவையும் கனம் நிறைந்த ஓர் எழுத்து வடிவமாக, இலகு தமிழிலும் நடையிலும் அமைந்திருக்கின்றன.

மேற்கூறிய இரண்டும் எம் இளைய சமுதாயத்தினரால் எம் தொன்மையானதும் காத்திரமானதுமாகிய தமிழ் இலக்கியத்தை இலகுவில் விளங்கிக்கொள்ள உதவும். எனவே இவை பள்ளிக்கூடங்களில் பாவிக்க உசிதமானவை எனக் கருதுகிறேன்.

இவ்வாறான வெளியீடுகளை மேலும் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் (ELAB) வெளியிட்டுப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியை மேம்படுத்தும் என நம்புகிறேன்.

இனிவரும் பூந்துணர்களில் இலக்கியப் படைப்பாளிப் பஞ்சம் நிவர்த்திக்கப்படுதலும், புதிய பரிமாணங்களில் எழுத்துகள் அமைக்கப்படுதலும் மேன் மேலும் பூந்துணரின் அழகை மெருகேற்றும் என்பது என் எண்ணம்.

***(குறிப்பு : இந்நூலின் சுட்டெண்கள் ISBN(10): 1873265522, ISBN(13) : 9781873265529 ஆகும். இவ்விலக்கங்களைச் சொல்லி நூலின் பிரதிகளை உலகின் எப்பகுதியிலுமுள்ள புத்தகக் கடைகளிலும் நூல்நிலையங்களிலும் பெறலாம். ஆசிரியர்)*** ✱

## டாக்டர் தருமலிங்கம் அவர்களின் நூற்றாண்டு நிறைவை நினைவுகூருவோம்



தமிழீழம் தமிழர்களுக்கே என்று முழங்கிய டாக்டர் எஸ்.ஏ. தருமலிங்கம் அவர்களின் 100 ஆவது பிறந்தநாள் 23-3-2008 ஆகும்.

ஈழத் தமிழர்களின் அரசியல் சரித்திரத்தில் முன்னோடியாக விளங்கியவர். தந்தை செல்வாவுடன் நீண்ட காலமாகத் தமிழரசுக்கட்சி அரசியலில் ஈடுபட்டு உழைத்தவர். தமிழினம் தன்மானத்துடன் வாழ வேண்டுமானால் சுதந்திர பூமியில் வாழவேண்டுமென்று ஆசைப்பட்டவர். அவர் வாழும் போது தமிழீழத்தை அடையமுடியவில்லையென்றாலும் அதற்கான போராட்டத்தை நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்திற்கு ஆதரவாக இலண்டனில் 10 ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்பட்ட தமிழீழப் பற்றாளர்.

இலண்டனில் தம் மகள் திருமதி நவரத்தினம், மருமகன் வைத்திய கலாநிதி எஸ். நவரத்தினம் ஆகியோருடன் வாழ்ந்து வந்தவர். இவரின் எல்லா பணிகளும் சிறப்புடன் நடைபெற அவர்கள் முன்னின்று உழைத்தவர்கள். அன்னார் 6-7-98 இல் சிவபதம் அடைந்தவர்.

''பிரபாகரன் ஒரு தேவையான தலைவன். அவருக்கு எல்லாப் பக்கத்தாலும் கரச்சல் உண்டு. எப்படியும் ஈழப் போராட்டம் வெற்றிபெறும். ஈழம்தான் முடிந்த முடிவு''. தனது 90ஆவது பிறந்தநாளின்போது டாக்டர் தருமலிங்கம் அவர்கள் கூறிய வார்த்தைகள். அன்னாரது நூற்றாண்டு நிறைவின்போது தமிழீழம் உருவாவதற்கான சூழ்நிலை உருவாகிவருவது நல்ல அறிகுறியாகும்.

அன்னாரது 90ஆவது பிறந்த நாளின்போது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் கூறியதை நினைவு கூருவோம்

கருத்தெல்லாம் தமிழீழ மண்ணின்மேல் வைத்துக்
காலமெல்லம் ஈழவிடு தலைபற்றி நினைத்து
மருத்தவ மாமணி தரும லிங்கனார் வாழும்
மாபெரிய தமிழ்வாழ்வை வாழ்த்துவம் இந்நாளே!
பிரபாகரன் தலைமை கண்டு மகிழ்வுற்றுப்
பிறந்ததினி விடிவெனுமோர் நம்பிக்கை பெற்று
வரலாற்றில் தொண்ணூறாண் டகவை கொண்டாடும்
வைரமணி நெஞ்சத்தை வாழ்த்துவம் இந்நாளே!

மேலும் அப்பெரும் அரசியல் சிந்தனையாளர் 1983 இனக் கலவரத்தை அடுத்த ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்குக் கூறிய கருத்து.

"The future will depend on the boys and the Gun"

இத்தகைய அரசியல் சிந்தனை கொண்ட பெரியாரை அன்னார் பிறந்த நூற்றாண்டின்போது நினைவு கூருகிறது சுடரொளி வெளியீட்டுக் கழகம் (ஐயாறன்)

# மணிவிழாக் கண்ட
# வைத்திய கலாநிதி திருமதி மகேஸ்வரி சிதம்பரம் பிள்ளை

இல்லறம் என்னும் நல்லறத்தின் இல்லத்தரசியாக எல்லோருடைய மதிப்புக்குரியவரும் அனைவராலும் ''மகேஸ்'' என்று அன்புடன் அழைக்கப்படுபவருமான வைத்திய கலாநிதி மகேஸ்வரி சிதம்பரம் பிள்ளை அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா (மணி விழா) இலண்டன்- ஸ்ரீமுருகன் ஆலய மண்டபத்தில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்றது.

முப்பத்திரண்டு வருட திருமண விழாவை நிறைவு செய்யும் தம்பதிகள் இருவரும் மணிவிழாக் கண்ட பெருந்தகையினர். இருவரும் இணைபிரியாச் சோடிகள் என்ற நற்பெயரையும் பெற்றுக் கொண்டவர்கள். எல்லா நிகழ்ச்சிகளிலும் இருவரும் இணைபிரியாது பங்கு பற்றும் அற்புதக்குடும்பத்தவர்.

சட்டத்தரணி சிதம்பரம் பிள்ளை அவர்களின் சமய, சமூக, சமாதானப் பணிகளுக்கு இலைமறை காய் போலிருந்து அரும்பெரும் பணியாற்றிவரும் சக்தியாக விளங்குபவர் திருமதி மகேஸ்வரி.

அன்றைய விழாவின்போது திருமதி மகேஸ்வரி ஆற்றிய கன்னிப்பேச்சு, அவரிடம் மற்றுமோர் சக்தி ''பேச்சுவல்லமையும்'' உண்டென்பதை வெளிப்படுத்தியுள்ளது.

வாழும்போது ஒருவர் கௌரவிக்கப்படவேண்டுமென்பதில் ஓர் உண்மையுண்டு. அன்றைய விழாவிற்குப் பெருந்தொகையானோர் வருகை தந்ததொடு பல பெரியோர்களின் வாழ்த்துரைகளும் பாராட்டும் அவரது உள்ளத்தைக் குளிரவைத்திருக்கும். அதன் பிரதிபலிப்பே அவரது கன்னிப்பேச்சின் கம்பீரம். ஆனந்தக் கண்ணீரும் விட்டார். தமிழ்ச் சமூகம் தம்மீது வைத்திருக்கும் மதிப்பை வாழும்போது அறிந்துகொள்ள அப்பாராட்டுவிழா வழிவகுத்தது.

ஆண்கள் எப்பொழுதும் தங்கள் விழாவைக் கொண்டாடிவிட்டுப் பெண்களின் விழாக்களைப் புறம் தள்ளிடுவார்கள் என்ற நிலைப்பாட்டை மாற்றி மனித உரிமை பேசும் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெண்களும் சம உரிமையுள்ளவர்கள் என்பதைத் தம் மனைவியின் மணிவிழாவைச் சிறப்புடன் நடத்தி நிரூபித்துள்ளார்.

திருமதி மகேஸ்வரி தனது பேச்சின்போது ஒரு தத்துவத்தையும் வெளிப்படுத்தினார். ''முருகனை நம்பினோர் கைவிடப்படமாட்டார்'' என்பதைத் தமது அனுபவத்திலிருந்து உணர்வுபூர்வமாக ஏற்பட்ட உண்மையை வெளிப்படுத்தினார். என்றும் எப்பொழுதும் அடக்கமாகவும் அமைதியாகவும் இருந்த ஒருவரது மனத்திலிருந்து வரும் கருத்துகள் ஆழமானவை, நம்பக்கூடியவை. ஓர் ஆத்மீக தத்துவத்தை அறிந்துகொள்ளும் விழாவாக அவரது மணிவிழா எல்லோருக்கும் அமைந்துவிட்டது. அவர் தமது பேச்சின்போது இலண்டன் முருகன் பிரதம குருபூசை வழிபாட்டின் இறுதியில் பக்தர்கள் மனத்தில் தெய்வீக பக்தியை ஏற்படுத்த படிக்கும் பக்திப் பாட்டான,

**''ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கி**
**தீது புரியாத தெய்வமே**
**நீதி தழைக்கின்ற போரூர் தனிலே**
**நாயேன் பிழைக்கின்றவாறு நீ பேசு''**

என்பதைத் திருமதி மகேஸ் நினைவூட்டி எல்லோர் உள்ளங்களையும் பக்திமயமாக்கினார்.

இன்னுமொரு குடும்பப் பாசத்தையும் வெளிப்படுத்தினார். திருமணமாகி மாமி-மாமன் இல்லத்துக்குச் சென்ற தன்னை மருமகளல்லாது பெற்ற பிள்ளைபோல் நடத்திய பாரம்பரியத்தையும் குறிப்பிட்டார்.

தனது வாழ்க்கையில் ஏற்பட்ட இக்கட்டான கால கட்டங்களில் உதவியவர்களுக்கும் மணிவிழாவில் நன்றி கூறினார். பிறந்த நாள் விழாவில் எதைக் கூற வேண்டுமென்பதைக் கூறி எல்லோருடைய பாராட்டைப் பெற்றார். பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சிக்குத் திரு/திருமதி சிதம்பரம் பிள்ளை அவர்கள் நீண்டகாலமாக ஆற்றிய பணிகள் அளப்பரியன. அந்தச் சேவைகளைக் கௌரவிக்கு முகமாக அச் சங்கம் இம்மணிவிழாவை முன்னின்று நடத்திச் சிறப்பித்தமை பாராட்டத்தக்கது. இலண்டன் முருகன் ஆலயம் ஆரம்பித்த காலத்திலிருந்து திருமதி மகேஸ்வரி அவ்வாலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததனால் ஆலய நிருவாகிகளும் சிவாச்சாரியர்களும் ஆலயத்தில் நடைபெற்ற விசேட அபிஷேகத்தையும் பூசைகளையும் மிகத் திறம்பட நடத்தினார்கள்.

ஆலய மண்டபத்தில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியில் பிரித்தானிய நாட்டிலுள்ள பல ஆலய தருமகர்த்தாக்களும் மறறும் சமய சமூக மன்றங்களின் பிரமுகர்களும் வாழ்த்தியும், பாராட்டியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர். ஈழத் தமிழ் தேசியத்திற்குக் குரல் கொடுத்துவரும் திரு. நெடுமாறன் தலைமையிலான உலகத் தமிழ்ப்பேரவை வடிவமைத்த தமிழர் தேசிய உடையைச் சமூகத் தொண்டன் திரு. முருகானந்தன் அவர்கள் பிறந்த நாள் பரிசாகத் திரு. திருமதி சிதம்பரம் பிள்ளைக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

*(வண்ணப் படங்கள் எதிர்ப்பக்கத்தில்)* *

# வைத்திய கலாநிதி திருமதி. மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை மணிவிழா



மகேஸ்வரி
சிதம்பரப்பிள்ளை
தம்பதியர்



இலண்டன் முருகன் ஆலய பிரதமகுரு
கையிலை நாகநாதசிவம் குருக்கள்
தலைமையில் சிவாச்சாரியார்கள் வாழ்த்து



சைவ முன்னேற்றச் சங்க சமயச் செயலாளர்
திரு. ஆனந்த தியாகர் வாழ்த்துரை



மணிவிழா நாயகி
மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளையின் நன்றியுரை

## பெங்களூரு சிற்பக் கலை வேந்தர் வைத்தியலிங்கம் இல்லத் திருமணக் காட்சிகள்



வை.விஷ்ணுகுமார் - ஆறு.உமாமேனகா



மு.வைத்தியலிங்கம் - மல்லிகா, ஆறுமுகம் - இந்திராதேவி

# இலண்டன் சுடரொளியின் ஆசிரியர்

# ஞானலிங்கம் திருமணப்











# ஐ.தி. சம்பந்தன் அவர்களின் புதல்வர்
# பதிவு வைபவக் காட்சிகள்











# CHETTY AND COMPANY

Solicitors & Commissioners For Oaths

Conveyancing

Liquor Licensing

Wills & Probate

Criminal, Civil & Matrimonial Litigation

Police Station Advice & Assistance

Landlord & Tenant, Housing & Welfare Benefits

**Tel: 020 8521 1313**

**Fax: 020 8521 1721**

Community Legal Service

Immigration Franchise

79 Hoe Street
Walthamstow
London E17 4SA
DX 32046 Walthamstow

Email: chettyandco@compuserve.com

நூல் நயவுரை

# இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் 2008

முனைவர் அரங்க. இராமலிங்கம், சென்னைப் பல்கலைக் கழகம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் அகத்திலும் புறத்திலும் எழிலையும் ஏற்றத்தையும் கொண்டுள்ளது. இம்மலர் சிவயோகம் அறக்கட்டளையின் வெளியீடாக வந்துள்ளது. இம்மலர் ஆசிரியர் தமிழ் நெறிக்கிழார் பொன் பாலசுந்தரம் ஆவார். சிவயோகம் அறக்கட்டளைத் தலைவர் சக்தி ஆன்மிகச் சுடரொளி நாகேந்திரம் சீவரத்தினம் அவர்கள் தம் கருத்துகளை முகப்புரையாகத் தந்துள்ளார். கயிலை மாமுனிவர் சாந்தலிங்க இராமசாமி அடிகள் மலருக்கு வாழ்த்து அளித்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனம் காசிவாசி முத்துகுமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார், ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாகுட்டி ஆகிய பெருமக்கள் ஆசி வழங்கியுள்ளனர். சைவ முன்னேற்றச் சங்கம் வாழ்த்து தெரிவித்துள்ளது. மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு, தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகிய அமைச்சர் பெருமக்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்கள் அழகிய அற்புதமான பதிப்புரையை வழங்கி உள்ளார். புலவர் சிவானந்தன் அவர்கள் பாடிய புதிய தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ளது. அனைத்தும் அவளால் வந்த ஆக்கம் என்பது ஸ்ரீமத் மௌன குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அருளிய கட்டுரை ஆகும். இக்கட்டுரையில் அன்பானதும் அருளானதும் கருணை வடிவம் கொண்டதுமான சக்தியின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் பூங்கா என்பது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் எழுதிய தொல்காப்பிய உரையின் சிறுபகுதி ஆகும். இதில் வெகுளி குறித்த செய்திகள் உள்ளன. முனைவர் இரா. மோகன் அவர்கள் பாரதி போற்றும் தெய்வ வாழ்வு எனும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். இதில் பாரதி போற்றும் தெய்வ வாழ்வினைத் தாங்கும் ஆறு தூண்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் ஈழத்தின் சக்தி வழிபாட்டுத் தொன்மையை விரிவாக விளக்கியுள்ளமை போற்றற்குரியது. பரதமும் பரதத்து வமும் எனும் கட்டுரையில் அம்பிகை சீவரத்தினம் அவர்கள் தத்துவக் கருத்துகள் பலவற்றைக் கூறியுள்ளார்.

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் அன்னை அருள்மிகு முத்துமாரி குறித்து பதினான்கு அறுசீர் விருத்தங்கள் பாடியுள்ளமை பரவசமூட்டுகிறது. சிவாகமம், பாலாபிஷேகம் ஆகியவற்றின் மகிமையை அருமையாக விளக்கியுள்ளார். சிவஸ்ரீ கி. பிச்சைக் குருக்கள். சங்கின் மகிமைகளை வகை தொகை செய்து தம் கட்டுரையில் அளித்த பண்டிதர் சுந்தரனாரின் திறம் வியப்புக்குரியது.

மலர் ஆசிரியர் தமிழக சிற்பக் கலைகள் குறித்த பல்வேறு தகவல்கள் பல்வேறு வரைபடங்கள் போன்றவற்றைத் தமிழகச் சிற்பக் கலை எனும் தலைப்பில் வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கது.

அருட்கவிதையரசர் சி. வீரபாண்டியத் தென்னவன் அவர்கள் இலண்டன் முத்துமாரி அம்மன் பதிகம் பாடியுள்ளார். இது பக்திச்சுவை மிகுந்த பதிகம் ஆகும். அருள்நிதி தா. கோபாலகிருஷ்ணன் அவர்கள் திருவாசகத்தில் உள்ள நாட்டுப்புறக் கூறுகளை விளக்கியுள்ள திறம் வியப்புக்குரியது. கவிஞர் ப.வை. ஜெயபாலன் அவர்கள் திருத்தல வரலாற்றைப் பல்வேறு வரலாற்றுத் தகவல்களுடன் கூறியுள்ளார். சக்தி தரும் சித்தி பெருமை எனும் தலைப்பில் ஸ்ரீ நா. முரளி குருக்கள் எழுதிய கட்டுரை ஆன்மாக் களின் வழிபாட்டில் சக்தி வழிபாடு பெறும் இடத்தை விளக்கியுள்ளது.

The Ultimate Prayer எனும் தலைப்பில் பேராசிரியர் கோபன் மகாதேவன் எழுதியுள்ள கவிதை சீரும் சிறப்பும் மிக்கது. வானதி ரவீந்திரன் அவர்கள் இந்து யிசத்தை அனைவரும் புரிந்துகொள்ளும் முறையில் Understanding Hinduism எனும் கட்டுரை வரைந்துள்ளார். இயற்கையில் இறைவனைக் காணும் நுட்பத்தை வ. குமாரவேலு அவர்கள் விளக்கிய திறம் போற்றற்குரியது.

பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் தமிழ் இலக்கியங்களின் மூலம் உருவாக்கப்பட்ட கடவுட் கொள்கையை விளக்கியுள்ளார். இறையியல் சிந்தனைகளையும் இறையியல் சார்ந்த நம்பிக்கைகளையும் விண்ணுலகு, உயிர், வினை, குறித்த சங்க இலக்கியக் கருத்துகளையும் விரிவாகக் கூறியுள்ள திறம் அருமை. தொன்மைத் தமிழர்களின் வாழ்வையும் தாழ் வையும் குறித்த செய்திகளை வகை தொகை செய்து சமய போதனா ரத்தினம் சட்டத்தரணி யாழ். பால சுந்தரம் அவர்கள் வழங்கியுள்ளமை போற்றத்தக்கது. மெய்ஞ் ஞான வீட்டை அடைவதற்கு அஞ்ஞான இருள் அகல வேண்டும். அது அகல தேசிகன் அருள் வேண்டும். இதை அற்புதமாய்க் கவிதையரசர் சி. வீரபாண்டிய தென்னவன் அவர்கள் விளக்கியுள்ளார்.

நல்லை நகர் நிகரில் நாவலர் என்னும் தலைப்பில் நாவலரின் பன்முகப் பரிமாணங்களைச் சித்தாந்த வித்யாநிதி பேராசிரியர் சு. சண்முகவேல் விளக்கியுள்ளார். முனைவர் ஜெ.ஆர். இலட்சுமி அவர்கள் காலந்தோறும் சிற்பக் கலையும் பண்பாடும் எங்ஙனம் வளர்ந்துள்ளன என்பதை விளக்கியுள்ளார். முனைவர் மா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சைவ நன்னெறியில் உண்டான மறுமலர்ச்சியைத் தெளிவாக உணர்த்தியிருக்கிறார்.

திருமூலரின் உண்மை வரலாறு, அதைத் தெய்வச் சேக்கிழார் கூறிய தகைமை சேக்கிழார் திருமூலர் குறித்துப் பாடிய பாடல்களின் உட்கிடை ஆகிய செய்திகளைத் திருமூலர் திருமந்திரம் எனும் கட்டுரை எடுத்துரைக் கிறது. கிழக்கில் உதித்த அறிவொளியாம் தவத்திரு விபுலானந்த அடிகள் குறித்து எம். கௌரிமலர் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை செறிவு மிக்கது. அறிவியல் நோக்கில் இலக்கியம் எப்படி வளர்ந்து உள்ளது என்பதைப் பேராசிரியர் முனைவர் கி. இராசா அவர்கள் அறிவியல் அணுகுமுறை கொண்டு விளக்கி யுள்ளார். முனைவர் கி. சாந்தா பழனிச்சாமி அவர்கள் தெய்வ சேக்கிழார் கூறிய பண்பாடுகள் குறித்துப் பெரிய புராணத்தில் பண்பாடு எனும் கட்டுரையில் கூறிய திறம் பாராட்டத்தக்கது.

மு. ஞானப்பிரகாசம் அவர்கள் சிதம்பரம் எனும் தலைப்பில் சிதம்பரம் குறித்தும் சிதம்பரத்திற்கும் ஈழத்து மக்களுக்கும் இடையேயான பெருமைமிகு தொடர்புகள் குறித்தும் விரிவாகச் சொல்லியுள்ளார். சிதம்பரம் ஒரு மறு தரிசனம் எனும் தலைப்பில் இன்றைய பரிசீலனைக் குரிய அரிய கருத்துகளைத் தொகுத்துத் தந்துள்ளார். இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து இந்து சமயப் பெரியார்கள் குறித்துப் பல்வேறு செய்திகளைத் தொகுத்துக் கூறியுள்ளார் திரு. ப. கணேசலிங்கம் அவர்கள். இலண்டனில் உள்ள வெம்பிளி நடராசர் திருக் கோயில் குறித்தும் பராசக்தி ஆனந்தமடைந்த ஒன்பது நாள்கள் குறித்தும் இலண்டன் தேர் அமைப்புக் கலை குறித்தும் மலரில் போதுமான தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

ஆரோக்கிய வாழ்விற்கான பல கருத்துகளை டாக்டர் எஸ். ஞானச்செல்வன் அவர்கள் Thought for Healthy life எனும் தலைப்பில் கூறியுள்ளமை போற்று தற்குரியது. சைவத்தில் மாயை பெறும் இடத்தை Concept of Maya in Saivism எனும் கட்டுரையில் சித்தாந்த வித்யாநிதி பேராசிரியர் எஸ். சண்முகவேல் அவர்கள் அற்புதமாக விளக்கியுள்ளார். தமிழ்த் திருஞான சம்பந்தனான ஞானசம்பந்தன் எனும் தலைப்பில் பா. குஞ்சிதபாதம் அவர்கள் திருஞானசம்பந்தரின் சிறப்புகளைச் சீராகக் கூறியுள்ளார். தொல்காப்பியர் கூறும் கடவுள் வணக்கம் குறித்துச் சில சான்றுகளுடன் முனைவர் சாம்பசிவனார் விளக்கியுள்ளார். தமிழ் கற்போம் தரணியை வெல்ல எனும் தலைப்பில் முனைவர் கு. ஞானசம்பந்தன் எழுதியுள்ள கட்டுரை தமிழின் எதிர்காலம் குறித்து ஆய்வு நோக்கில் அற்புத மாய் விளக்கியுள்ளது. சைவர்களுக்கு ஒரு நந்திக்கொடி எனும் தலைப்பில் ஐ.தி. சம்பந்தன் அவர்கள் எழுதிய கட்டுரை சைவத்தில் நந்தி பெறும் இடத்தை நன்றாக விளக்கு கிறது. முதுமுனைவர் ம.சா. அறிவுடை நம்பி அவர்கள் திருமந்திரம் கூறும் நான்கு நெறிகள் முப் பொருள் ஆகியவை குறித்து எளிமையாக விளக்கி யுள்ளமை போற்றற்குரியது. சைவ சமயத்தின் பரந்த நோக்கையும் சைவ சித்தாந்தத்தின் சிறப்புகளையும் முனைவர் கே. பாக்கியம் அவர்கள் சைவ சித்தாந்தச் செந்நெறிகள் எனும் தலைப்பில் அற்புதமாய் விளக்கி யுள்ளார்.

ஞான ஒளிபரப்பிய மாமுனிவர் சிவயோக சுவாமிகள் குறித்த அரிய செய்திகளை ஆசிரியர் தந்து உள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள கொழும்புத் துறைச் சந்நிதியில் உள்ள யோகநாதர் சமாதியைத் தரிசித்து வணங்கும் பேற்றினையும் அடியேன் பெற்றது என் பேறு எனலாம். சிவநெறிக் கவிஞர் இராகவன் முத்து அவர்கள் சிந்தை தெளிவுக்குச் சிவனைச் சிந்தனை செய் மனமே எனக் கூறுகிறார். சிவன் குறித்த முக்கியத் தகவல்கள் தந்துள்ளார். புலம்பெயர் வாழ்வில் சைவம் பெறும் இடத்தை அற்புதமாக விளக்கியுள்ளார் பாவலர் கந்தையா இராஜமனோகரன் அவர்கள். காரைக்கால் அம்மையாருக்கு முக்தி வழங்கிய ஆடலரசன் (நடராசர்) குறித்து மலர் ஆசிரியர் விளக்கியுள்ளார். த. மேரி ஜான்சி ராணி அவர்கள் சைவ சித்தாந்தம் கூறும் பக்தி நெறி, வினைக்கோட்பாடு ஆகியவற்றை வெகுசிறப்பான முறையில் விளக்கியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இளைஞர் கள் குறித்தும் இந்து மதத்தின் இன்றைய போக்கு குறித் தும் கி. புண்ணியமூர்த்தி அவர்கள் சீராகச் செப்பி யுள்ளார். கோயில்களின் முக்கியத்துவத்தை ஓதுவார் கதிர் பாரதி அற்புதமாய் விளக்கியுள்ளார். சைவ ஆகமங்களில் காலப் பழைமை குறித்தும் சாலப் பழைமை குறித்தும் செந்தமிழ் வாரிதி இரா. செல்வ கணபதி அவர்கள் சிறப்பான முறையில் கூறி இருக்கிறார். அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக் கோயில் விசேட தினங்கள் மலர் ஆசிரியரால் கூறப் பட்டுள்ளன. பேராசிரியை பரிமளா இந்திரமோகன் அவர்கள் திருக்குறளில் கூறப்பட்ட பக்தி உணர்வுக் கருத்துகளைத் தொகுத்து வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கது.

ஈழத்து இந்து சமயத்தவரிடையே ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்களைச் செஞ்சொல் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் பட்டியலிட்டுள்ளார். வானி யல், சோதிடம் குறித்த முக்கிய கருத்துகள் சிலவற்றை செ. மோகனப்பிரியா தொகுத்துத் தந்துள்ள திறம் அறிந்து மகிழத்தக்கது. தமிழகத்தின் இணைப்புப் பால மாகக் கவிஞர் இரா. இரவி திகழுவதை மலர் ஆசிரியர் கூறியுள்ளார். The Oldest Religion Hinduism எனும் தலைப்பில் சிறப்பான கட்டுரை ஒன்றும் மலரில் இடம் பெற்று உள்ளது.

இலண்டனில் ஆன்மிகத்தையும் சைவத்தையும் வளர்த்து வருபவரும், இத்திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவை நடத்தவும், விழா சிறப்பு மலரை வெளி யிடவும் திட்டமிட்டுப் பணியாற்றி வருபவருமான சக்தி ஆன்மீகச் சுடரொளி நா. சீவரத்தினம் அவர்கள் உலகத் தமிழர்களின் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய வராவார். இம் மலரைச் சீராகவும் சிறப்பாகவும் வெளி வரப் பாடுபட்ட தமிழ் நெறிக்கிழார் பொன். பால சுந்தரம் அவர்களுக்குத் தமிழுலகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. இம்மலரை அற்புதமாகப் பதிப் பித்த உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அவர்கள் நம் பாராட்டிற்கு உரியவர்.

இதுபோன்ற தமிழ்ப் பணிகளே தமிழுக்கும் தெய்வத் தமிழுக்கும் அரண் ஆகும். ✱

# வருக தமிழர் பொற்காலம்!

நா. மகேசன், ஆஸ்திரேலியா

இமயம் தொட்டுக் குமரிவரை இருந்தது தமிழர் வளநாடு
சமயம் இதுவோ அதுசொல்ல சச்சரவன்றோ வந்துவிடும்
அன்று தமிழர் பொற்காலம் அழிந்து ஒழிந்து போனதனால்
இன்று தமிழர் இருக்கின்ற இடங்கள் உலகிற் பலவாகும்.

இன்று தமிழ்க் கொருநாடு இருக்குது இந்தியத் தமிழ்நாடு
என்று யாரும் சொன்னாலோ ஏளனமாகப் பார்த்துருமித்
தண்ணீர் கூடத் தரமாட்டோம் தமிழர் நாடு என்றாயேல்
மண்ணிது இந்திய மண்ணென்பார் மாண்புத் தமிழுக் கேதாமோ?

சோவி யத்து வல்லரசு சுக்கு நூறாய்ப் பிரியுதின்று
ஆவி போல அமெரிக்கா அதற்குத் தூபம் இடுகுதின்று
குட்டிக் குட்டி நாடுகளைக் கோத்து வைத்த வல்லரசு
விட்டு விட்டு விலகிநின்று வேடிக்கை பார்க்குதின்று.

உலகம் எல்லாம் பல்லினமாய் உடைந்து மக்கள் வாழ்கின்றார்
பலம் மிகுந்த பெரும்பான்மை பாரில் சிறியதை நசுக்குவதால்
இனங்கள் சேர்ந்து வாழ்வதற்கு இல்லை இடந்தான் உலகிலென்று
தினந்தினம் இனங்கள் பிரிந்தின்று தேசங்களாய் வளர்வ துண்மை.

ஐக்கியமாய் நாடுகள் சேர்ந்து அமைத்த சபையின் அரங்கினிலே
முக்கியமாய் நாடுகள் பலவும் முந்திக் கொண்டு இடம்பிடித்தல்
இந்தக்காலம் உலகில் இயற்கை இதனை மறுக்க எவருமில்லை
அந்தக்கண் ஓட்டத்தில் தமிழர் ஆழ்ந்து சிறிது சிந்திப்போமே.

குட்டிக் குட்டி இனங்களின் கொடிகள் பறக்கும் ஐநாவில்
எட்டுக் கோடித் தமிழருக்கு இல்லையொரு கொடியங்கே
தட்டிப் பறித்து விட்டார்கள் தமிழர் நாடு தனையன்றே
கட்டித் தமிழர் அமுதாலும் கடைந்த மோரும் தயிராமோ?

யாதும் ஊரே யாவரும்கேளிர் யாமாக்கும் குடியல்லோம் என்றும்
தீதும் நன்றும் பிறர்தரவாரா திண்ணம் இவற்றைப் பேணினர்தமிழர்
உலகம் அவர்க்கு உதவினதென்ன ஊருமக்கில்லை ஒடுங்கி இருமெனப்
பலபலநாட்டில் பாவிகள் தமிழர் பார்க்கின் றோமே புத்தாயிரமாண்டு.

ஐக்கிய நாட்டு அரங்கில்தமிழர் அங்கம் வகிப்பதே தமிழர்பொற்காலம்
எக்கடல் தாண்டி இருப்பினும்தமிழர் ஏற்றத்துக்கோர் கொடியும் நாடும்
இருபத் தோராம் இனியநூற்றாண்டில் ஈழத் தமிழர் எடுத்திடவேண்டும்
பெருமிதம் உலகத் தமிழர்க்கதுவே பிணக்கில்லாத வாழ்வுக்கு வழியே!

யூதர் உலகில் வாழாஇடமில்லை யூகமாக அமைத்தனர் இஸ்ரேல்
பாதகம் அதுவில்லை என்றதுஉலகு பண்டுதொட்டு வாழ்ந்தவர் ஈழவர்
அண்ணன் ஆசனிக் அருந்தும்போது அடங்காப் புலியாய்ப் பாய்தல்தவறோ
உண்மைக் கதைகள் உலகறியாது உரைத்துக் காட்டல் தமிழர்கடனே.

உலகத் தமிழர்க் கொருதனிநாடு உதயம் ஆவதே பொற்காலம்
சிலபலசிக்கல் இருப்பினும் ஈழவர் சிந்திய இரத்தக் கறையதுபோகப்
பாகப் பிரிவினை இல்லதுவேறிலை பாகிஸ்தானுக் கொருதனி நாடு
ஆகவில்லையோ வங்காள தேசம் அதுபோற் சிங்களம் ஈழமிருநாடே.

இதுவே பொற்காலம் இலங்கைக்கு இனிய பொற்காலம் வருகவருக
அதுவே உலகத்தமிழரின் பொற்காலம் அக்காலம் அண்மித்து வருகவருக
தமிழர்க் கென்றொரு தனிக்கொடிபறந்தால் தலைநிமிர்வார்கள் உலகத் தமிழர்!
அமிழ்தமதுவே தமிழர் பொற்காலம் ஆண்டவா அக்காலம் வருகவருகவே.

## *Tamil is a living language in Mauritius*

**-Vice President A.V. Chettiar**

Mauritius Vice President Chettiar encourages Seychelles Thamil children to learn their mother tongue seriously.



"A Thamil person should be able to read, write and speak Thamil if he / she is to be called a Thamil. Mothers and sisters should encourage music and dancing if the younger generation is to follow our rich traditional cultural values. Having done enormous work to promote Thamil language in Mauritius, I feel proud that Thamil is a living language in Seychelles. On my part, I will do every thing possible to encourage this centre in the promotion of Thamil language teaching and other Thamil cultural values." so said the Virudhunagar born Thamil speaking Vice-President of Mauritius HE. A.V. Chettiar at a reception given to him by the Seychelles Thamil Cultural Development Centre (STCDC) on the 19th January in the Vivekananda Hall of the Indian High Commission in Victoria.






# தமிழ்ப் புத்தாண்டுப் போராட்ட வரலாறு

எழுத்து வித்தகர் வி. விவேகானந்தன், மலேசியா

தமிழ் நாட்டில் தை முதல் நாளான பொங்கல் நாளன்றே தமிழ்ப் புத்தாண்டுத் தினம் என்பதை நிலை நாட்டுவதற்கும், பரவலாக அவ்வாறே கொண்டாடுவதற்கும் ஒரு நூற்றாண்டுக் காலமாக ஓர் இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த இயக்கம் மலேசியாவிலும் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக ஒரு போராட்டமாகவே நடந்து வருகிறது.

மலேசியாவின் தோட்டப்புறங்களுக்குத் தொழிலாளர்களாகத் தமிழர்கள் அழைத்து வரப்பட்ட நாளிலிருந்தும் நகர்ப்புறங்களுக்குத் தமிழர்கள் வர்த்தகர்களாகவும் அரசு ஊழியர்களாகவும் குடியேறிய நாளிலிருந்தும் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்திலிருந்து தோட்டப்புறங்களில் பொங்கல் திருநாள் எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதை வரலாற்று ஆசிரியர்களும் சமுதாய ஆய்வாளர்களும் நன்கு விவரமாகக் குறித்து வைத்துள்ளனர்.

பொங்கல் திருநாளுக்கு முதல் நாளாகிய போகிப் பண்டிகையன்று, தோட்டங்களில் உள்ள வீடுகளில் பயன்படுத்திப் பழையதாகிவிட்ட கூடைகள், கூட்டுமாறு, மிதியடிகள் போன்ற பொருள்களை பெண்கள் கும்பலாகப் போட்டு எரித்துவிடுவார்கள். எரிக்க முடியாத மற்றச் சில பழைய பொருள்களைக் கழித்து விடுவார்கள். தமிழகத்திலும் இந்த வழமை இன்றளவும் நீடிக்கிறது. இதன் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், தை முதல் நாள் பொங்கலன்று பிறக்கும் புத்தாண்டுத் தினத்தில் பழையனவற்றைக் கழித்துப் புதிய பொருள்களைக் கொண்டு ஒரு புதிய காலகட்டத்தைத் தொடங்குவதாகும். வீடுகளுக்கும் புதுவண்ணம் பூசப்பட்டுப் புதுத் தோற்றம் கொடுக்கப்படுகிறது. புத்தாண்டிற்கு முதல் நாளன்று பழைய தேய்ந்துவிட்ட பொருள்களைப் ''போக்கி விடும் பண்டிகையே'' போகிப் பண்டிகையாக மருவியிருக்கிறது.

ஆதிகாலத்திலிருந்து தமிழர்கள் வாழும் எல்லா மண்டலங்களிலும் இந்த வழமை பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே. தை முதல் நாளில் புத்தாண்டுக் கொண்டாடும் மரபே இப்போது புத்துயிரூட்டப்பட்டுள்ளது.

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய நூறு இலக்கியங்களில் தைத் திங்களின் பிறப்புச் சிறப்பாகக் கூறப்பட்டிருப்பதை நம் புலவர்களும் தமிழறிஞர்களும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பழங்காலத்தில் தமிழகம் முழுவதும் பொங்கல் திருநாளே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் மதுரையிலும் தஞ்சையிலும் தெலுங்கு நாயக்கர் ஆட்சி ஏற்பட்ட பிறகே அவர்களைப் பின்பற்றித் தமிழகத்திலும் தீபாவளி கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. இதை ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

பொங்கலன்று தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தைத் தமிழர்கள் மீண்டும் கொண்டாட வேண்டும் என்று தமிழ் நாட்டில் தமிழறிஞர்கள் குரல் கொடுத்த நாளிலிருந்தே அதன் எதிரொலி இங்கும் கேட்கத் தொடங்கிவிட்டது.

**தமிழர்களின் உண்மையான மரபு :**

தமிழர்களின் உண்மையான மரபை மீண்டும் நிலை நிறுத்துவதற்காக, 1921-ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., நாவலர் வேங்கடசாமி நாட்டார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பேராசிரியர் கா. நமச்சிவாயர் முதலிய தமிழறிஞர்கள் ஒன்றுகூடி, திருவள்ளுவர் ஆண்டுக் காலத்தை நிருணயம் செய்ததும் அதைத் தமிழ் கூறு நல்லுலகம் ஏற்றுக்கொண்டதும் வரலாறு ஆகி விட்ட நிகழ்வுகள்.

மலேசியத் தமிழர்களும் பரவலாகத் திருவள்ளுவர் ஆண்டைப் பின்பற்றி வருகின்றனர். பொங்கலன்று தமிழ்ப் புத்தாண்டுத் தினத்தைக் கொண்டாடி வருகின்றனர்.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே இதற்கு எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது. வைதீகர்களான சனாதனவாதிகள் பொங்கல் என்பது சூரியனை வழிபடும் சங்கராந்தி என்னும் இந்துப் பண்டிகைதான் என்று எதிர்ப்புக் குரல் எழுப்பி வந்தனர். ஆனால், இந்த எதிர்ப்புக் கூச்சல் எத்தகைய விளைவையும் ஏற்படுத்தவில்லை. இதற்குக் காரணம், ஏற்கெனவே, தமிழர் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

இந்த மாற்றங்களுக்குக் காரணமான விழிப்பை ஏற்படுத்தியது. 1929 இல் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் இந்நாட்டிற்கு மேற்கொண்ட வருகை, பெரியாரின் வருகையும் அவரின் புயல் வேகப் பேச்சுகளும் தமிழர்களிடையே பெரும் போராட்ட உணர்வை உண்டாக்கியது. அதன் பிறகே இந்நாட்டுத் தமிழர்களிடையே பல்வேறு பொது அமைப்புகளும் சீர்திருத்த இயக்கங்களும் தோன்றின. தமிழர்கள் தங்களின் உண்மையான வரலாற்றை உணர்ந்து கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கான போராட்டங்களைத் தொடங்கினர். இந்நாட்டுத் தமிழர்களிடையே வேரூன்றியிருந்த சாதி வேறுபாடுகளும் தகர்க்கப்பட்டன. பொங்கல் தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள் கொண்டாடுவதற்கு மனம் பக்குவடைந்து அடித்தளம் அமைந்தது. நாம் தமிழர்கள் என்னும் உணர்வு மேலோங்கியது.

**பெரியாரின் வருகை :** 1929-இல் பெரியார் வருகையே ஒரு போராட்டமாகத்தான் இருந்திருக்கிறது. பெரியாரின் வருகையைத் தடை செய்வதற்கு சமய வாதிகள் பெரும் முயற்சியில் இறங்கியபோது, சீர்திருத்தவாதிகள் ஒன்று திரண்டு அதை முறியடித்துப் பெரியாருக்கு மாபெரும்

வரவேற்புகளை நல்கியிருக்கின்றனர். 1929 இல் மட்டு மின்றி, 1954 இல் பெரியார் இரண்டாவது முறை இங்கு வந்தபோதும் இத்தகைய போராட்டம் நடந்திருக்கிறது. இந்தப் போராட்டங்களின் உணர்வு தான் இந்நாட்டில் பொங்கல் புத்தாண்டு-தமிழர் திருநாள் விழா எடுப்ப தற்கும் வித்திட்டது என்றால் அது மிகையாகாது. பொங்கல் புத்தாண்டு-தமிழர் திருநாள் விழாக்களை முன்னின்று நடத்தியவர்களில் பெரும்பாலோர் பெரியாரின் தொண்டர்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

பெரியாரின் சீர்திருத்த இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டவரும், தமிழர் திருநாள் விழா வைச் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் பரப்பியவரு மான தமிழவேள் கோ. சாரங்கபாணி, சிங்கப்பூரில் முதலாவது தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது, 1952-ஆம் ஆண்டு சனவரி 13-ஆம் தேதியன்று, தமது தமிழ் முரசு பத்திரிகையில் அதுபற்றி ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறார். ''போவோம் புறப்படுங்கள். எல்லோ ரும்'' என்னும் தலைப்பிட்டு அவர் எழுதியுள்ள அத் தலையங்கத்தில் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார்.

''தமிழர் திருநாள் தொடக்கவிழா சிங்கப்பூர்த் தமிழ் மக்களால் இன்று கொண்டாடப்படுகிறது. தமிழ்த் திருநாளுக்கு உரிய நாள் தைத் திங்கள் முதலாம் நாள், அதுவும் பொங்கல் புதுநாள். அந்த நாளைத்தான் அந்தப் பண்புடைய பெரிய தினம். இன்று மாலை சிங் கப்பூர்த் தமிழ் மக்கள் ஒன்று கூடித் தமிழர் திருநாள் கொண்டாடுகிறார்கள்'' என்று எழுதியிருக்கிறார்.

பொங்கலுக்குச் சங்கராந்தி என்னும் சமயச் சாயம் பூசப்பட்டுவிட்டதால், கிறித்துவ, இசுலாமிய தமிழர்கள் தமிழர் திருநாளுக்கு வரமாட்டார்கள் எனக் கருதிப் பொங்கலுக்கும் தமிழர் திருநாளுக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை. திருநாள் என்பது தம்மால் புதிதாக உருவாக்கப்பட்டது என்னும் தோற்றத்தையும் அவர் கொடுத்தார்.

தமிழ் முரசில் தமிழவேள் இதை ஒரு போராட்ட மாகவே நடத்தி வந்தார். 1960களில் அன்றைய தமிழ் நேசனில் கே.சி. அருண், கனகசுந்தரம் ஆகியோருடன் யானும், ''பொங்கலே தமிழர் திருநாள் என்னும் கோ.சா. விற்கு'' எதிராக நீண்ட மறுப்புக் கட்டுரைகள் எழுதியிருக் கிறேன். சிங்கப்பூரில் வெளிவந்து கொண்டிருந்த ''முன் னேற்றம்'' என்ற இதழில் அதன் ஆசிரியர் ஆர். வெற்றி வேல் பலமுறை கோ.சா.வைக் கடுமையாத் தாக்கிக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

மலேசியாவில் பொங்கல் விழா கொண்டாடு வதில் திருச்சுடர் கே.ஆர். இராமசாமி தலைமையில் ம.தி.க.வும் முக்கியப் பங்காற்றியது.

**பொங்கல் விழா சமயச் சார்பற்ற விழா :** உண்மையில் பொங்கல் விழா ஒரு சமயச் சார்பற்ற தினமாகவும் விவசாயத்தின் பெருமையைக் கூறும் உழவர் திருநாளாக வும் உழைப்பின் மேன்மையைப் போற்றும் தொழிலாளர் தினமாகவும் ஆதிகாலத்திலிருந்து கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. அண்மைக்காலத்தில்கூட, இந்துக்கள் அல்லாத மற்றச் சமயங்களைச் சேர்ந்த நெல் விவசாயி கள் பலர் தங்கள் வயல்களில் பொங்கல் வைத்துக் கொண்டாடியிருக்கின்றனர்.

பிற்காலத்தில் இந்த நன்னாளில் பிரார்த்தனை களையும் பூசைகளையும் சடங்குகளையும் இந்துக்கள் சேர்த்துக் கொண்டனர். இதனால் அந்த அடிப்படைத் தத்துவம் மாறிவிட்டதாக அர்த்தமாகிவிடாது.

எடுத்துக்காட்டாக, திருமண விழா என்பது அடிப்படையில் ஒரு வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு. இதைப் பெரும்பாலோர் கோயில்களில் அருச்சகர்களை வைத்துப் பூசை, வேள்வி முதலிய சமயச் சடங்கு களுடன் செய்கின்றனர். இதனால் திருமணம் என்பது இந்து சமயச் சடங்காக அல்லது இந்து சமய விழாவாக ஆகிவிடுமா? கிறித்தவ தேவாலயங்களிலும் திருமணங் கள் நடைபெறுகின்றன. இதனால் அவை கிறித்தவ சமய விழாவாக ஆகிவிடமாட்டா.

பகுத்தறிவாளர்கள் இத்தகைய சமயப் புரோகிதர் கள் இல்லாமல் மேடைச் சொற்பொழிவுடன் திருமணங் களை நடத்துகின்றனர், இன்னும் சிலர் பதிவகத்தில் திருமணத்தைப் பதிவு செய்வதுடன் சரி. எனவே எப்படி நடந்தாலும் திருமணம் என்பது அடிப்படையில் இரு மனங்களின இணைப்பு விழா, அதே போன்று தமிழ்ப் புத்தாண்டுத் தினமாகிய பொங்கலை அவரவர் விருப்பப்படி கொண்டாடுவதில் தவறில்லை.

புத்தாண்டுத் தினமாகப் பொங்கலை வீடுகளி லும் பொது நிகழ்ச்சியாக மேடையிலும் திடலிலும் கொண்டாடலாம். தமிழர் திருநாளாக விழா எடுக்க விரும்புபவர்கள் அவ்வாறே செய்யலாம். இரு குழுவினரும் மோதிக்கொள்ள வேண்டியதில்லை.

அதே போன்று சமயப் பற்று மிகுந்தவர்கள் வீடுகளிலும் கோயில்களிலும் பூசைகளுடன் பொங்கல் வைப்பதை யாரும் தடுக்க முடியாது. ஆனால், பொங்கல் என்பது தமிழர் புத்தாண்டு என்னும் அடிப்படை உண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொங்கல் ஓர் இந்து சமய விழா என்னும் மாயத் தோற்றம் அகற்றப்பட்டுவிட்டால், எல்லாச் சமயங் களைச் சேர்ந்த தமிழர்களும் தயக்கமின்றி ஒன்றுகூடிப் பொங்கலைச் சிறப்பாகத் தமிழர் புத்தாண்டுத் தினமாகக் கொண்டாட வழிபிறக்கும் என்னும் வாதத்தையும் நாம் முற்றாகப் புறந்தள்ளி விட முடியாது.

சீனர்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சீனப்புத்தாண்டை அமர்க்களமாகக் கொண் டாடி மகிழ்கின்றனர். தாங்கள் சீனர்கள் என்னும் இன ஒற்றுமையையும் சீனப்பண்பாட்டையும் அவர்கள் மிகத்திறமையாகத் தற்காத்துக் கொள்கின்றனர்.

அத்தகைய சமுதாய ஒருமைப்பாட்டைத் தமிழர் களிடையே உருவாக்கவும் வளர்க்கவும் பொங்கல்-தமிழர் திருநாள் பெரும்பங்காற்ற முடியும். இதற்குத் தமிழர் மனங்கள் ஒருமைப்படவேண்டும். *

*நன்றி : தமிழாலயம்,*

# GLOBAL PEACE SUPPORT GROUP

6 Shelly Avenue, London, E126SW
Tel. No. -44-(0) 208 586 7856, -44-(0) 208 280 2871, -44-(0) 208 997 1057
Email : worldpeace_peacefor_humanitarian@yahoo.co.uk

அனைத்துலக சமாதான ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன்

## சமாதானப் பாதையில் ஒரு பயணம்

## இலங்கை இனப்பிரச்சினை மீதான சர்வதேசக் கருத்தாடல்

கிழக்கு இலண்டன் பல்கலைக்கழகம் (University of East London)
Dockland Campus, University Way, London E16 2RD

**22, 23-3-2008 சனி, ஞாயிறு காலை 9 மணி - மாலை 5.30 மணி**

அரை நூற்றாண்டுக்கும் மேலாக அடிமைப்பட்டு அல்லலுறும் ஈழத் தமிழர்கட்கு ஒரு ஏற்ற தீர்வை காணும் வகையில் அகில உலக அறிஞர்கள், மனித நேயப் பண்பாளர்கள் மற்றும் அரசியல் வல்லுநர்கள் கூடிக் கலந்துரையாடும் நிகழ்வு.

இக்கருத்தரங்கில் ஒரு பார்வையாளராகக் கலந்துகொள்ள விரும்பினாலோ அல்லது வேறு வகையில் ஆதரவளிக்க விரும்பினாலோ தயவுசெய்து தாமதம் செய்யாது பின்வரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

02085867856-க. குணபாலசிங்கம், 02084264851 - ப. நாதன், 02089971057 - ச. பாலசுந்தரம்

**அனுமதி இலவசம். குறிப்பிட்ட இருக்கைகளே உள்ளதால் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.**

Committee of Management

Mr. K. Kunabalasingam, M.Sc., Accountant (Chairman);
Mr. K.P. Nathan, LLM (Bristol), Solicitor (senior Vice chair); Dr. S. Poologanathan, MBBS; FRCS (Vice Chair);
Mr. S. Balasundaram Rtd SLAS (Secretary); Mr. S. Krunalingam Accountant; Dr. (Mrs) Francis, MBBS; FRCP; FRC,
Mr. R.D. Ratnasingam Solicitor; Mr. R. Rajamaheswaran, M.Sc., Mech. Engineer; Mr. Neminathan, Solicitor;

# சீசெல்சு நவசக்தி விநாயகர் கோவில் குடமுழுக்கு விழா



இந்து மகா சமுத்திரத்தில் சிதறிய முத்துக்கள், விஷ ஜந்துக்களே இல்லாத சீசெல்சு, திருவோடு காய்க்கின்ற தெய்வீக நாடு, எந்தவிதமான குழப்பமோ சலசலப்போ இன்றி உலகளாவிய பாராட்டைப் பெற்று எந்த நாட்டிலும் இல்லா ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் அமைதிப் பூங்காவாக விளங்கும் நாடு, இன மத வேறுபாடின்றி மக்கள் புரிந்துணர்வுடன் வாழும் நாடு, இந்நாட்டில் கிட்டத்தட்ட 4000 இந்து சமய மக்கள் இருக்கிறார்கள்.

இங்கு 1984ஆம் ஆண்டு ஆனி மாதம் 24ஆம் நாள் பஞ்சலோகத்தினால் விநாயகர், நடராசர் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் அபிஷேகத்துடன் பூஜைகள் நடைபெற்று வந்தன. பின் அங்குள்ள இந்து மக்களால் ஆலயத்திற்கென வாங்கிய நிலத்தில் மண்டபம் அமைத்து விக்கிரகங்கள் பிரதிஷ்டை பண்ணப் பெற்று 1992 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் குடமுழுக்கு நடத்தப்பட்டது. இங்கு எல்லா இந்து சமய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. விநாயகர் சதுர்த்தி விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

அண்மையில் இவ் ஆலயம் எழுபது இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது. தொடர்ந்து 48 நாள்களுக்கு மண்டலாபிஷேகமும் நடந்தேறியது.

விருது நகரில் பிறந்தவரும் மொரிசியசு நாட்டின் அதிபருமான ஏ.வி. செட்டியார், சீசெல்சு நாட்டின் துணை அதிபர் ஜோசப் பெல்மான்டு, இந்தியத் தூதர் அருண்குமார் கோயல், அமைச்சர் பெருமக்கள், தருமபுர ஆதீனம் சுந்தரமூர்த்தி அடிகளார், 20க்கும் மேற்பட்ட தமிழகக் குருக்கள் இக் குடமுழுக்கு விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

சீசெல்சு தமிழ் குடும்பத்துச் சிறுவர்களின் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும் அங்கு வாழும் இந்தச் சமய மக்களின் கலை, கலாச்சார, சமய வளர்ச்சிக்காகவும் பெரிதும் ஆர்வம் காட்டுபவர் திரு. வி. சிவசுப்பிரமணியம். இவர் எழுதிய சீசெல்ஸின் பத்தாண்டு வளர்ச்சி என்னும் நூலில் அந் நாட்டைப் பற்றிய முழு விவரங்களையும் காணலாம்.

# சிவராத்திரியும் சிவ வழிபாடும்

'**சி**வம்' என்ற சொல்லுக்குத் துன்பத்தை நீக்கி இன்பத்தை அளிப்பவர் என்று பொருள். கோபக்காரர், அழிப்பவர், துடைப்பவர் என்று சொல்லுவதெல்லாம் எவ்வளவு பெரிய (பாவம்) பொய் என்று நாம் உணர வேண்டும்.

மாசி மாதம் அமாவாசைக்கு முன்னாள் (சதுர்த்தசி திதி) சிவராத்திரி எனக் கொள்ளப்படுகிறது. சிவபெருமானார் வழிபாட்டிற்கு உரிய இரவு என்பது பொருளாகும். ஏன் இந்த நாளைச் சிவராத்திரி என் கிறோம் என்று சிந்திப்போம்.

திருமாலும் பிரமனும் தாமே உயர்ந்தவர்கள் என்று சண்டையிட்டுக் கொண்டார்கள். இவர்களது ஆணவத்தைப் போக்குவதற்காக, அன்பே வடிவான சிவ பரம்பொருள் அவ்விருவருக்கும் இடையே, அடியும் முடியும் காணமுடியாத ஒரு சிவசோதியாய் - பேரொ ளிப் பிழம்பாய்த் (நின்றார்) தோன்றினார். அந்த நாள் தான் சிவராத்திரி எனப்படுகின்றது.

அக்காலம் மாசி மாதம், அமாவாசைக்கு முன் நாள் (சதுர்த்தசி திதி) திங்கட்கிழமை, திருவோண நட்சத் திரம் கூடிய மேலான புண்ணிய காலம்.

அப்படிப் பேரொளிப் பிழம்பாய்ப் பரம்பொருள் எழுந்தருளிய காலம், இரவு 11.30 மணிக்குமேல் 1.00 மணி வரையிலான காலமாகும்.

சிவராத்திரி விரதம் இருத்தல் என்பார்கள். வட மொழியில் இதனை உபவாசமிருத்தல் என்பார்கள். உப என்றால் சமீபம்; வாசம் என்றால் வசித்தல். அதாவது, உபவாசம்-விரதம் எனும் சொல்லிற்குச் சமீபத்தில் வசித்தல் என்று பொருளாகும். சிவராத்திரி நாள் முழு வதும் நாம் சிவபெருமானுக்குச் சமீபத்தில் இருக்க வேண்டும் என்பது பொருளாகும், அன்று முழுவதும் நம் மனம் இறைச் சிந்தனையிலேயே இருக்க வேண் டும். மனம், மொழி, மெய் (உடம்பு) இம்மூன்றும் சிவ ராத்திரி நாளன்று சிவத்திடமே இருக்க வேண்டும். நிறைய உணவு உட்கொண்டால் மனம் சிவசிந்தனையில் மூழ்காது, தூக்கம் வரும்; உலகியலில் செல்லும். எனவே, சிவராத்திரி அன்று பகலில் பால், பழம் இவை உண்டும், இரவில் உறக்கம் வராமல் இருக்க உணவு உண்ணா மலிருந்தும், சிவ வழிபாட்டினைச் செய்தல் நலம்.

அன்று இரவு முழுவதும் கண் விழித்துச் சிவ சிந்தனையுடன் இருக்க வேண்டும். சிவாலயம் வலம் வருதல், திருமுறைகளை ஓதுதல், திருஐந்தெழுத்தினைச் (சிவாயநம) செபித்தல், கூட்டு வழிபாடு செய்தல் ஆகியவற்றைச் செய்து, அன்று இரவைக் கழித்தல் நலம். இந்த ஒருநாள் வழிபாடு ஆயிரம் நாள் சிவபூசை செய்த பலனை அளிக்கும் என்பது அருளாளர்கள் அனுபவத் தால் கூறியுள்ள உண்மையாகும்.

சிறிய வழிபாட்டினால் பெரிதும் மகிழ்ச்சி அடை பவர் சிவபெருமானார். அதிலும் சிவராத்திரி போன்ற புண்ணிய நாள்களில் வழிபடுதல் அளவிலா நலன்களை அளிக்கும்.

எல்லா உயிர்களும் ஒடுங்கும் கற்ப முடிவின் இரவில் நான்கு யாமத்தும் உமையம்மையார் சிவபெரு மானாரை விதிப்படி பூசித்து மகிழ்ந்த இரவே சிவராத் திரி என வழங்கப் பெறுகின்றது. இந்நாளில் வழிபடு கின்ற அனைவருக்கும் எல்லா நன்மைகளையும் அருள வேண்டும் என்று இறைவி வேண்ட, இறைவரும் அவ் வாறே அருள்புரிந்து, காத்தருள் புரிவதாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

மாபாதகம் செய்த கொடியவனும் சிவராத்திரி அன்று சிவபெருமானாரை வணங்கி முத்தி பெற்ற வரலாறு உண்டு.

இச்சுவாகு குல அரசன் கல்மாசபாதன் என்பான் இந்தச் சிவராத்திரி விரதத்தைக் கடைப்பிடித்துத் தனது தீராத பாவத்தை (பிரம்மஹத்தி தோஷம்) நீக்கிக் கொண் டான் என்பது வரலாறு கூறும் உண்மை.

சிவராத்திரி வழிபாட்டினால் நீண்ட ஆயுளைப் பெறலாம்; நிறைந்த செல்வத்தைப் பெறலாம்; நல்ல மக்கட்பேறு பெறலாம்; தீராத நோய்கள் நீங்கப் பெற லாம்; முடிவாக இனிப் பிறவாமையையும் பெறலாம்.

இந்த நாளில் செய்யும் தான தருமங்கள், மந்திர செபங்கள் யாவும் பலநூறு மடங்காகப் பெருகி இம்மை யில் எல்லா நலன்களையும் அளித்து, மறுமையில் முத்தி யையும் (பிறவாமை) அளிக்கும் என்பது அருளாளர்கள் அனுபவத்தால் கூறிய உண்மையாகும்.

**நாம் செய்ய வேண்டியது** : சிவராத்திரி அன்று அதிகாலையில் எழுந்து நீராடி, திருநீறு அணிந்து, உருத் திராட்சம் அணிந்து, சிவபூசை செய்து, ஐந்தெழுத்து (சிவாயநம) ஓதுதல் வேண்டும். பகல் முழுவதும் உண வருந்தாமல் இருக்கலாம். இயலாதவர்கள் பால் பழம் அருந்தலாம்.

மாலையில் மீண்டும் நீராடி, சிவாலயம் சென்று நெய் விளக்கு ஏற்றலாம். வாசனையுள்ள மலர்களால் அருச்சிக்கலாம். வில்வத்தால் அருச்சித்தல் மேலான புண்ணியம். அகம் குழைந்து தமிழ்வேதப் பதிகங் களைப் பாராயணம் செய்யலாம்.

இரவில் நான்கு யாமங்களிலும் சிவபூசை செய்யலாம். இயலாதவர்கள் கோயிலில் நடைபெறும் பூசைகளில் கலந்துகொண்டு நலம் பெறலாம். பால், தயிர், சந்தனம், கரும்புச்சாறு, இளநீர், தேன், திருநீறு, புத்தாடை, பன்னீர், வாசனையுள்ள மலர்கள் ஆகிய வற்றைச் சிவாலயத்திற்குக் கொண்டு செல்லுங்கள். எல்லா நலன்களையும் பெற்று வாழலாம்.

சிவராத்திரி வழிபாடு செய்து பிரமன் படைப்புத் தொழிலையும், திருமால் காத்தல் தொழிலையும், இந்தி ரன் பொன்னுலகத்தையும், குபேரன் அளகாபுரியினை யும் பெற்றார்கள். எத்தகைய தீவினையும் நீங்கிவிடும். நலமே பெறலாம். உலகில் அமைதியே விளங்கும். ❋

திருச்சிற்றம்பலம் *நன்றி : தமிழ் வேதம்*

# பக்தியினால் விதியை ஜெயிக்கலாம்

வேத சாஸ்திரிகள் ஜோதிட பிதாமஹர் **சுவாமி ஸ்ரீனிவாச ராமானுஜர்**, பி.எச்.டி.,

தியானம் என்றால் என்ன? நமது மனத்தை ஒருநிலைப்படுத்தியும் உடலை முழுமையாகத் தளர்ச்சி அடையச் செய்வதற்குமான ஒரு பயிற்சியே தியானம் எனப்படும். இது உங்களது சுக வாழ்வு, மற்றும் மன அமைதியைப் பெறுவதற்கு மிக எளிதில், இயற்கை முறையிலே எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து கொஸ்மிக் சக்தியை பெறுவதற்கு வழிமுறையாகும்.

**தியானப் பயிற்சி தொடங்கும் முன் நாம் கையாள வேண்டிய முறைகள்**

தன் நம்பிக்கையையும் மன உறுதியையும் விருத்தி செய்தல். கொஸ்மிக் சக்தியைப் பற்றியும் உள்ளார்ந்த சக்தியைப் பற்றியும் விளங்கிக் கொள்ளல். தியானப் பயிற்சியின் நன்மைகளை விளங்கிக் கொள்ளல்.

**கொஸ்மிக் சக்தி (Cosmic Energy)**

இது அயன மண்டலத்தில் இருந்து பெறப் படுகின்ற ஆத்மீக கதிர் வீச்சுச் சக்தியைக் குறிப்ப தாகும். இது இந்து சமய வழிமுறையில் பரமாத்மா என்று அழைக்கப்படும். தியானத்தின்போது கோஸ்மிக் சக்தியானது எமது உடலிலும் மனத்திலும் பிரம்மரத்திரா ஊடாகப் பாய்ந்து உள்ளார்ந்த சக்தியோடு இணைவு கொள்கிறது. இதனால் அதிகமாக நோய்கள் குணமடை கின்றன.

**உள்ளார்ந்த சக்தி (Inner Energy)**

இது எமது ஜீவசக்தியைக் குறிப்பது. ஜீவாத்மா என அழைக்கப்படும்.

**தியானத்தினால் பெறப்படும் நன்மைகள்**

நாளொன்று 30-40 நிமிடங்கள் தியானப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

நமது ஆக்க இயல்பு, ஞாபகசக்தி, நித்திரை மற்றும் ஆத்மீகபலம் ஆகியவை சிறப்பாக விருத்தி பெறுகின்றன. இரத்தத்தில் கொழுப்பு (Cholesterol) குறைகிறது. உயர் இரத்த அழுத்தம் குறைவடைகின்றது. கோபம், மன அழுத்தம், உளச்சோர்வு ஆகியவற்றைக் குறைக்கின்றது. மித மிஞ்சிய தசை வளர்ச்சியை மட்டுப் படுத்தல், இதயத்துடிப்பைச் சமப்படுத்தல், இதயத்தின் வேலைப் பளுவைக் குறைத்தல்.

சுவாசப் பைகளுக்குக் கூடிய காற்றைச் சென் றடைய வைத்தலும் இலகுவான சுவாசிப்பும் கிடைக் கின்றன. இதனால் ஆஸ்துமா நோயாளர் பெரிதும் பயன் அடைவர். 5 வருடங்களுக்கு மேல் தியானப் பயிற்சி செய்தோரைப் பரீட்சித்துப் பார்த்தபோது, சாதாரண வயது தோற்றத்தைவிட 12 வயது இளமைத் தோற்றம் அவர்களில் தென்படும், அறுபது வயதிலும் இருபது வயது பொலிவு, உற்சாகம், தன்னம்பிக் கையைப் பெறலாம். ஆரோக்கியம் நிலைத்திருக்கும்.

**தியானம் இருக்கும் நிலை**

தியானம் மேற்கொள்ள தொல்லை, தொந்தரவு இல்லாத இடம் தேவை. இது வீடாகவோ அல்லது ஆலயமாகவோ இருக்கலாம். நிமிர்ந்து இருந்துகொண்டு கால்களையும் கைகளையும் குறுக்காக மடித்து வைத் திருந்தால் இது எப்போதும் தேவை என்பதற்கில்லை. நிமிர்ந்து இருக்கக் கஷ்டப்படுவோர் நாற்காலிகளிலோ அல்லது சுவர்களிலோ சாய்ந்து இருக்கலாம். உங்கள் உடம்பின் எல்லாத் தசைகளையும் தளர விடுங்கள். பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஒரு புறம் ஒதுக்கி விடுங்கள்.

**ஒருநிலைப்படுத்தல்**

ஒருநிலைப்படுத்தும் நிலை இரு கண் புருவங் களுக்கிடையே ஆனதும் சற்று மூக்குக்கு மேலே அமைந்துள்ள முக்கோண இடப்பரப்பைக் கொண்ட பகுதியாகும். இது கிளபெல்லா (Glabella) என்ற வைத்திய சொல்லால் அழைக்கப்படுகின்றது. இதற்கு வழங்கப்படும் யோக (Yoga) பதம் அஷ்ட மாசக்கரா.

ஓம் நமோ - நாராயணா

உட்சுவாசம் வெளிச்சுவாசம் (பிராயாணம்) உணரப் பட்டு உட்சுவாசம் செய்யும்போது ஓம் என்ற மந்திரத்தை உச்சரியுங்கள்.

வெளிச்சுவாசம் செய்யும்போது ஓம் நமோ நாரா யணாய என்ற மந்திரத்தை உச்சரியுங்கள். ஓம் ஓம் ஓம் -சாந்தி-சாந்தி-சாந்தி கண்ணை மூடிக்கொண்டு உச்சரியுங்கள்.

இந்த மந்திரத்தை ஜெபிக்கும்போது உங்கள் மனத்தை இறுக்க நிலையில் வைத்திராது இருப்பது நன்று. மனத்தை சுயமாகத் தளர்த்தி மந்திரத்தை இயற் கையான முறையில் ஏதேனும் அழுத்தமின்றி உச்சரிப்பது நன்று. தியானத்தினால் நாம் கடந்த ஜென்மத்தில் செய்த பாவம் விலகிவிடும். மனம் அமைதி அடையும்பொழுது ஞாபக சக்தி அதிகரிக்கிறது. தியானத்தினால் மனது உற்சாகம் பெறுகிறது. தேவையான சக்தி இயற்கை யாகவே கிடைக்கிறது. தியானிக்கும் பொழுது ஓம்சாந்தி - சாந்தி - சாந்தி என்று மந்திரத்தை உச்சரிக்கும்பொழுது காற்றுடன் கலந்து மூலிகைக் காற்று நமது சரீரத்தினுள் ஊடுருவி நமக்குத் தெரியாமலே வியாதிகள் தீர்ந்து ஆரோக்கியம் கிடைக்கிறது. அடையமுடியாத அரிய பொக் கிஷமான மனஅமைதியை தியானத்தினால் அடையலாம்.

**மனிதர் அனைவருமே ஒருவரே.**

கடந்த ஜென்ம பாபத்தையும் - புண்ணியத்தை யும் கணக்கிட்டுத் தான் ஜென்மம் அமைகிறது. சரீரம் அமைகிறது. ஆன்மா ஒரு போதும் அழிவதில்லை. கலி யுகத்தில் பிறவி எடுப்பதே மாபெரும் பாக்கியம். ஆனால் பாபம் சூழ்ந்து நிற்கும்பொழுது பல தடைகள் உண்டாகின்றன. கடன் உபாதைகள், கோபம், பதற்றம், பயம், சோர்வு, தன்னம்பிக்கையற்ற நிலை, வியாதி இப்படியாகப் பல பிரச்சினைகள் சந்திக்கும்பொழுது புதிய அனுபவம் உண்டாகிறது.

சிலருக்கு தாங்கக்கூடிய சக்தி உள்ளது. சிலர் பிரச்சினைகளைத் தாங்கமுடியாமல் வாழ்வில் விரக்தி மேலிடத் தன்னம்பிக்கை குறைந்து, நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது என்ற சூழ்நிலையைத் தனக்கு தானே உண்டாக்கிக்கொண்டு பிரம்மஹத்தி தோஷத்துக்குள்ளா கின்றனர். பூர்வ புண்ணிய ஸ்தானம் ஜாதகத்தில் மிக வலிமையுடன் இருந்தால் விதியின் பிடியில் சிக்மாட்

டோம். ஆனால் - பூர்வ புண்ணியம் வலிமை இழந்து நிற்குமாயின், விதியின் இரகசியத்தை உணரும் ஆற்றலை இழந்துவிடுகிறோம். விதியை ஜெயிக்க வேண்டுமாயின் நமக்குச் சரீர வலிமை தேவையில்லை. மனவலிமை தான் முக்கியமாக இருக்கவேண்டும்.

ஜாதகத்தில் சுகஸ்தானம் எவ்வளவுதான் வலிமை குறைந்து இருந்தாலும் இந்த ஜென்மாவில் விதியை வென்றிட சாத்வீகக் குணமும், தன்னம்பிக்கையும் அதி முக்கியமாகும். ஆத்ம பலமும் தெய்வ நம்பிக்கையும் சேரும் போது சாத்வீக குணத்தால் ஜெகத்தை ஆளலாம். ஒருவருக்கு அமைதி மிகத் தேவை. அமைதியால் தான் ஆனந்தத்தைப் பெறலாம். அமைதியை சீர்குலைப்பது - கோபம்-பொறாமை-காழ்ப்புணர்ச்சி-தன்னம்பிக்கையற்ற நிலை-நிலையில்லா எண்ணங்கள், குடும்பத்தில் சண்டை, உறவினர்களை அவமதித்தல், இவை அனைத்துமே அமைதியைச் சீர்குலைத்துவிடும். ஆயுளையும் குறைத்து விடும். ஆயிரம் செல்வம் இருந்தாலும் மனிதர்களுக்கு ஆயுளும் ஆரோக்கியமும் மிக முக்கியமாகும். சாத்வீகக் குணத்தால் அனைத்தும் கிடைக்கிறது. முக்குணங்களில் தாமஸ குணம் - ராட்ச குணம் கூடாது.

சாத்வீக குணம் - சாத்வீகமே சிறந்த குணமாகும் - மனிதர்களுக்கு மனிதர்கள் எதிரியல்ல.

நம்மிடம் கோபம் பொறாமை சோர்வு நம்மு டைய முதல் எதிரியாகும்.

விதியின் ரகசியம் தெரியாமல் போவதற்கு முக்கிய காரணமாகப் பாபம் அமைகிறது. கடந்த ஜென்மத்தில் செய்த பாபம் - தற்சமயம் செய்துகொண்டிருக்கும் பாபம் - இனிச் செய்யப் போகும் பாபம். இவை அனைத்தும் ஒன்றாகி விதியை ஜெயிக்கவிடாமல் செய்து விடுகின்றன. மாறாத - தீராத வியாதியை - டென்ஷன் - கோபம் - பதற்றம் - பயம் - பொறாமை இவை அனைத்தையும் உற்பத்தி செய்கிறது. பகவான் பஞ்ச ரகசியங்களை மறைத்து வைத்துள்ளார். ஆத்ம ரகசியம், வேத ரகசியம், சூட்சும ரகசியம், பரம ரகசியம், ஜென்ம ரகசியம் இப்படியாக ரகசியங்களை மறைத்து வைத்திருந்தாலும் கூட உணரக்கூடிய சக்தியையும் நமக்கு அளித்துள்ளார். நமக்குள்ளே உள்ள ஆன்மாக்குள்ளே ரகசியம் புதைந்து கிடக்கிறது. இதை அனன்ய பக்தியினால் உணர்ந்து விதியின் ரகசியத்தை உணரலாம். பக்தி நிலைதான் பாபத்தை அழிக்கமுடியும். பஞ்சமா பாதஹம் கூட பக்தியினால் விலகிவிடுகிறது. பகவான் நமக்குள்ளே இருக்கிறார் என்பதை உணரவும்-ஆத்மாவின் ரகசியத்தை உணர்ந்து விதியை ஜெயிக்கவும்- தினசரி குறைந்தது பத்து நிமிடங்களாவது தியானம் செய்யவேண்டும். அடுத்து சூட்சுமம் ரகசியம்-பகவான் நம்முடைய சரீரத்தில் பிரவேசிக்கும்பொழுது லோக சூட்சத்தை உணர்கிறார். சரீரத்தைத் தூய்மையுடன் வைத்திருந்தாலே பகவான் சூட்சமத்தை உணர்த்துகிறார். சரீரத்தினுள் பிரவேசிப்பார். இதற்கு மாமிசம் உண்ணாதிருத்தல் அவசியமாகும். பரம ரகசியமானது எட்டிப் பிடிக்க முடியாத இடத்தில் பகவான் வைத்துள்ளார்.

சிலர் தமக்குத் திறமை இல்லை என்ற தாழ்வான எண்ணத்தினால் பரம ரகசியத்தின் சூட்சுமத்தை இழந்து விடுகின்றனர். ஆக பல துன்பங்களுக்கு - பிரச்சினை களுக்கும் நம்முடைய மனமே காரணமாகும். மற்றும் கோபம் - டென்ஷன் - பயம் - விரக்தி - வேதனை அனைத்துமே விதியின் ரகசியத்தை உணரவிடாமல் செய்து விடுகிறது. பகவானை உணர பக்தியும் சாத்வீக குணமும், தியானமும் போதுமானது. பகவானின் நாமத்தை இடைவிடாமல் ஜெபித்தாலே - பாவம் விலகி - துன்பம் அகன்று மனம் அமைதி பெறும்.



**ஓம் நமோ நாராயணா**

பரமாத்வாகிய பகவானை ஜீவாத்மாகிய நாம் பக்தியினால் அடைய முடியும். தினசரி காலையில் பிரம்ஹ முகூர்த்த வேளையில் எழுந்து பழக வேண்டும். படுக்கையில் இருந்து எழும் பொழுது இடது பக்கம் எழவேண்டும். சூடான வெந்நீரில் ஸ்நானம் செய்யக் கூடாது. குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. சாத்வீக உணவினால் வாதம் - பித்தம் - கபம் - சமமாக இருக்கும். பகவான் நூற்றி இருபது வருடம் (120) ஆயுட்காலத்தை கலியுகத்தில் நமக்கு அளித்துள்ளார். ஆனால் சிலர் எண்ணம் சரியில் லாததாலும் ஆகாத உணவுப் பழக்கம் - கோபம் - பயம் - பொறாமை இவைகளினாலும் ஆயுட்காலத்தைத் தாமே குறைத்துக் கொள்கின்றனர். பொறாமையினாலும் பிறரின் மீது நம்முடைய எண்ணங்களைச் செலுத்துவதா லும் ஆரோக்கியம் குறைந்து வியாதி பெருகுகிறது. மற்றவரைத் தேவையில்லாமல் விமர்சிப்பதாலும் நம் முடைய பூர்வ புண்ணியம் தானாகவே குறைந்து மீள முடியாத சிக்கலில் மாட்டிவிடுகிறது. விதியின் அர்த்தம் தெரியாமல் வாழ்வு முடிந்து போகிறது.

பக்தியினால் விதியை ஜெயிக்கலாம். பக்தி, தியானம் சித்தித்தாலே யோகாசனம் செய்யத் தேவையில்லை. பக்குவ ஞானத்தைப் பெற தூய எண்ணம் கொள்ளுதல், சாத்வீகச் செயல் அவசியமாகும். பிறரைப் பற்றி நன்மையை-நல்லதையே மட்டுமே சிந்திக்க வேண்டும். அடுத்தவரைக் கூர்ந்து நோக்கக் கூடாது. பிறரின் செயலில் குறுக்கிடக்கூடாது. முடிந்தால் நன்மையைச் செய்யவேண்டும். இல்லையேல் ஒதுங்கிவிடவேண்டும். ஒருவர் நமக்கு தீமை-தீங்கு-கெடுதல்-முன்னேற்றத்தைத் தடுத்தல் இவை அனைத்தையும் செய்தால் கூட நாம் கெடுதல் செய்பவருக்கு நன்மையைச் செய்யவேண்டும். அவர் வாழ அனுதினமும் பிரார்த்திக்க வேண்டும். எதிரியாகக் கெடுதல் செய்பவரை நினைக்காமல் மாறாக அவருக்கு நீங்கள் நல்லது செய்யும் பொழுது பக்குவ ஞானம் தானாகவே உங்களைத் தேடிவரும். நிம்மதி தேடிவரும். சில காலம் கஷ்டம் இருந்தாலும் பல காலம் சுகமாக வாழலாம். உங்களைப் பகவான் ஒவ்வொரு செயலிலும் காத்து நிற்பார். எதிரி மனிதர்கள் கிடையாது. அப்படியே ஏற்பட்டாலும் அவர்களை அப்படியே பகவானிடம் ஒப்படைத்துவிட்டு நாம் நமது வேலையைப் பார்க்க வேண்டும். அவர்களைப் பகவான் கவனித்துக் கொள்வார். பகவானின் தண்டனையில் இருந்து அடுத்த வரைக் கெடுப்பவர் யாராக இருந்தாலும் தப்பவே முடியாது. பகவானின் தண்டனை அபாயகரமானதாகும். தினசரி காலையில் பிரம்ம முகூர்த்தம் வேளையில் எழுந்து பழகவேண்டும். மனிதர்களுக்கு ஆயுட்காலம் அதிமுக்கியமாகும். ஆரோக்கியம்-நிம்மதி-இம்மூன்றும் மிக மிக அவசியமாகும். *

**இலண்டன்**
**ஆதி அருள்நெறி மன்றத்தினால்**
**நடத்தப்படும்**

**சைவம், தமிழ், பண்ணிசை வகுப்புகள்**

**சனிக்கிழமை**
காலை 10.00 – 1.00

**ஞாயிற்றுக்கிழமை**
காலை 10.00 – 1.00
காலை 12.00 – 3.00

தொடர்புகளுக்கு:
**416-751-2022**



**உங்கள் பெயர் அதிர்ஷ்டம் நிறைந்ததா?**
**ஆலோசனைக்கு அணுகவும்**

உங்கள் பெயர்தான் மந்திரம்!
உங்கள் பெயர்தான் சூட்சுமம்!
உங்கள் பெயர்தான் கடாட்சம்!

**K.R.K.**
**NAMEOLOGIST**
பெயரியல் நிபுணர்

**40, Pillaiyar Koil Street,**
**Office No.1, 1st Floor,**
**Nesappakkam, K.K. Nagar West,**
**Chennai - 600 078.**

**Mobile: 98406 45598**
**e-mail: krisvishal@yahoo.com**


## SEYCHELLES THAMIL MANDRAM PONGAL VIZHA



The Annual Pongal Vizha - the fourth Annual event of the Seychelles Thamil Mandram was celebrated in the International Conference Hall in Victoria on the 13th of Janaury in the presence of a large Thamil speaking audience. The Chief Guests were Professor Kavi Mamani Abdul Kadar, Head of the Thamil Department of Vanniyampadi College, Vellore and the Film Director Makkal Iyakkunar K. Segar of Thiruvallur Kalaikoodam, Chennai. They spoke on Thamilar Vazhvil oru Thirunaal and Pirantha Naada Puhuntha Naada respectively.

**கனடாவில் வேலனை பொன்னண்ணாவின்**
**"நெஞ்சத்து நெருப்பு" நூல் அறிமுக விழா**

கனடா வேலனை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் 24-4-2008 ஞாயிற்றுக் கிழமை 7.00 மணி தொடக்கம் நடைபெற வுள்ளது.

விவரங்களுக்கு : 416 771 5167 416 312 3223

**கவிஞர் கோவி மணாளனின்**
**நூல் வெளியீட்டு விழா**

கவிஞர் கோவி மணாளனின் புதிய பூக்கள், கவின் மலர்கள் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா 6-4-2008ஆம் திகதியன்று மாலை 6.00 மணிக்குக் கோலாலம்பூர் டத்தோ சோமா அரங்கில் நடைபெறவுள்ளது.

சிலாங்கூர் கூட்டரசு வளாகத் தமிழ்க்கலை இலக்கியப் பண்பாட்டு இயக்கம் சிலாங்கூர், கோலாலம்பூர் தமிழ் எழுத்தாளர் வாசகர் இயக்கம் ஆகியன இணைந்து இவ்வெளியீட்டு விழாவை ஏற்பாடு செய்துள்ளனர்.

# இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் (Easter)

கே. டபிள்யூ. செல்வராசா, வுட்சேர்ச், கென்ட், இலண்டன.

இவ்வருடம் பங்குனி மாதம் 21ஆம் திகதி பெரிய வெள்ளி (Good Friday). இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாள் 23ஆம் திகதி, அவர் உயிர்த் தெழுந்த நாளாகக் (Easter) கிறிஸ்தவர்களால் அனுஷ் டிக்கப்படுகிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டம் போல் அல்லாது வேறு மதத்தினர் இக்கொண்டாட்டத்தில் பங்கு பற்றுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் இயேசு கிறிஸ்து இறைவனின் மறு அவதாரம் என்று மற்றச் சமயத்தினர் ஏற்றுக் கொண்டாலும் அவர் சிலுவையில் அறையப்பட்டார். என்றோ மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்தார் என்றோ அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆனால் கிறிஸ்தவரின் விசுவாசத்தின் ஆணிவேரே அவர் இறப்பும் உயிர்த்தெழுதலும்தான். இறைவனோடு இருந்தவர் தன்னைத் தாழ்த்தி மானிடனாக வந்து அவர் இறக்குமுன் பிறந்த மானிடர், மானிடர் பாவங்களுக் காகவும் தானே பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு அவர்கள் பாவங்கள் சகலத்தையும் அவரே ஏற்றுக் கொண்டார் என்றும், மூன்றாம் நாள் அப்பாவங்களைப் புதைத்து உயிர்த்தெழுந்தார் என்றும், அவரை விசுவா சித்தவர் போதனைகளின்படி நடந்து மனதார பாவ மன்னிப்புக் கேட்டு வேண்டினால் அவர் அதை மன்னித்து அவர்களைப் பரிசுத்தமாக்கி ஏற்றுக் கொள்வார். இறைவன் தன் ஒரே பேரரான குமாரனை இவ்வுலகத்துக்கு அனுப்பியது, தன் படைப்புக்குப் பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கவேண்டும் என்ற காரணத்துக்குத் தான். இவ்வுலகத்தில் பிறந்த மானிடர் யாவரும் பாவிகள் தாம். நமக்குப் பாவம் இல்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்கள் ஆவோம். எனவே இயேசு கிறித்து நமது பாவத்துக்காகச் சிலுவையில் அறையுண் டார். மூன்றாம் நாள் இறப்பை வென்று உயிர்த்தெழுந் தார். அவரை விசுவாசித்தால் பரலோக வாசல் தங்களுக்குத் திறக்கப்படும் என்று விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் தாம் கிறித்தவர்கள். இறைவனை எவரும் ஏமாற்றவும் முடியாது. ஏனெனில் அவர் இதயத்தை அறிபவர். பரலோகத்தில் ஆண், பெண் வித்தியாசம் இல்லை, இவ்வுலக உறவுகள் இல்லை. பசியில்லை, பட்டினி இல்லை, உடல் வருத்தம் எதுவுமில்லை. எப்பொழுதும் சமாதானமும் சந்தோஷமான வாழ்வு. அத்துடன் உலக பிரகாரமான கால அளவுகள் இல்லை, நித்திய ஜீவன் உண்டு என்று விசுவாசிக்கிறார்கள்.

''தேவன் தன் ஒரே பேரரான குமாரன் இயேசு கிறித்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு இவ்வள வாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்''.

எல்லாச் சமயத்திலும் விரதம் பிடிக்கப்படுகிறது. மனத்தை ஒரு வழிப்படுத்திப் பக்தியுடன் இறைவனை வழிபட ஒரு துணை இருக்கிறது என்பது யாவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மை. இயேசு கிறித்து 40 நாள் கள் வனாந்தரத்தில் உண்ணாவிரதம் இருந்தார். இயேசு கிறித்து உயிர்த்தெழுந்த தினத்துக்கு ஆங்கிலத்தில் "Lent Days" என்று கூறுவார்கள்.

40 நாள்கள் என்னும்போது இறந்த என் மனைவி நெசலின் அரயமலர் அவர்களுக்கு ஏற்பட்ட அனு பவத்தை இயேசு கிறித்துவின் வல்லமைக்குச் சாட்சியாக இங்கு எழுதவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டு உள்ளது. 1974-ஆம் ஆண்டு (என் மனைவிக்கு 39 வயது) என் மனைவி இரத்த சோகை (Aneamea) காரணமாகப் பெலவீனம் அடைந்து படுக்கையில் இருந்தார். வைத்தியசாலையில் காட்டியபோது கிழமைக்கு இரண்டு நாள்கள் விற்றமின் 'B Complex' ஊசி போட வேண்டும் என்று கூறி, அவ்விதம் செய்தோம். அப்போ வீட்டில் நானும் எங்கள் 4 பெண் பிள்ளைகளும் (மூத்த மகளுக்கு 17 வயது கடைசி மகளுக்கு 5 வயது) இருந்தோம். உறவினர் சினேகிதர் அண்டை வீட்டார் எல்லாரும் வந்து பார்த்துப் போவார்கள். நாள்கள் போகப்போக அவர் நிலைமை மோசமடைந்து கட்டிலை விட்டு எழும்பமுடியாது, தண்ணீர்கூட படுத்தபடி வாயில் பருக வேண்டும். அவரைப் பார்க்க வந்த 'உன் சினேகிதர் என்னை வெளியே அழைத்துச் சென்று உன் மனைவியின் நிலை இன்றைக்கோ, நாளைக்கோ என்றிருக்கிறது. உங்கள் உறவினர் யாவருக்கும் அறிவி யுங்கள், என்றார்கள். அவரின் ஒரு இளைய சகோதரி விடயம் அறிந்து அவரைப் பார்க்க வரும்போதே வெள்ளைச் சேலை கொண்டு வந்தார். சுகயீனம் வந்து 40ஆம் நாளன்று எனக்கு அரசாங்கக் காரியாலயத்தில் நிதி வருட முடிவு (31-12-74) காரணமாகக் காரியால யத்திலிருந்து வர இரவு 11.30 மணியாகி விட்டது. என் மனைவி கட்டிலில் படுத்திருந்தார். வழக் கம் போல் நானும் 4 பிள்ளைகளும் அதே அறையில் நிலத்தில் பாய்விரித்துப் படுத்தோம். இரவு 2 மணி இருக்கலாம் என் மனைவி என்னை எழுப்பினார். ஒரு கிளாஸ் தண்ணீர் தாருங்கள் என்று எழும்பி இருந்தார். நானும் கடைசி நேரமாக்கும் என்று மனதில் கலக்கத்து டன் ஒரு கிளாஸ் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்ததும் மளமள வென்று முழுவதையும் பருகிவிட்டுப் ''பயப்படாதீர்கள், பிள்ளைகளை எழுப்புங்கள். ஜெபம் பண்ணுவோம்'' என்று முழங்காலில் நின்று அவரே ஸ்தோத்திரம் செலுத்தி ஜெபித்தார். அதன்பின் இப்போ எனக்கு நல்ல சுகம் என்று சொன்னார்.

''உங்களுக்கு ஏசு கிறிஸ்து சுகம் அளிக்கும் வரத்தைத் தந்திருக்கிறார். நீங்களே எங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஜெபித்தால் இயேசு சுகம் அளிப்பார்'' என்றேன். ✱

**VASUKI SOLICITORS**
எல்லா சட்ட ஆலோசனைகளுக்கும்
Asylum, Fresh application, Deportation
**Vasuki Murugathas,**
10 Shakespeare Crescent, Manor Park, London E12 6LN

சிறுகதை

# இனங் காணப்பட்ட இலக்கு

ஆராதாரா

மூலைப் பக்கமாக மதகு சிதறிக் கிடந்தது. சிதறிக் கிடந்த கொங்கிறீற் மதகுக்குக் கீழே அதே கோலத்தில் நேசனின் ஒரு பாதி உடல் கிடந்தது. இரண்டு வயது குழந்தையைக் கட்டிப் பிடித்தபடி அப்படியே கிடந்தான். குழந்தையின் உடலில் ஒரு காயமும் இல்லை. ஆனால் இருவரும் பிணங்களாகக் கிடந்தனர். வேறு சிலரும்கூட உடல் சிதறிக் கிடந்தனர்.

ஆள்கள் கூடினர். ஊர்தான் கூட்டியிருந்தது. இறந்த உடல்களை இழுத்து எடுக்கும் முயற்சிகள் தொடங்கின. உறவினர்களின் ஓலங்களும், ஒப்பாரிகளும் ஒருபுறம் நடந்தன. காயமடைந்தவர்களை ஏற்றி அகற்றும் பணிகளில் இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். ஒரே களேபரம்.

இன்னும் அரைமணித்தியாலத்தில அடுத்த தடவை வந்திடுவார்கள். அதுக்கிடையிலை எல்லாத்தையும் செய்திட்டு இடத்தைக் காலி செய்திட வேணும். ஒருவரின் எச்சரிக்கைக் குரல் அது. குண்டு வீச்சு விமானங்கள் ஒரு தடவை குண்டு வீசிய இடத்திற்கு மீண்டும் ஒரு தடவை வந்து விட்ட குறை தொட்ட குறைகளை நிறைவேற்றுவதுண்டு. ஊரில் மொத்தம் ஐந்து மரணங்கள். சிதறிய உடல்களைச் சிதைந்த உள்ளங்கள் அவசர கோலத்தில் அடக்கம் செய்தன.

'மஞ்சி தனிச்சிப் போனாள். பாவம் இந்தச் சின்ன வயதிலை அவளின்ரை வாழ்வு இப்படிப் போச்சுது', எப்போதும் மஞ்சிக்காகப் பேசுபவளான நேசனின் மூத்த சகோதரி புலம்பினாள். 'தன்ரை சொந்தம், பந்தம், சாதி, சமயம் எல்லாம் விட்டு ஒருத்தனுக்காக வந்தவள்' பக்கப்பாட்டுப் பாடி ஆமோதித்தார் ஒரு பெரியவர்.

அடுத்த தடவை பொம்பர் வருமுன்பு இழுத்து எடுத்த உடல்களின் மரணச் சடங்குகள் அடுத்த நாள் வருமுன்னர்ப் பொம்பர் வேகத்தில் நடந்து முடிந்தன. மறு நாள் காலை நீர்வேலி நித்தியாநந்தன் சங்கதி கேள்விப்பட்டு வந்தான். முற்றத்தில் மாமர நிழலில் நிலத்தில் உட்கார்ந்தபடி இருந்த அயல் வீட்டுப் பெரியவர் 'வா தம்பி' என்று கூப்பிட்டுத் தன்னுடன் இருக்க வைத்தார். மஞ்சி தலையில் கைவைத்துக் குழறி அழுதபடி முற்றத்திற்கு வந்தாள்.

'பொம்பர் வர்றதைக் கண்டுட்டுப் பாலத்துக்குள்ளே ஒளிச்சவுடனை அவன் பாலத்துக்குப் போட்டுட்டான்' பெரியவர் கூறினார்.

'இதுதான் இந்தச் சனங்கள் விடுகிற பிழை. அவன் பார்க்கக்கூடியதாகப் பாலத்துக்குள்ளே ஒளிச்சால் விடுவனோ' வந்தவர் ஆவேசத்துடன் கூற மஞ்சி ஆத்திரமடைந்தாள்.

பதுங்கு குழியுக்கை பதுங்கின அப்பாவை விட்டவனோ இல்லாட்டி ஆஸ்பத்திரி கட்டிலில் படுத்திருந்த ஆச்சியை விட்டவனோ? விசர் கதை பேசுறியள். இந்தப் பத்துப் பதினைஞ்சு வருசத்திலைதானே எல்லாம் நடந்தது?

'அதுகள் முடிஞ்ச கதை. நான் இண்டையான் கதையைச் சொல்லுறன். அவன் காண ஒளிச்சால் அவன் புலியெண்டுதானே நினைப்பன். கொஞ்சம் மூளையைப் பாவிக்க வேணும்' நித்தியாநந்தன் ஒரு ஆலோசனையாகக் கூற மஞ்சுவும் பதிலுக்கு ஏதோ கூறவந்தாள். அவன் காணக்கூடியதாக ஆச்சி ஆஸ்பத்திரி கட்டிலிலைக் கிடந்தது பிழை' எண்டுதானே சொல்லுகிறியள் என்று மஞ்சி கூறுவதற்கு முன் பெரியவர் குறுக்கிட்டார்.

'பொம்பர் வந்தா ஒழிக்கத்தானே வேணும், சரி உந்த கதையனை விடுங்கோ. செத்தவை எழும்பப் போகினமோ இனிமேல் பாக்க வேண்டிய அலுவலைப் பாப்பம், செத்த வீட்டுச் செலவு கொடுப்பனமாம். விதானை வீட்டுக்கு எழுதிக் கொடுக்கலாம் எண்டு நேற்று வந்தவையள் சொல்லிச்சினம். மஞ்சி குறுக்கிட்டாள். 'ஆஸ்பத்திரியிலைப் படுத்திருந்த 90 வயது ஆச்சியைச் சுட்டுப்போட்டு, பயங்கரவாதியளோடை நடந்த சண்டையிலைச் செத்ததெண்டு எழுதித்தரச் சொன்னவையள். அப்பதான் மரணச் சான்றிதழ் தருவினம் எண்டு எழுதிக் குடுத்த நாங்கள் பத்தாயிரம் ரூபாக்காக. அவள் முகத்தில் ஆத்திரம் பொங்கியது. சலசலப்பு சண்டையாகிவிடாமல் அக்கா தலையிட்டாள். தன் கணவரைக் கண்டிக்கும் போக்கில் பேசினாள். 'அந்நாள் உப்பிடித்தான். விழுந்த பக்கத்துக்குக் குறி சுடும். நீ வா உள்ளே' என்று கூறி மஞ்சியை உள்ளே இழுத்துச் சென்றாள்.

மஞ்சியின் அப்பா பங்கர் வாசலில் தலை சீவப்பட்டுச் செத்துப் பத்து வருடங்கள். வயதுபோன அம்மாவைக் கூட்டிவந்து பங்கருக்குள் இருத்தியதில் ஒருசில செக்கன்கள் அவர் இறங்குவதற்குத் தாமதித்திருந்தார். அதற்குள் தலை சீவப்பட்டுவிட்டது. மாரிக் கிணத்திலை விழுந்து கைமுறிஞ்ச ஆச்சியைப் பெரியாஸ்பத்திரியிலை வைத்திருந்தபோது நடந்த சூட்டிலை ஆச்சியும் செத்து 15, 20 வருசமாச்சு. இப்ப கணவன் நேசன் பலியாகிவிட்டான்.

மஞ்சியின் ஒன்றுவிட்ட அக்காதான் நித்தியாநந்தனின் மனைவிமார். அக்காவை முற்றத்துக்கு அழைத்து நித்தியாநந்தன் மெல்ல பேசினான். மஞ்சி கொஞ்சம் ஆவேசமாயிருக்கிறாள். இப்ப எது கதைச்சாலும் கோவப்படுகிறாள். இந்த ஒரு மாதமும் போகட்டும். அத்திரட்டி முடிய அவளை எங்களோடை கூட்டிக்கொண்டு நீர்வேலிக்குப் போவம். அங்கையே இருக்கட்டும். பொடியனை அங்கையே பள்ளிக்கூடத்திலைச் சேர்க்கலாம். ஆனால் ஒரு வேலை செய்ய வேணும். மஞ்சியிட்டை ஒரு கையெழுத்து வாங்கித்தா. நான் அலுவல்பாத்து செத்தவீட்டுச் செலவை எடுத்துத்தாறன்.

பெரியவர் தலையாட்டினார். அப்பிடித்தான் செய்யுங்கோ. அவள் பிள்ளையைத் தணிக்கவிடாமல் பாருங்கோ. நீங்கள்தானே பாக்க வேணும் என்று ஆசி வழங்கினார்.

அயலிலிருந்த பலர் முதல் நாள் தாம் வர வில்லை என்றும் வெளியூரில் நின்றதாகவும் இப்படிப் பலவாறாகவும் சொல்லிக் கொண்டு வந்தனர். வெயில் ஏறஏற மாமரத்தின் நிழல் மிக அருமையாக இருந்தது. இடையிடையே சிலர் எழுந்து நாலு சுவடு நடந்துபோய் வானத்தைப் பார்ப்பதும் திரும்பவும் வந்து இருப்பது மாகக் காணப்பட்டனர். 'புறப்பான்கள் வந்திடுவான்கள்' என்ற புறுபுறுப்பும் மனப் பயமும் எல்லார் மனங்களி லும் இருந்தது. தாமதியாது தத்தமது வீடுகளுக்குப் போய்விட வேண்டுமே என்ற அவசரம் பலர் மனங் களில் கொதித்துக் கொண்டிருந்தது.

அந்திரட்டி முடிந்த சில நாள்களில் மூன்றாவது இடம்பெயர்வுக்கு ஆயத்தங்கள் நடந்தன. உடுபுடவை களுக்கு ஒரு காட்போட் பெட்டி, சமையல் பாத்திரங் களுக்கு இன்னுமொண்டு. சங்கக் கடையில் 'காட்'க்கு வாங்கி ஒழித்துச் சேகரித்த உணவுப்பண்டங்கள் ஒரு பிளாஸ்ரிக் கூடையில், நேசனின் சைக்கிள். பயங்கர விறகுத் தட்டுப்பாடு என்பதால் மிஞ்சியிருந்த கொத்து விறகுக் கட்டுகள் சில. இவற்றுடன் 'லான்ட்மாஸ்ரர்' கூறப்பட்டது. 'இந்த ஊருக்கு ஒருநாள் திரும்பி வருவேன். அதுதான் எனக்குத் திருநாள்' என்ற ஈழத்துச் சினிமா வரிகள் எங்கும் ஒலிக்கவில்லை. லான்ட் மாஸ ரரின் உறுமல் சத்தம் மட்டும் ஆக்ரோசமாக ஒலித்தது.

சகோதரியின் நீர்வேலி வீடு. அது ஒரு தசாப் தத்தில் மூன்று அவலச் சாவீடுகளுக்குக் களமாகப் பயன் பட்டது. நீண்ட காலத்தின் பின் அந்த வீட்டின் முன்னே வந்து இறங்கியபோது மூன்று மரணச்சடங்கு நிகழ்வு களும் மஞ்சியின் மனத்தில் உயிர்ப்புடன் தோன்றி மறைந்தன. யாழ்ப்பாணத்து வீடுகள் பலவற்றிற்கும் இருக்கக்கூடிய பொது வரலாறுதான்.

அக்காவின் பிள்ளைகள் பொருள்களை இறக்கி எடுத்து வைப்பதில் ஈடுபட்டார்கள். சகோதர உறவு என்று கொண்டாடுவதற்கு இப்போ இருப்பவள் அக்கா மட்டும்தான். அக்காவின் கணவரை ஆத்திரத்தில் கண்ட படி திட்டியதற்கு மஞ்சி வருத்தப்பட்டாள். அது பற்றிக் கூறி ஒருவாறு சமாளித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

மூன்றாம் ஆண்டு படிக்கும் ஒரே மகனைப் பாட சாலையில் சேர்த்துவிட வேண்டும். இனிமேல் அது ஒன்றையே அவள் கவனிக்க வேண்டும். அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்று அன்பளித்த பாடசாலை பை, வேறு உபகரணங்கள் பத்திரமாக இருந்தன. சப்பாத்துகளையும் வசந்தனே பக்குவமாக எடுத்து வைத்திருந்தான்.

அன்று திங்கட்கிழமை. வசந்தனை வெளிக்கிடுத்தி, கூட்டிச்சென்று அதிபரைச் சந்தித்து வகுப்பில் இருத்திவிட்டு வந்தார் நித்தியாநந்தன். 12 மணிக்கு மஞ்சி அங்குச் சென்று அவனை அழைத்து வந்தாள். கால்நடையாக 20 நிமிடங்களில் கடந்துவிடும் தூரம். பாடசாலை அனுமதிப் பிரச்சினை சிக்கலில்லாமல் தீர்ந்தது. மஞ்சிக்கு ஒரு பெரும் திருப்தியாக இருந்தது.

'அம்மா புதுப் பள்ளிக்கூடம் நல்லது. ஒரு ரீச்சர் அப்பா எங்கே எண்டு கேக்கிறார். பொம்பர் அடிச்சு செத்தவர். பேப்பரிலை வந்தது எண்டு சொன்னேன். பிறகு 2,3 ரீச்சர்மார் கூடிநிண்டு என்னைப்பற்றிக் கதைச்சவை. பிறகு ஒரு ரீச்சர் எனக்குப் புதுக் கொப்பி, பன்சில், பேனை எல்லாம் தந்தன. அம்மா வரேல்லையோ எண்டு கேட்டவை. நீங்கள் நாளைக்கு அவையளோடை கதை யுங்கோ,' என்றான். வீடு வரும் வரையும் கதைத்துக் கொண்டே வந்தார்கள். வசந்தன் உற்சாகமாக இருப்ப தும் அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

அக்காவின் ஒரு மகனும் அதே பாடசாலையில் பத்தாம் ஆண்டில் படிக்கிறான். அதனால் மஞ்சிக்கு மேலும் ஒரு மன ஆறுதல்.

ஊர் அமைதியாக இருந்தது. விவசாயம் ஒழுங் காக நடந்துவந்தது. தோட்டங்கள் பசுமையாகத் தெரிந் தன. பொருள்கள் விலை உயர்வும் யாழ்ப்பாணத்துக்கே உரியதாக இயல்பாகவே இருந்தது. அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் தீவிரமாக இயங்கின. குண்டு வீச்சில் அழிந்த பாடசாலையின் ஒரு கட்டடத்தைப் புதிதாக அமைத்துக் கொடுத்தனர். சுடுபாடு, குண்டு வெடிப்பு என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. என்றாலும் நேரில் காணும்படியாக எதுவுமில்லை. நீர் வேலிக்கு வந்து ஒரு வருடமாகிறது. எதிர்காலம் என்னும் ஒன்றைப்பற்றி எவருமே திட்டமிடாத அம்ம லான அமைதி!

'விடைக்கு இந்தப் பக்கமா சுத்துறாங்கள். என்ன நாசமறுப்போ தெரியேல்லை' ஒழுங்கையால் சென்ற முதியவர் ஒருவர் சற்று உரத்துக் கூறினார். உற்விறாந் தையில் உட்கார்ந்திருந்த அக்கா எழுந்து வீட்டின் முன் புறம் வந்து குரல் வந்த திசையில் பார்த்தார். 'ஐயாயிரம் கந்தையாண்ணை சொல்லிப்போட்டுப் போகுது. அந்தாள் ஒரு கரிநாக்கன். சொன்னால் ஏதும் நடக்கும்' என்றபடி மீண்டும் சென்று உட்கார்ந்தாள் சாவதானமாக. 'என்னக்கா நடக்கிறது இஞ்சையும் வர்றாங்களே?...

'கொஞ்சம் பொறு. போடத்தான் போறாங்கள். பதிஞ்சு சுத்துறாங்கள்'.

'என்னக்கா சொல்லுறாய்... பள்ளிக்கூடத்திலை பிள்ளை...'

பதறித் துடித்தபடி படலையைத் திறந்துகொண்டு மஞ்சி ஓடியதில் சாதனை இருந்தது. சிதறி ஓடிவந்த பாடசாலை மாணவர்கள் மத்தியில் வசந்தனும் இருந் தான். அப்போதுதான் அங்குவந்த அக்காவின் மகன் அவனைத் தனது சைக்கிளில் ஏற்றிச்சென்றபின்.... அன்றைய புயலின் பின்னைய அமைதியைப் பெரு மூச்சில் கழுவியபடி ந..ட..ந்..துகொண்டிருந்தபோது அது நடந்தது. மீண்டும் அவை தாழப்பறந்து வந்தன. பின்னர் மேலெழுந்து சென்று மறைந்தன.

மறுநாள் அறிவித்தல் வந்தது. இனங்காணப் பட்ட இலக்குகள் மீது தாக்குதல். 36 வயது பெண் பலி என்று. (கற்பனை)


*

# அழகு-ஆரோக்கியத்திற்காக

## சின்னச் சின்ன பயிற்சிகள்

அழகாக இருக்க வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை. பளபள கேசம், ஒளிபடைத்த கண்கள், பட்டுப்போன்ற சருமம் வேண்டும் என்ற எண்ணம் எல்லாப் பெண்களுக்குமே உண்டு. ஆனால் ஒப்பனையினால் மட்டும் இது வந்துவிடாது. உணவுக் கட்டுப்பாடு அவசியம் என்பதுடன் உடற்பயிற்சியும் தேவை ஆகும். நீச்சல், ஸ்கிப்பிங், சைக்கிள் சவாரி, நீண்டதூரம் நடத்தல் மற்றும் எளிய பயிற்சிகள் மூலமே பெண்கள் அழகாக மட்டுமின்றி ஆரோக்கியமாகவும் தோன்றலாம்.

இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, உடலை ஆரோக்கிய மாக வைத்திருப்பதுடன் அழகும் சேர்க்கும் எளிய பயிற்சிகள் சிலவற்றை இங்கே காணலாம்.



### பயிற்சி : 1

கால்களை ஓர் அடி இடைவெளிவிட்டு வைத்துக் கொண்டு நிமிர்ந்து நிற்க வேண்டும். கைகளை உயரே தூக்கிக் கால் முட்டி வளை யாமல் அப்படியே குனிந்து கால் பெருவிரல்களைத் தொட வேண்டும். பிறகு அப்படியே நிமிர்ந்து பழைய நிலைக்கு வரவேண்டும்.

### பயிற்சி : 2

கால்களை ஓர் அடி இடைவெளிவிட்டு நிமிர்ந்து நின்று கொண்டு கைகளை உயர்த்திச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். முதுகை வளைக்காமல், வலதுபுறம் முடிந்தவரை வளைக்க வேண்டும். பிறகு பழைய நிலைக்கு வந்து அதே போல் இடதுபுறம் செய்ய வேண்டும். இதுபோல் ஒவ்வொரு பக்கமும் பத்துத் தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 3

கால்கள் இரண்டையும் சேர்த்து வைத்துக் கொண்டு நிமிர்ந்து நிற்க வேண்டும். பின்னர் இரு கைகளையும் முன்புறம் நேராக நீட்டி வைத்துக் கொள்ள வேண்டும். குதிகாலை உயர்த்தி விரல்களில் உடலைத் தாங்கியபடி முழங்கால்களை மடித்து உட்கார வேண்டும். முதுகு வளையக்கூடாது. கைகள் நீட்டியபடி இருக்க வேண்டும். பிறகு மெதுவாக எடுத்துப் பழைய நிலைக்கு வர வேண்டும். இப்படிப் பத்துத் தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 4

கால்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு நின்ற படி கைகளை ஊஞ்சலைப்போல வேகமாகப் பின்னோக்கிக் கொண்டு போகவேண்டும். பிறகு பழைய நிலைக்கு வரவேண்டும். இப்படி 20 தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 5

தரையில் மல்லாந்து படுத்துக் கொண்டு தலைக்கு மேல் கைகள் தரையைத் தொடுக் கொண்டு இருக்கும் படி நீட்டி வைத்துக் கொள்ள வேண்டும். கால்களைத் தூக்காமலும் முதுகை வளைக்காமலும் எழுந்து உட்கார்ந்த நிலைக்கு வரவேண்டும். பிறகு முன்னோக்கிச் சாய்ந்து கால் விரல்களைத் தொட வேண்டும். இப்படி 10 தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 6

இடது புறம் சுவர் ஓரமாகப் பாதங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு நிமிர்ந்து நிற்க வேண்டும். இடது கை சுவரைத் தொடுக் கொண்டு இருக்கவேண்டும். முதுகை வளைக்காமல் வலது காலை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு உயர்த்த வேண்டும். பின்னர்ப் பழைய நிலைக்கு வந்து இதேபோல் பின்புறமாக உயர்த்த வேண்டும். இப்படி இரண்டு கால்களிலும் 10 தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 7

இடது பக்கம் சாய்ந்து படுத்துக் கொள்ள வேண்டும். இடது கைகளை மடித்துத் தலையை தாங்கிக் கொள்ள வேண்டும். கால்கள் நேராக இருக்க வேண்டும். வலது காலை 45 டிகிரி அளவுக்கு உயர்த்திப் பின் பழைய நிலைக்கு வரவேண்டும். இப்படி ஒவ்வொரு பக்கமும் 10 தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 8

சமமான தரையில் குப்புறப் படுத்துக் கொள்ள வேண்டும். கால்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு கைகளைத் தோள் பட்டையுடன் ஒட்டினாற் போல மடித்துத் தரையில் வைத்துக் கொள்ள வேண்டும். கால் விரல்களும் முழங்கைகளும் தாங்கிக் கொண்டிருக்கும் விதத்தில் உடலை உயர்த்த வேண்டும். பின்னர்ப் பழைய நிலைக்கு வரவேண்டும். இதுபோல் 10 தடவை செய்ய வேண்டும்.

### பயிற்சி : 9

கால்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு படுக்க வேண்டும். தோள் பட்டை மட்டத்தில் கைகளை இரு

புறமும் நேராக நீட்டி வைத்துக் கொள்ள வேண்டும். முழங்கால்களை மடித்து மார்பருகே கொண்டு வர வேண்டும். கால்களை மட்டும் திருப்பி இடது புறமும் வலதுபுறமும் மாற்றி மாற்றித் தரையைத் தொடும்படி செய்ய வேண்டும். இப்படி 10 தடவை செய்யலாம்.

### பயிற்சி : 10

கால்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு நிமிர்ந்து நின்று கொண்டு கைகளை இடுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். முழுங்கால் களை மாற்றி மாற்றி உயர்த்தி நின்ற இடத் திலேயே ஓடுவது போலச் செய்ய வேண் டும். இதை 100 தடவை வரை செய்யலாம். முடிந்த அளவு வேகமாகவும் செய்ய வேண்டும்.

### மூச்சுப் பயிற்சி

இந்தப் பயிற்சிகள் தவிர மூச்சுப் பயிற்சியும் செய்யலாம். அதாவது நாற்காலி யில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு முடிந்த வரை மூச்சை உள்ளே இழுக்க வேண்டும். அப்படியே சற்று நேரம் நிறுத்தி நிதானமாக மூச்சை வெளியே விடவேண்டும். ஒரு நிமிட நேர ஓய்வுக்குப் பின் மீண்டும் இப் பயிற்சியைச் செய்ய வேண்டும். 10 தடவை வரை இதைச் செய்யலாம். இதனால் உடல் நலம் மேம்படுவதுடன் நல்ல தோற்றமும் பெறலாம்.

### சைக்கிள் பயிற்சி

சிறிய கைப்பிடியுடன் கூடிய நாற்காலி கொண்ட 'பைக்' அல்லது வழக்கமான சைக் கிளில் சிறிய நாற்காலியை வைத்துக்கொண்டு சைக்கிள் பயிற்சியும் செய்யலாம். இந்தச் சைக்கிளில் வசதியாக அமர்ந்துகொண்டு 30 நிமிட நேரம் 'பெடல்' செய்ய வேண்டும்.

தினசரி இப்படிச் செய்தால் உடலில் உள்ள கொழுப்புச் சத்து தானாகக் குறையும். உணவில் உள்ள கழிவுப் பொருள்கள் எல்லாம் வெளியேறி ஊட்டச்சத்து மட்டும் உடலில் சேரும்.

இந்தப் பயிற்சி மிகவும் எளிதானது தான். ஆனால் ஒருவருடம் தொடர்ந்து செய்தால் போதும். உடல் எடை குறைந்து அழகாகத் தோன்றலாம். மேனியும் பளபளக் கும். இதயம் வலுவடையும். மூட்டு வலி, முதுகுவலி, மனச்சோர்வு எல்லாம் அகன்று சுறுசுறுப்புடன் திகழலாம். பொலிவு, புதிய தோற்றத்துடன் அழகாகவும் தோன்றலாம். ❋

*நன்றி : தேவி*

# பேரலையால் ஜீவாவை வாழ்த்தாயோ!

புதுமைப் பாவலர் பொன்னரசு, பெங்களூர்

நீல நெடுங்கடலே நெஞ்சமென்றும் மறக்காத
கோலத்தில் எளியவராம் கொள்கை இளங்குன்று
தோழர்தம் துன்பங்களைத் துடிதுடிப்பாய்த் துடைத்தமகன்
ஏழையர்நம் ஜீவாவை ஏன்மறந்தாய் நெடுங்கடலே!
கோழைகளும் வீரம்பெறக் கொட்டும் முரசறையும்
கூற்றைநீ கேட்டிலையோ மாற்றமிலா நெடுங்கடலே!
வாழையடி வாழையென வந்தநல்ல பொதுவுடைமை
வரலாற்று மறவனைஉன் பேரலையால் வாழ்த்தாயே..

நாளெல்லாம் உழைத்துழைத்து நலிந்தவர்க்கு நீதிநெறி!
நஞ்சுமன நிலக்கிழார்கள் வஞ்சகத்தை வேரறுத்துப்
பாரெல்லாம் உழைக்கின்ற நேரத்தைச் சீர்படுத்திப்
பாட்டாளி மக்கள்தாம் வாட்டத்தைப் போக்கியவர்;
கூர்மதியார்; ஓர்குடையில் நலிவின்றி வாழமக்கள்
குற்றமில்லா நற்றமிழில் குணமாக உரைத்தவரை
ஊர்போற்றும் உண்மையுள்ள உயிர்த்தோழர் ஜீவாவை
உன்னகத்துப் பேரலையால் உயர்த்திநீ வாழ்த்தாயோ?

பச்சைத் தமிழரென்று பாரெல்லாம் கூறப்படும்
பண்புள்ள காமராசர் பள்ளிஒன்று திறப்பதற்கே
இச்சையுடன் வந்தஅவர் இன்தமிழர் ஜீவாவை
இசைந்துஅவர் உடனழைக்க பசையற்ற நம்ஜீவா
உடுத்தஒரு மாற்றுடையும் இல்லாமல் இருந்தாராம்;
உடுத்திருந்த அழுக்குடையை உடன்துவைத்து உலர்த்தஅவை
உலரும்வரை காத்திருந்த முதல்வர்அவர் உடன்சென்றார்;
உண்மைஇந்த வரலாற்றை உயிர்க்கடலே அறிவாயோ?

ஓட்டைக் குடிசைஒன்றில் வசித்திருந்த ஜீவாவை
“வீட்டுமனை கேட்டுஒரு விண்ணப்பம் கொடு'' என்று
நாட்டைஆண்ட நம்முதல்வர் காமராசர் கேட்கின்றார்
''இந்தியத்தில் நலிந்த மக்கள் எல்லோரும் பெற்றபின்பு,
வீட்டுமனை மீதிருந்தால் விண்ணப்பம் கொடுப்பே''னென்று
மாண்புடைய நம்ஜீவா மனுகொடுக்க மறுத்துவிட்டார்.
நாட்டிலுள்ள ஏழைகளின் உயிர்மூச்சாய் வாழ்ந்தவரின்
நூற்றாண்டு இவ்வாண்டு வாழ்த்தாயோ பெருங்கடலே!

விடுதலை வேள்வியிலே கடுமைமிகு காலகட்டம்
வீற்றிருந்த காந்தியார் அருகிருந்த ஜீவாவிடம்
உரையாடும் பொழுதினிலே கடைசியிலே கேட்கின்றார்
''உம்முடைய சொத்துஎன்ன உண்மையைக் கூறு''மென்றார்.
'இந்தியாதான் என்னுடைய இனியஒரே சொத்'தென்றார்.
வந்திருந்த காந்தியார் அதைக்கேட்டு பதைபதைக்க
'இல்லையில்லை நீங்கள்தாம் இந்தியாவின் சொத்''தென்றார்.
நம்தமிழர் ஜீவாவை நன்கறிந்து வாழ்த்திச் சென்றார்!

தன்னலத்தைப் புறக்கணித்துத் தகவுபிறர் நலம்பேணும்
தக்கோர்கள் யாருண்டு? இனிமேலும் பிறப்பாரோ!
நந்தமிழர் நாட்டினிலே பிறந்ததனால் அவர்அருமை
நயக்காமல் போனார்கள் வியப்பிதுபோல் பலவுண்டு
செந்தமிழர் நம்ஜீவா சொற்பொழிவைக் கேட்டிட்டால்
செந்தா மரைமலரும்! செவ்வாழை பழமுதிர்க்கும்!
இந்தியத்தின் ஏழையர்க்குச் சமஉரிமை கேட்டஅவர் - வாழ்க்கைப்
பந்தயத்தில் தோற்றாலும் வரலாற்றில் நிலைத்திருப்பார்.

# தமிழ் சினிமாவின் வரலாறு 6

**கே.டபிள்யூ. செல்வராசா, வுட்சேர்ச், கென்ற், இலண்டன்**

**கன்னியின் காதலி** : அஞ்சலிதேவியும் மாதுரி தேவியும் நடித்த அருமையான படம். இதில் பல நல்ல பாடல்கள் உண்டு. திரு. சிவகணேசன் இப்படத்தின் பாடலையொட்டிக் கூறிய சுவையான சம்பவம். இப் படத்துக்கு அவர் பாட்டன் கவி தேசியவிநாயகம் பிள்ளை எழுதிய 2,3 பாடல்களை இயக்குநர் சேர்த்து விட்டாராம். அவரின் அனுமதி இல்லாமல் பின்னர் இவரிடம் இயக்குநர் மன்னிப்புக் கேட்டாராம். பின்னர் ஒருநாள் சிவாஜி கணேசனை அவரிடம் அனுப்பி அதற் காக மனம் வருந்துவதுடன் ரூபா. 2000/- மும் அதற் காக அனுப்பினராம். சிவாஜி கணேசனை முதன் முதல் கண்ட கவிஞர் யாரப்பா நீ என்று கேட்க நான் புதிதாகச் சேர்ந்துள்ள நடிகன் பராசக்தியில் நடித்துவிட்டுக் கள்வனின் காதலியில் நடிப்பதாகக் கூறினாராம். ஆனால் கவிஞர் பணத்தைத் திருப்பி அனுப்பிவிட்டுப் பாடலை இலவசமாகத் தந்ததாகக் கூறச் சொன்னாராம். இன்னொரு முறை சிவாஜி கூறினாராம் பணத்தை வேண்டாம் என்று திருப்பி அனுப்பிய ஒரே மனிதன் கவி தேசிய விநாயகம் பிள்ளை தாம் என்று. அக் காலத்தில் இப்படியான சுவையான சம்பவங்கள் சம பவித்திருக்கின்றன. எம்.கே.டி.யின் 2, 3 படங்களை விட மற்றப் படங்கள் எதுவும் டி.வி.யில் போட்ட மூலப் பிரதியான பிலிம் சுருளிலிருந்து கசற்றில் பதிபட வில்லை என்று நினைக்கிறேன். டிவி. கசற் வெகு காலத்துக்குப் பின் வந்ததால் இவை மறைந்து விட்டனவோ தெரியாது. படங்களை, நடிகர்களை ஏன் பாடல்களைக்கூடக் காணாத கேட்காத 60 வயதுக்குட் பட்டவர்கள் என் விமர்சனம் சிலவேளை அலுப்பைக் கொடுத்திருக்கலாம். அதற்காக என் வருத்தங்கள். இனி மேல் 1950க்குப் பின்வந்த படங்களை எழுதுகிறேன். இன்று தீபம் தொலைக்காட்சியில் ''பழமையும் இனிமை யும்'' பகுதியில் பராசக்தி ''புதுப்பெண்ணின் மனதைத் தொட்டு'' என்ற பாடல் அரசிளங்குமரியில் ஆனந்தனும் ஈ.வி. சரோஜாவும் நடித்த ''ரோஜா மலரே ராஜகுமாரி'' ஆகிய பழைய பாடல்கள் போட்டார்கள். எனவே 1950க்குப் பின் வந்த படங்கள் கெசற்றாக இருக்கிறது என்பது பெரிய ஆறுதல்.

**லைலா மஜ்னு ''பாலாஜி''** இப்படம் அக் காலத்தில் வெளிவந்த காதல் படங்களில் ஒன்று. இப் படத்தில் டி.ஆர். மகாலிங்கம். எம்.வி. ராஜம்மா நடித் தார்கள். இது உண்மையில் நடந்த ஒரு அரேபிய காதல் காவியம் என்பது எல்லோருக்கும் தெரியும். மகாலிங்கம் கயஸ் ஆகவும் ராஜம்மா லைலாவாகவும் சிறப்பாக நடித்தனர். இதில் டி.ஆர் மகாலிங்கத்தின் பாடல்கள் மனத்தைக் கொள்ளை கொள்பனவாகும். 1950 ஆரம் பத்தில் நான் படிக்கும்போது ஆசிரியர்கள் வாயிலும் இதே பாடல்கள்தாம். ''பைங்கிளியே மனோ ராகினி பாரினில் என்னாசை மோகினி, ''வண்ணமானே உன் நினைவாலே வாடுறேன் புவிமேலே-லைலா வாராய் வாராய் நீயே ஜீவன் லைலா'', ''பறந்து செல்லுதே என் பைங்கிளி அதே பாசமெல்லாம் நெஞ்சில் கொண்டே பாலை மீதிலே'' (இப்பாடலை தீபம் தொலைக்காட்சி யில் சென்ற மாதம் நான் பாடினேன்.) இப்பாடல்கள் இன்று கேட்டாலும் இனிமையாக இருக்கும். துரதிஷ்ட வசமாக இப்பாடல்கள் இக்காலத் தொலைக்காட்சியில் வருவதில்லை. எனவே இக்காலச் சந்ததிக்கு இப்பாடல் களைக் கேட்க கொடுத்து வைக்கவில்லை.

**லைலா மஜ்னு ''பரணி''.** இதே காலத்தில் போட்டிக்கு வெளியிடப்பட்ட ''பரணி''யின் லைலா மஜ்னு. இதுவும் ஒரு சிறந்த படம். இதில் அக்காலக் காதல் மன்னன் ஏ. நாகேஸ்வரராவ் கயஸ் ஆகவும் பி. பானுமதி லைலாவாகவும் திறம்பட நடித்துள்ளனர். கண்டசாலா, பானுமதி ஆகியோர் பாடிய பாடல்கள் நிறைந்திருக்கின்றன. ''ஓ! சிப்பாயி, உன்னைப் பார்க்கப் போகிறேனா - கயஸ்'' என்கின்ற பானுமதியின் பாடல் களும் ''பறந்து செல்லும் பைங்கிளியே மறதியாகுமா இது நியாயமா'' என்ற பாடல்களும் கண்ணீரை வர வழைக்கும் பாடல்கள். இப்பாடல்களை மறுபடியும் ''கேட்கப் போகிறேனா'' என்று ஏங்குகிறேன்.

**காதல்** : இப்படமும் 1952 அளவில் வெளி வந்தது. இதில் ஏ. நாகேஸ்வரராவ் பி. பானுமதி சோடிகள் நடித்தார்கள். அக்காலத்திலும் இப்படி படங்கள் வந்ததா என்று இன்றைய வாலிபர்கள் வியக்கக்கூடும். இப்படமும் காதல் நிறைந்த முழுப்படம். இதில் கண்ட சாலா பாடிய ''துணிந்தபின் மனமே துயரம் கொள்ளாதே சோகம் பொல்லாதே'', என்னும் பாடலும் ''நான் கொண்ட காதல் இவ்வாறுதான் நட்டாற்றில் பாழாய்ப் போனதே'' என்ற பாடலும் இன்றும் மனத்தில் பதிந்திருக்கின்றன. கருத்தான வசனங்களும் பொருத்த மான இசையும் கொண்டன. காதல் காட்சிகள் இக் காலத்துக் காதல் காட்சிகள் போல் கதாநாயகன், கதா நாயகி கட்டிப்பிடித்து உருளுவது, முத்தங்கள் கொடுப் பது, தோழிப் பெண்களுடன் இடுப்பு, தொடை காட்டி ஆடுவது அல்ல. பெற்றோர் பிள்ளைகளுடன் ஒருமிக்க இருந்து பார்க்கக்கூடிய வகையில் கண்ணாலும் முக பாவனையாலும் காதலை நன்றாக வெளிப்படுத்து வார்கள். அக்காலத்தில் ஏ. நாகேஸ் வரராவ், ஜெமினி கணேசன் (காதல் மன்னன்) இருவரும் காதல் காட்சிகள், காதல் தோல்விகள் போன்ற பாத்திரங் களில் மிகவும் நன்றாக இயற்கையாக நடித்தார்கள்.

**கல்யாண பரிசு :** ஸ்ரீதருக்கு சிறந்த இயக்குனர் என்னும் பெருமையைத் தேடிக் கொடுத்த படம். ஜெமினி கணேசன், விஜயகுமாரி, சரோஜாதேவி, கே.ஏ. தங்கவேலு, எம். சரோஜா, கௌரவ நடிகராக எ. நாகேஸ் வரராவ் நடித்த படம். ஜெமினி கணேசனும் சரோஜா தேவியும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள். அவளின் தமக்கை விஜயகுமாரி அவரைக் காதலிப்பதை அறிந்த தும் தங்கை தன் காதலைத் துறக்கிறாள். பாடல்கள் எல்லாம் இப்போதும் மனத்தில் பதிந்த பாடல்கள், ஜிக்கி பாடிய ''துள்ளாத மனமும் துள்ளும், சொல்லாத கதைகள் சொல்லும், இன்பத் தேனையும் வெல்லும்'' ஆகியன. ஏ.எம். ராஜாவின் இசையமைப்பில் அவர் பாடும் ''காதலிலே தோல்வியுற்றான் காளை ஒருவன்'', ''உன்னைக் கண்டு நான் வாட என்னைக் கண்டு நீ வாட'' என்ற பாடல்கள் சிறந்தவை. தங்கவேலு-சரோஜா ஜோடியின் நகைச்சுவை போல் இதுவரை இன்னும் வரவில்லை. எழுத்தாளன் ''பைரவன்'' என்று தன்னைத் தானே சிரிக்கவும் சிந்தனை செய்யவும் கூடிய நகைச் சுவை. சோகக் கதையுடன் பின்னிப் பிணைந்து செய்வது ஒரு தனிச் சிறப்பு.

**களத்தூர் கண்ணம்மா :** ஜெமினி கணேசன், சாவித்திரி நடித்த புகழ்பெற்ற படம். இப்படத்தில் கமல ஹாசன் முதன்முதலில் நடித்தார். அனாதைகள் ஆஸ்ர மத்தில் 7-8 வயதுச் சிறுவனாக நடித்து ''அம்மா வும் நீயே அப்பாவும் நீயே அன்புடனே ஆதரிக்கும் தெய்வ மும் நீயே'' என்ற பாடலை அவரே பாடுகிறார். கிராமச் சூழ்நிலைக் கதை. சாவித்திரியின் ஆரம்பப் படங் களில் ஒன்று. இப்படத்தின் பின்தான் ஜெமினி கணேசன் சாவித்திரியை இரண்டாவது தாரமாக மணந்தார். சாவித் திரியின் இயற்பெயர் சாமுண்டிதேவி என்பதாகும்.

**வஞ்சிக் கோட்டை வாலிபன் :** ஜெமினி கணேசன், பத்மினி, வைஜயந்தி மாலா, பி.எஸ். வீரப்பா ஆகியோர் நடித்த படம். ஜெமினி கணேசன் சண்டைக் காட்சிகள் காதல் காட்சிகளில் நன்றாக நடித்துள்ளார். இப்படத்தின் உச்சகட்டம் பத்மினிக்கும், வைஜயந்தி மாலாவுக்கும் நடக்கும் நடனப் போட்டியாகும். இருவரும் வழவூர் ராமையா பிள்ளையின் சிஷ்யைகள் மட்டுமல்ல, நடனக் கலையில் கை தேர்ந்தவர்கள். இந்த நடனம் ஒன்றுக்கே காசு கொடுத்துப் படம் பார்க்கலாம்.

**மிஸ்ஸியம்மா :** ஜெமினி கணேசன், சாவித்திரி ஜோடியாக நடித்த படம். படத்தின் பெயரைக் கொண்டே சாவித்திரி ஆசிரியையாக நடித்தார். காதல் காட்சிகள் நிறைய உண்டு. ஏ.எம். ராஜா பாடிய ''பழகத் தெரிய வேண்டும் உலகில் பார்த்து நடக்க வேணும்- பெண்ணே'' என்ற பாடல் எல்லார் வாயிலும் முணுமுணுக்கப் பட்டது. ஜெமினி கணேசன் பியானோவில் தட்டிக் கொண்டே ''கடுகடுவென முகம் மாறுதல் கா்நாடக வழக்கமன்றோ'' என்று பாடும்போது சாவித்திரி முகத்தை உம்மென்று வைத்து நடிப்பதும் சிறப்பான நடிப்பாகும்.

**மல்லிகா :** இது ஸ்ரீதர் இயக்கிய இன்னுமொரு வெற்றிப்படம். ஜெமினி கணேசனுக்குப் பொருத்தமான வேடம். காதல் கதை. காதலில் தோல்வியடைந்ததும் இவர் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து ஒரு ''பாதர்'' ஆக யேசுவின் சேவைக்காகத் தன் வாழ்க்கையை அர்ப் பணிக்கிறார். ஏ.எம். ராஜா பாடிய ''மயக்கமா தயக்கமா, மனதில் துயரமா'' என்னும் பாடல் சோகத்தையும் பொருத்தமான இசையையும் கருத்தையும் கொண்டது.

**மருமகள் :** என்.டி. ராமராவ், சாவித்திரி நடித்த ரசித்து பார்க்கக்கூடிய படம். இதில் அவர்கள் சிறுவர் களாக இருக்கும்போதே ஒருவரில் ஒருவர் அன்பு வைத்து பின் பெற்றோரின் விருப்பமையால் பிரிந்து கடைசியில் ஒன்று சேர்கிறார்கள். எ.எம். ராஜாவும் பி.ஏ. பெரியநாயகியும் பாடிய ''சின்னச் சின்ன வீடு கட்டி சிங்கார வீடு கட்டி ஒண்ணாக ஆடினோம் முன்னாலே நமது சொந்தம் இன்னாளில் போவதோ பின்னாலே'' என்ற பாடல் இன்னும் கேட்க இனிமையான காதல் பாடலாகும்.

*

(தொடரும்)

## உலகின் முதல் தாய்மொழி தமிழே!

தமிழ் பதினாறு வகைச் சிறப்புகளையும் ஒருங்கே கொண்ட மொழி. தொன்மை-முன்மை-ஒண்மை (ஒளிமை)-எண்மை(எளிமை)-இளமை-வளமை-தாய்மை-தூய்மை-செம்மை-மும்மை-இனிமை-தனிமை-பெருமை-திருமை-இயன்மை-வியன்மை என்னும் பண்புகளை உடையது தமிழ் மொழி எனத் தம் ஆய்வுகளின் வழி மெய்ப்பித்தவர் மொழி ஞாயிறு **தேவநேயப் பாவாணர்.**

மேலும் அவர், தமிழே உலக முதல் தாய்மொழி என்பதனை வலியுறுத்திட ஒன்பது சான்றுகள் தருகிறார்.

1. தமிழ் குமரி நாட்டில் தோன்றியமை.
2. பழந்தமிழ் திராவிட மொழிகளுக்குத் தாயாக இருத்தல்.
3. ஆரிய மொழிகளாகக் கருதப்படும் வடநாட்டு மொழி களின் அடிப்படை தமிழாக இருத்தல்.
4. மேலையாரிய மொழிகளிலும் அடிப்படைச் சொற்கள் பல தமிழாக இருத்தல்.
5. இருமுது குரவரைக் குறிக்கும் அம்மை அப்பன் என்னும் தமிழ்ச்சொற்கள் திரிந்தும் திரியாமலும் பெரும்பாலான உலகப் பெருமொழிகளில் வழங்குதல்.
6. எல்லா மொழிக் குடும்பங்களிலும் ஒன்று இரண்டேனும் தமிழ்ச்சொல் இருத்தல்.
7. ஆரிய மொழிகளில் உள்ள சுட்டுச் சொற்களெல்லாம் தமிழ்ச் சுட்டுச் சொற்களிலிருந்து தோன்றியிருத்தல்.
8. தமிழ் இலக்கண அமைதிகள் பல மொழிகளிலும் காணப்பெறுதல்.
9. பல மொழிகளுக்கு அல்லது மொழிக் குடும்பங்களுக்குச் சிறப்பாகச் சொல்லப்பெறும் இலக்கண அமைதிகளின் மூலநிலை தமிழில் இருத்தல்.

வாழ்வியல் வழிகாட்டி

12

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

## மாணவனின் மகத்தான தேர்வுத் திட்டம்

மீண்டும், நம் உதாரணமான மாணவனின் தேர்வு திட்டமிடலுக்கு வருவோம். அவனுக்காக நாம் இப்பொழுது ஒரு விவரமான திட்டமிடல் செய்யப் போகிறோம். இது எந்த இலக்கினை அடையவும் உதவும் திட்டமிடல் முறை என்பதால் இதனை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

முதலில் தேவை பிப்பிரவரி, மார்ச்சு மற்றும் ஏப்பிரல் மாத காலண்டர். மாத காலண்டர் எதற்கு? காரணம் இருக்கிறது. Bird's Eye view என்பார்கள். பறவை உயரப் பறந்து கொண்டு இருக்கும்பொழுது, அது கீழே பார்த்தால், அது பார்க்கும் இடத்தின் மொத்த பரிமாணமும் தெரியுமல்லவா? அது போலச் சரியான திட்டமிடலுக்கு எட்டி நின்று முழு பரிமாணத்தையும் பார்ப்பது அவசியம். இதற்குப் 'பருந்துப் பார்வை' என்று பெயர்.

உங்கள் பையில் இக்கும் பேனாவை எடுத்துக் கன்னத்திலும், கண்ணிலும் படுமாறு பிடியுங்கள். ஆம்... எடுத்துப் பிடியுங்களேன். பிடித்தாயிற்றா? என்ன தெரிகிறது? பேனா என்ன நிறம்? என்ன நீளம்? அதில் என்ன எழுதியிருக்கிறது? எதையாவது சரியாகப் படிக்க முடிகிறதா? இயலாது. சரி இப்பொழுது ஒரு அங்குலம் தள்ளி வைத்துப் பாருங்கள்! கொஞ்சம் கூடுதலாகத் தெரியும். இப்பொழுது கையை நீட்டிப் பேனாவை இன்னும் தள்ளிப் பிடித்துப் பாருங்கள்! முந்தைய கேள்விகள் அனைத்திற்கும் விடைகள் கிடைக்கும்.

ஒரு பிரச்சினைக்குள் இருந்துகொண்டு அதைப் புரிந்து கொள்ள முடியாது. தள்ளி நின்று (விருப்பு வெறுப்பு இன்றி) பார்த்தால் தான் அதனைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதுபோல, ''மொத்த கண்ணோட்டத்திற்கு' இந்த விஷயத்தில் 'நேரம்' தான் 'கீ ஃபாக்டர்' என்பதால் கொண்டு வருவோம். பிப்பிரவரி, மார்ச்சு மற்றும் ஏப்பிரல் மாதக் காலண்டர்களை. அவற்றிலிருந்து நமக்குத் தேவையான காலத்தைக் கீழ்க்காணுமாறு எடுத்து ஒரு தாளில் எழுதிக் கொள்வோம்.

**பிப்பிரவரி – மார்ச்சு – ஏப்பிரல்**

| மாதம் | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| பிப். | | 25 | 26 | 27 | 28 | | |
| மார்ச் | | | | | | 1 | 2 |
| | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| | | தமிழ்-I | தமிழ்-II | ஆங்-I | ஆங்-II | கணிதம் | |
| | 31 | | | | | | |
| மாதம் | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| ஏப்ரல் | | 1 | 2 | 3 | 4 | | |
| | | அறிவியல் | சமூகவியல் | | | | |

### கவனிக்க வேண்டியவை :

இத்தகைய காலத் திட்டமிடல் (டைம் பிளானிங்) எந்த ஓர் இலட்சியத்திற்கும் பொருந்தும் எனலாம்.

இதுவே ஒரு மகளின் திருமண நிகழ்ச்சியாக இருக்கலாம். 'தமிழ் 1' க்குப் பதிலாக அங்கு 'நிச்சயதார்த்தமாக' இருக்கலாம். 'ஆங்கிலம் 1' என்பது இங்கு 'மாப்பிள்ளை அழைப்பாக' இருக்கலாம்.

இல்லையேல் 'தமிழ் 1' என்பது புதிய கடை திறக்கும் நாளாக, அல்லது புத்தகம் வெளிவர வேண்டிய நாளாக இருக்கலாம். விஷயம் எதுவாக இருந்தாலும் சரி. திட்டமிடல் அடிப்படை அணுகுமுறை ஒன்றுதான்.

ஆயிற்று. மொத்தப் பார்வைக்கு நாள்களை படம் வரைந்தாயிற்று. இதை இப்பொழுது ஊன்றிக் கவனிப்போம். வரைந்த விஷயத்திலிருந்து என்ன விஷயங்களைக் கண்டறியலாம்?

1. இன்றிலிருந்து (24 பிப்பிரவரி) என்று வைத்துக் கொள்வோம். சரியாகத் தேர்வுகள் தொடங்க ஒரு மாதம் உள்ளது. ஒப்புக் கொள்கிறீர்களா? மேலோட்டமாகப் பார்த்தால் சரி, ஆனால் அது உண்மை இல்லை. கவனித்துப் பார்த்தால் பிப்பிரவரிக்கு 28 நாள்கள் தாம் என்பது விளங்கும். ஆக இன்னும் அதிகபட்சம் 28 நாள்களே உள்ளன.
2. கணிதம், அறிவியல் மற்றும் சமூகவியல் தேர்வுகளுக்கு முன்னால் ஒவ்வொரு நாள் விடுமுறை உள்ளது.
3. தமிழ் 1க்கும் முதல் நாள் விடுமுறை போலத் தான். ஏன் எனில் அது முதல் தேர்வு. அதற்கு முன்பு விடுமுறை நாள்களே.

4. தமிழ் 1க்கு அது உண்டு என்றால் மற்றத் தேர்வுகளுக்கு மீதம் 27 நாள்களே உள்ளன.

5. தமிழ் I, ஆங்கிலம் I மற்றும் ஆங்கிலம் II ஆகிய தேர்வுகளுக்கு முன் விடுமுறை இல்லை.

6. தேர்வுகள் அனைத்தும் காலை நேரம்தான் நடைபெறுகின்றன.

## ஒவ்வொரு தேர்வுக்கும் உள்ள நேரம்

'மொத்தப் பார்வை' எவ்வளவு அவசியமோ அதே அளவு அவசியம் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பார்ப்பதும்.

தேர்வுக்கு முன் ஒருநாள் விடுமுறை இருந்தால் அந்தத் தேர்வுக்காக இறுதியாக நன்கு படிப்பதற்கும் படித்தவற்றை நினைவுபடுத்திக் கொள்வதற்கும் மிகவும் உதவும். அதே சமயம் தேர்வுக்கு முன் ஒருநாள் விடு முறை இல்லாத மூன்று தேர்வுகளுக்காகவும் அவற்றைக் கூடுதலாகப் படிப்பதற்காகவும் ஒதுக்க வேண்டிய நாள்கள் மூன்று. அந்த மூன்று நாள்களையும் மொத்தக் கணக்கிலிருந்து விட்டுவிட்டால் மீதம் தேர்வுக்குப் படிப்பதற் காக உள்ள நாள்கள் 24 தாம். நாம் முதலில் எவ்வளவு நாள்கள் இருப்பதாக நினைத்திருந்தோம்? முப்பது. ஆனால், உள்ளதோ 24 நாள்கள்தாம்.

திட்டமிடலின் முதல் படியிலேயே நமக்கு ஒரு சரியான பார்வை வந்திருப்பதைக் கண்டிருப்பீர்கள், 'பொத்தாம் பொதுவான' 'நிறைய டைம் இருக்கு' என்ற நம்பிக்கை. மனப்பான்மை என்பது எவ்வளவு ஆபத்தானது என்று தெளிவாகி இருக்கின்றது அல்லவா?

## அடுத்த கட்டம்

ஐந்து தேர்வுகளுக்குத் தயாரிக்க 24 நாள்கள் உள்ளன. என்ன செய்யலாம்? 24/5 என்று வகுத்து ஒரு தேர்வுக்குக் கிட்டத்தட்ட ஐந்து நாள்கள் எடுத்துக் கொள்ளலாமா? இந்த முறை நாம் இதற்கு உடனே 'ஆமாம்' சொல்லமாட்டோம். இதையும் ஊன்றிப் பார்க்கலாமே என்று தோன்றும். நாம்தாம் திட்டமிட்டுச் செயல்பட முடிவு செய்து இருக்கிறோமே! இப்பொழுது எதற்கு எவ்வளவு தேவை என்னும் கோட்பாட்டை நினைவில் கொள்ள வேண்டும்.

அந்த மாணவனுக்குக் கணிதத்தில் 100/100 வேண்டும். ஆனால் அவன்தான் 'கணக்கில் புலி' ஆயிற்றே! ஸ்வாட் அனாலிசிஸ் (பலங்கள், பலவீனங்கள்...) நினைவிருக்கலாம். ஆக அதற்கு ஏன் ஐந்து நாள்கள்? தேவையில்லை. அதுவும் கணிதம் புரிந்து கொள்ள வேண்டியவைதாம் பெரும்பாலும். பார்த்துக் கொள்ளலாம்.

அப்படி என்றால் கணக்கிற்கு எவ்வளவு நாள்கள் வேண்டும்? மூன்று போதும் என்று வைத்துக் கொள்வோம்.

அவனுடைய பலவீனம்-ஆங்கில இலக்கணம் என்பதையும் முன்பு கண்டுபிடித்தோம். ஆக அதற்கு கூடுதல் நாள் வேண்டும். சரி முழுவதுமாக ஒருநாள் ஒதுக்கிவிடலாம்.

இந்தக் கட்டத்தில் மற்ற இலட்சியங்களுக்கும் இந்த வழி திட்டமிடுதல், நாள்கள் ஒதுக்குதல் சாத்தியம் தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, மாப்பிள்ளை வீட்டுக்காரர், மாப்பிள்ளை துணிகளைப் பெண் வீட்டுக்காரரான நம்மை வாங்கச் சொல்லிவிட்டார் என்பதால், அதற்குக் கூடுதல் நாள்கள் அல்லது நபர்கள் தேவைப்படலாம்.

சரி பலம், பலவீனங்கள் முடிந்தது என்று எடுத்துக் கொண்டால், அடுத்து நாம் 'எடுத்து வைக்க' வேண்டிய ஜாக்கிரதையான அடி, எதிர்பாராத திருப்பங்கள் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம். *(தொடரும்)* ✱

## பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் புதிய பொதுச் செயலாளர் திரு. தரும இரவீந்திரமோகன்



பல அறிஞர் பெருமக்களை உருவாக்கிய மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இரவீந்திர மோகன் தமிழுணர்வும் சமயப்பற்றும் மிகுந்தவர். சைவப்பாரம்பரிய பூமியாகிய இணுவில் மண்ணின் மகளைத் திருமணம் செய்து கொண்டவர்.

பெருமையும் மகிமையும் பெற்ற மருதடி விநாயகர் ஆலயத் திருப்பணியில் ஈடுபாடு கொண்டவர். மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராக இருந்து அக்கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்து வருபவர். வோல்தம்ஸ்ரொ கற்பக விநாயகர் ஆலயப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டவர். சைவமும் தமிழும் வளர்த்துவரும் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்துடன் பல வருடங்களாக ஈடுபட்டு உழைத்துவரும் திரு. இரவீந்திரமோகன் அவர்கள் சங்கத்தின் 31ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அதன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சைவத் தமிழ் உணர்வு மிக்க இவர் ஈழத்தில் சைவமும் தமிழும் வளர்த்த நாவலர் பெருமானுக்குப் பிரித்தானிய நாட்டில் சிலைவைக்க முன்னின்று உழைத்தவர். சைவமுன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சிக்கு மேன்மேலும் உழைக்கக்கூடிய பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டுகிறோம். வாழ்த்துகின்றோம்.

## பெயரியல் நிபுணர் கே.ஆர்.கே (K.R.K.) அவர்களுக்குப் பாராட்டும் விருது அளிப்பும்

சென்னையில் பிரபலமான பெயரியல் நிபுணர் (Nameologist) கே.ஆர்.கே (K.R.K.) அவர்களுக்கு அஜந்தா பைன் ஆர்ட்ஸ் நிறுவனம் சார்பில் இளம் சாதனையாளர்களுக்கான பாராட்டு விழாவும், விருது அளிப்பு விழாவும் நடைபெற்றது. ஜெர்மன் அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் திரைப்பட இயக்குர் எழில் இவரைப் பாராட்டி விருதும் அளித்துச் சிறப்பித்தார்.

துள்ளாத மனமும் துள்ளும், பூவெல்லாம் உன் வாசம் போன்ற வெற்றிப் படங்களை இயக்கியவர் இயக்குனர் எழில். இந் நிகழ்வில் பழைய திரைப்படப் பாடல்கள் காப்பாளர் அகிலன், சின்னத்திரை நடிகர் டிங்கு, வழக்கறிஞர் கணேசன், கலைஞர் தொலைக்காட்சி மேலாளர் பெரைரா, எடிட்டர் சுபாஷ் ஆகியோரும் விருது பெற்றனர். செல்வராஜின் நன்றியுரைக்குப்பின் மோகனா ரிதம்ஸ் இன்னிசைக் குழுவினரின் இசை நிகழ்சியுடன் முடிவுற்றது.



## பெங்களுரு சிற்பக்கலை வேந்தர் மு. வைத்தியலிங்கம் இல்லத் திருமணம்

கர்நாடக மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த பிரபல சிற்பக்கலை வேந்தர் மு. வைத்தியலிங்கம் திருமதி அங்கம்மாள் (எ) மல்லிகா ஆகியோரின் மகன் வை. விஷ்ணுகுமாருக்கும் ஆறுமுகம் இந்திராதேவி ஆகியோரின் மகள் உமா மேனகாவுக்கும் 16.3.2008 அன்று காரைக்குடி சுபலட்சுமி திருமண மஹாலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திரைப்படப் பாடகி எல்.ஆர். ஈஸ்வரி, சுடரொளி இதழின் பதிப்பாசிரியர் இரா.மதிவாணன் முதலானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திரைப்பட இசையமைப்பாளர் பி. பலராம் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

இல்லற வாழ்வைத் தொடங்கும் இவ் இளம் இணையரை இலண்டன் சுடரொளி வாழ்த்துகிறது.
(வண்ணப்படங்கள் பக்கம் 25ல் பார்க்க)

கனடா
நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
முரசொலி
தெரிவிப்பது நாங்கள் தீர்மானிப்பது நீங்கள்
TEL: 416-751-2022 FAX: 416-498-5065

## மலேசியா பத்துமலை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற தைப்பூச காட்சிகள்









நன்றி : இ. பரமானந்தன், குவாந்தான், மலேசியா

# MALAYSIAN GOVERNMENT SPONSORED ATROCITIES AGAINST INDIAN TAMIL MINORITIES

ALEX DOSS, USA

For many tourists visting tropical Southeast Asia, Malaysia is one of the hottest attractions on their list of places to see. From luxurious beach resorts and five star hotels, to shopping malls thronged with numerous fast food chains such as McDonalds, KFC and Starbucks one would think they are back in the U.S. However, with all its modernitys and resemblances of a first world nation, it is 50 years behind in civil rights and racial equality amongst its minority Indian and Chinese populations.

On Nov. 14, 2007, nearly 30,000 ethnic Tamil Malaysians of Indian origin staged a peaceful rally for equal rights in the heart of the capital of Kuala Lumpur. This was met with tear gas and water cannons laced with chemicals from the Malaysian Royal police. Within minutes, what once resembled a first world democratic country began to look more like a Burmese crackdown on peaceful demonstrators which earned the Government harsh condemnation from Amnesty International and Human Rights Watch. Furthermore, Prime Minsiter Abdullah Badawi threatened to use the internal Security Act (ISA), which allows detention without trial.

Under this ISA, hundreds of cases of torture and even deaths while in custody have been reported. May be at first glance Malaysia would not expect anything like this happening. However, the roots of this problem go back during British rule with the Indian Tamils bearing the brunt of the hardships placed upon them.

Indian Tamils were originally brought to the peninsula to work in the rubber and oil palm plantations during the 19th and 20th centuries. From the 1930s onwards and after the abolition of indentured servitude, Tamils from India started taking on other jobs. However, even after the abolition of indentured servitude, 95% of those brough from India have continued to undergo hard working conditions with poor schooling facilities for their children.

After independence from the Britain in 1957, Malay was made, the official and national language with Islam designated as the state religion. Special rights were reserved for the Malays or Bumiputras (Sons of the soil) in areas of employment, quotas for scholarships and business permits, including the reservation of designated lands for Malays. Special loans were given to the Malays to start businesses which do not have to be repaid in many cases. In places like the United States affirmative action was meant to help minority groups to get into schools. But with Malaysia, it was totally in the reverse where affirmative action was to benefit the Malay majority, while marginalizing the Indian Tamil and Chinese minority.

Regardless of political groups such as the Malaysian Indian Congress (MIC) which says it represents the Indian population, racial discrimination and suppression continued throughout the years, Sadly, groups such as the MIC have only served their own interest and as pawns by the ruling United Malays National Organization (UMNO).

Resentment against discrimination was met with violent suppression from the Malay government. It was not till a decade later when the country witnessed its first anti-Chinese riots of 1969. The result left 196 people dead with scores wounded. Since then, Malaysia has continued its emergency rule.

From the 1970s onwards, police brutality and religious intolerance have been targeted against minority groups, particularly against the Indian Tamil population. A majority of Malaysian Indians belonging to the Hindu faith have had over 15,000 of their temples demolished over the past 50 years which drew concern from the United States Commission on International Religous Freedom, Furthermore, Tamil shools have been neglected with literally no funds set aside for improvement, while roughly 300 Tamil schools are being demolished for development projects.

Other religions are not exempt from religious intolerance. Malaysian customs officials have seized 32 Bibles from a traveler which were destined for a church. Even in church meetings, if Malay is in the audience, the pastor could be arrested and charged. In some cases if it is a visitig pastor from another country his or her passport could be confiscated by the Malaysian government.

Even Malays are subject to strict Islamic rules where they cannot convert to another faith. A human right group known as SUARAM has exposed this injustice where one Malay individual who converted outside of his religion was jailed, tortured and even humiliated where he was told to strip naked and to pose imitating the Crucification of Christ. The Becket Fund, a religious rights group, has reported of a young Malay woman who converted to Christianity and wanted her religious identification to be changed on her national ID card. She was later arrested under Shariat law.

Apart from infringement of freedom of religion is police brutality. Polic brutality is heavily meted out upon the Indian Tamil population who form 60% of cases of death by police shootings and death in police custody when they form less than 10% of the population. As quoted from the Malaysian Star, "it has been revealed in the Malaysian Parliament that from 1989 to 1999, 635 people were shot dead by the Royal Malaysian Police Force. This works out at 1.3 persons shot dead every week," There have also been numerous reports from victims and families that there is an unofficial shoot to kill order by Police top brass that results in these extra judicial killings.

It was not till 2007 when a civil rights group known as the Hindu Rights Action Force (HINDRAF) spearheaded the recent equal rights movement with 18 demands from Malaysian Indians in regards to ending racial and religious discrimination. As a result of the recent peace rally flanked with pictures of former Mahatma Gandhi, five HINDRAF lawyers have been detained under the Internal Security Act. Sadly, the present Malaysian government is now taking advantage of the situation and deeming civil rights activists standing up for justic as terrorists. (THE END.) ❋

# தமிழ் ஆண்டு எது?

வ. வேம்பையன், மறைமலை நகர், தமிழ்நாடு.

## காலத்தின் அருமை

நம் வாழ்வில் திரும்பப்பெற முடியாதவை மூன்று. ஒன்று காலம், மற்றவை மானம், உயிர். குடும்பம், குமுகாயம், ஊர், நகர், காடு, உலகம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கணக்கிடுவதற்குக் கால அளவு இன்றிமையாத ஒன்றாகியது.

'நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்'

என்ற குறள் மூலமும் காலம் அறிதல் என்ற அதிகாரத்தின் வழியும் காலத்தின் அருமையைத் திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

நம் முன்னோர்கள் காலத்தை நொடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானியல் முறைப்படி வரையறை செய்துள்ளனர். 60 நாழிகையை ஒருநாளாகவும் ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று ஆறு சிறு பொழுதுகளாகவும் ஓர் ஆண்டை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்று ஆறு பெரும் பொழுதுகளாகவும் பிரித்துள்ளார்கள்.

காலத்தைக் கணக்கிடுவதில் இத்துணைக் கவனம் செலுத்திய தமிழர்கள் வாழ்க்கை, வரலாற்று நிகழ்ச்சிகளைத் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு ஆகிய வற்றுக்குப் பொதுவான தொடர் ஆண்டுக்கணக்கால் குறிப்பிடும் வழக்கத்தைப் பின்பற்றவில்லை என்பது வியப்பாக இருக்கிறது; வருத்தம் தருகிறது.

## தொடர் ஆண்டு

தலைநகரின் தோற்றம், பேரரசன் பிறப்பு, அரசர்கள் முடிசூட்டிக்கொண்ட ஆட்சித் தொடக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த அரசர் பெயரோடு தொடர் ஆண்டு கடைப்பிடித்து வந்தனர் என்று சங்க இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் மூலம் தெரிகின்றன.

நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பொதுவான தொடர் ஆண்டால் காலத்தைக் கணக்கிடல் வேண்டும் என்ற கருத்து அரசர்களிடம் இல்லை என்று தோன்றுகிறது. தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் அதன் இன்றியமையாமையை அரசர்களுக்கும் பொதுமக்களுக்கும் எடுத்துக் கூறியதாகவும் தெரியவில்லை.

## 60 ஆண்டு வந்த வழி

இந்தச் சூழ்நிலையையும் தமிழர்களிடம் மண்டிக் கிடந்த கடவுள், மதம், சாதி, மூட நம்பிக்கைச் செல்வாக்கையும் அரசர்களிடம் பெற்றுள்ள நெருக்கத்தையும் பயன்படுத்திப் 'பிரபவ' முதல் 'அட்சய' வரை உள்ள 60 ஆண்டு முறையைப் புகுத்திவிட்டது ஆரியம்.

அறுபது ஆண்டுகளின் பெயர்களில் ஒன்று கூடத்தமிழ் இல்லை. 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாகவும் இல்லை. அதற்கு வழங்கும் கதையோ ஆபாசமாகவே இருக்கிறது. அந்தக் கதை வருமாறு:

"ஒரு முறை நாரத முனிவர் கிருஷ்ணமூர்த்தியை நீர் அறுபதினாயிரம் கோபிகைகளுடன் கூடி இருக்கிறீரே, எனக்கு ஒரு கன்னிகை தரலாகாதா என்று கேட்க, அதற்குக் கண்ணன் 'நான் இல்லாப் பெண்ணை வரிக்க' என்றான். இதற்கு நாரதர் உடன்பட்டு அறுபதினாயிரம் வீடுகளிலும் பார்த்தார். எங்கும் அவர் இல்லாத பெண்களைக் காணமுடியாததால் நாரதர் கண்ணனிடமே வந்து அவர் திருமேனியில் மையல் கொண்டு அவரை நோக்கி 'நான் தேவரீரிடம் பெண்ணாய் இருந்து ரமிக்க எண்ணம் கொண்டேன்' என்றார். கண்ணன், நாரதரை யமுனையில் ஸ்நானம் செய்ய ஏவ, நாரதர் அவ்வாறே செய்து ஓர் அழகுள்ள பெண்ணாக மாறினார். இவருடன் கண்ணன் 60 வருடம் கிரீடித்து அறுபது குமாரரைப் பெற்றார். அவர்கள் 'பிரபவ' முதல் 'அட்சய' இறுதியானவர்களாம். இவர்கள் வருஷமாம் பதம் பெற்றனர்.

*- பக்கம் 1392/அபிதானசிந்தாமணி/1934*

இப்போது வழங்கும் 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்பவனால் அல்லது கனிஷ்கனால் கி.பி. 78 இல் ஏற்பட்டவை. இவை வடநாட்டு அரசனால் ஏற்பட்டவையாதலின் வடமொழிப் பெயர்களாய் உள்ளன.

*- பக்கம் 7/தி ஹிந்து/10-03-1940*

60 ஆண்டுச் சக்கரம் சுற்றிச் சுற்றி வருவதனாலும் மிகக் குறுகியதினாலும் சரித்திர நூற்குப் பயன்படாது. ருத்ரோத்காரி என்று கூறினால் எந்த ருத்ரோத்காரி என்று அறியப்படாமையால் இந்த அளவு இன்மை பற்றித் தமிழுக்கு ஒரு குறையும் இல்லை.

*- பக்கம் 163/பாவாணரின் ஒப்பியன்மொழி நூல்/1940*

மேற்குறிப்பிட்டவை மூலமாக 60 ஆண்டு வந்தவழி, அது நடைமுறைக்கு நாட்டில் வந்த ஆண்டு, சரித்திர நூலுக்குப் பயன்படாமை ஆகியன பற்றிய செய்திகளை நாம் அறியமுடிகிறது.

கண்ணனும் நாரதரும் கலவி செய்து பெற்றெடுத்த குமாரர்கள்தாம் 60 தமிழ் வருடங்கள் என்பது கதை. எல்லாரும் குமாரர்கள்; குமரியே இல்லை.

ஆண்டுக்கதையிலும் ஆண் ஆதிக்கமே! ஆணும் ஆணும் கலவி செய்தால் பிள்ளை பிறக்குமா? 'எய்ட்சு' (Aids) நோய் பிறக்குமா? இந்தக் கதையே அருவருக்கத்தக்கது; ஆபாசமானது; அறிவுக்கும் அறிவியலுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தம் இல்லாதது; கருத்துக்கும் காலத்துக்கும் ஒத்துவராதது; மானமும் அறிவும் உள்ள மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதது.

எந்தச் சொல்லும் தமிழ் இல்லை; தமிழில் மொழிக்கு முதலில் வராத எழுத்துகள் பல; அனைத்துச் சொற்களும் வடமொழி வடிவங்களே. தமிழ் மொழிக்கும் மரபுக்கும் பண்புக்கும் மாறானவையே.

இந்தக் குழப்ப ஆண்டு முறையால் குடும்பம், குமுகாயம் (சமுதாயம்), நாடு, உலகம் ஆகியவற்றின் வாழ்க்கை, வரலாற்று நிகழ்ச்சிகளை 60 ஆண்டுகளுக்கு மேல் கணக்கிடுவதற்கு முடியவில்லை.

இந்த 60 ஆண்டு முறையும் பிறவும் தமிழ் காட்டுமிராண்டி மொழி; தமிழர்கள் காட்டுமிராண்டிகள் என்பதற்குச் சான்றாக விளங்குவதால் தாம் அறிவு ஆசான் தந்தை பெரியாரும் அரசியல் ஆசான் பேரறிஞர் அண்ணாவும் தமிழ் அறிவு மொழி என்றும் தமிழர்கள் மானமும் அறிவும் உள்ள மக்கள் என்றும் விளங்கச் செய்வதற்குத் தங்கள் இறுதி மூச்சுவரை எழுத்து, பேச்சு, பரப்புரை (பிரச்சாரம்), போராட்டம் முதலியவை மூலம் பாடுபட்டார்கள்.

## திருவள்ளுவர் ஆண்டு

இந்த ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பு, வாழ்வு முதலியவற்றுக்கு ஏற்பட்டுள்ள அழிவும் இழிவும் எண்ணிப்பார்த்து, உணர்ந்து தெளிந்த தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள் 1921 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி ஆராய்ந்தார்கள்.

இயேசு கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் திருவள்ளுவர் என்றும் அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும் அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது என்றும் முடிவு செய்தார்கள்.

இந்த முடிவு செய்தவர்களில் தலையான தமிழ் அறிஞர்கள் தமிழ்க் கடல் மறைமலை அடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க., தமிழ்க்காவலர் சுப்பிரமணிய பிள்ளை, சைவப் பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம சுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவ நாதம் ஆகியோர் ஆவார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை; இறுதி மாதம் மார்கழி; புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை. திருவள்ளுவர் காலம் கி.மு. 31. எனவே, ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டு. 2008 + 31 = 2039.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ் நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ் நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ் நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

## வேண்டுகோள்

தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றின் நலமும் வளமும் நாடும் அனைவரும் சாதி, மதம், கட்சி, அரசியல் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நின்று, 60 ஆண்டு ஆபாச முறையை அகற்றவும் தமிழ் ஆண்டாகிய திருவள்ளுவர் ஆண்டுமுறையைத் தம் வாழ்வில், வழக்கில், வரலாற்றில் பின்பற்றவும் பரப்பவும் வேண்டுகிறேன்.

**தமிழ் ஆண்டு முறையைப் பின்பற்றுவோம்**
**நாம் தமிழர் என்று நிலை நாட்டுவோம்.** *


## விரைவில் இலண்டனில் ஈழத்துத் தமிழ் நூற் கண்காட்சி

ஈழத்துப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் இக்காட்சியில் இடம்பெறும். அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச் சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப் படப் பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப் பதிவுகள், சிறு சஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு... என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புகளுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம். அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புகளையும் அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்குத் தங்களால் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு :
**R. Mahendran** (முல்லை அமுதன்)
34 Red Riffe Road Plaistow,
London, E13 OJX Tel : 0208 5867783,
Email : mullaiamuthan_03@hotmail.co.uk

கதை நேரம்-12

# நான் செத்துப் போனவன்

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

சுரேஷ் ஒரு மாறுபட்ட இளைஞன்; தான் செத்துப் போய்விட்டதாக அவன் எண்ணிக் கொண்டிருந்தான். யாரையாவது நீங்கள் சுரேஷுக்கு அறிமுகப் படுத்தி வைத்தால் அவன், ''ஐயா என் பெயர் சுரேஷ்; நான் செத்துப்போய் 5 வருடம் ஆகிறது'' என்று சொல்லிக் கொள்வது அவன் வழக்கம். இதனாலேயே ஊர் மக்கள் அவனைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித் தார்கள். அது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சிலர் அவனை ஒரு பெரிய மகான்-யோகி என்று எண்ணினர், சிலர் ஒருவேளை உண்மையிலேயே செத்துப் போய் விட்டு ஆவியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறானோ என்று சந்தேகப்பட்டனர். ஆனால், பெரும்பாலோர் அவனை மூளைக் கோளாறு உடைய மனிதன் என்றே எண்ணினர். ஆனால் ஊர் மக்கள் நடுவில் இப்படி ஏதோ ஒரு வகையில் பிரபலமான மனிதனாக மாறிவிட்டது சுரேஷுக்குப் பிடித்துவிட்டது. அதனாலேயே அவன் மகிழ்ச்சியாக இருந்தான்.

ஆனால் சுரேஷின் நண்பர்களுக்கு, அவனைப் பற்றிய கவலை அதிகமாக இருந்தது. இப்படியே விட்டு விட்டால் பைத்தியமாகவே மாறிவிடுவானோ என்ற அச்சமும், அவனை எந்தப் பெண் திருமணம் செய்து கொள்ளப் போகிறாள்? என்ற கவலையும் ஏற்பட்டு விட்டது. அவனை எப்படியாவது ஒரு மனநல மருத்து வரிடம் அழைத்துச் சென்று சரிசெய்ய வேண்டுமென்று திட்டமிட்டனர். அதன்படியே ஒரு மருத்துவரைக் கண்டு பிடித்து, சுரேஷைப் பற்றிய எல்லாச் செய்திகளையும், அவனுக்குத் தெரியாமல் அவரிடம் கூறிவிட்டு, ஒரு நாள் சுரேஷை அழைத்துச் சென்றனர்.

ஒன்றும் தெரியாதது போல மருத்துவரும் சுரேஷை வரவேற்றார். ''வாருங்கள் சுரேஷ், எப்படி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டபோது சுரேஷ் வழக்கம் போலப் பதிலளித்தான், ''நன்றி டாக்டர், நான் எப்படி இருக்கேன்னு எப்படிச் சொல்ல முடியும் டாக்டர்; நான் செத்துப்போய் 5 வருஷம் ஆச்சே!''

ஓ! அப்படியா! எனக்குச் செத்துப்போன ஆளோடு பேசறதிலே ரொம்ப மகிழ்ச்சி! நானும் என் வாழ்க்கையில் எவ்வளவோ செத்துப் போன மனிதர் களைப் பிணமா பார்த்திருக்கிறேன்; ஆனா யாரோடும் பேசியதில்லை; முதலாவதா, உங்களோடதான் பேசக் கூடிய பாக்கியம் கிடைத்திருக்கிறது!''

''ரொம்ப நன்றிங்க டாக்டர்!''

'சுரேஷ்! உங்களைச் சில கேள்விகள் கேட்கலாமா?'

'ஓ! தாராளமா கேட்கலாமே!'

'ஒரு மனிதன் உயிரோடு இருக்கிறதா வெச்சிக் கலாம்-அவன் உடல்லே தோலின் மீது ஒரு வெட்டுக் காயம் ஏற்படுகிறது. அப்ப, அவன் உடலிலிருந்து என்ன வெளியேறும்?'

'அப்ப அவன் உடலிலிருந்து இரத்தம் வெளியே வரும் டாக்டர்!'

'அதிலே உங்களுக்கு ஒண்ணும் சந்தேகமில்லை தானே?'

'நிச்சயமாக இல்லைங்க டாக்டர்'

'சரி, உங்க இடது கையைக் கொடுங்க!'

சுரேஷ் தயக்கத்துடன், நீட்டிய இடதுகையை மருத்துவர் பற்றிக்கொண்டு, ஆட்காட்டி விரலின் மேற் பகுதியில், தயாராக வைத்திருந்த ஊசியால் சுருக்கென்று குத்தி, விரலை அமுத்தினார். விரலிலிருந்து இரத்தம் கசிந்தது! வலி தாங்காமல் நெளிந்து கொண்டிருந்த சுரேஷை மருத்துவர் கேட்டார், ''சுரேஷ் கொஞ்சம் முன்னாடி என்ன சொன்னீங்க? உயிரோடிருக்கிறவன் உடலைக் குத்தினால் இரத்தம் வரும்னு தானே சொன்னீங்க, இப்ப உங்க விரலிலிருந்து இரத்தம் வருது. இதிலிருந்து உங்களுக்கு என்ன தெரியுது?''

''இதிலிருந்து செத்துப் போனவனை ஊசியால் குத்தினால்கூட இரத்தம் வரும்னு தெரியுதுங்க டாக்டர்!''

**உடலில் உயிர்-உள்ளத்தில் சாவு.**

சுரேஷைப் போலச் சிலர் இருக்கிறார்கள். உடலளவில் அவர்கள் உயிரோடு இருந்தாலும் உள்ளத் தால் செத்துப் போனவர்கள். அவர்கள் எல்லோரையும் போலச் சாப்பிடுவார்கள், நடமாடுவார்கள், வேலை செய்வார்கள், ஆனால் உள்ளம் மட்டும் செத்துப் போயிருக்கும். அவர்களிடம் நீங்கள் எதைச் சொன்னா லும், 'என்னால் முடியாது, நான் என்ன செய்ய முடியும், எனக்குத் தெரியாது' என்ற பதில்களே வரும். சில மாணவர்கள், ''என்னால் இந்தத் தேர்வில் வெற்றி பெற முடியாது!'' என்றும், சிலர் ''இந்த ஜென்மத்தில் எனக்கு வேலை கிடைக்காது'' என்றும், சில மேலாளர்கள், ''என்னிடம் வேலை செய்பவர்களை வேலை வாங்க என்னால் முடியாது!'' என்றும் கூறுவதைக் கேட்டிருக் கிறோம். ஒருவேளை வாழ்க்கையில் அவர்கள் எப்போதோ சந்தித்த சில தோல்விகளும், ஏமாற்றங்களும் அவர்களை அப்படி மாற்றியிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள், அத் தகைய உணர்வுகளிலிருந்து விடுபட்டு, வாழ்க்கை உயி ரோட்டமானது என்பதைத் தெரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இல்லாவிடில் அவர்கள் உயிரோடிருந்தாலும் செத்துப் போனவர்களே! *(தொடரும்)* ✱

# JAFFNA HOUSE




Sri Lankan & South Indian
Tandoori Restaurant & Take Away
Fully Licensed & Fully Air Conditioned

**Opening Hrs: Mon to Sun 12 Noon to Midnight**

வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று, ஒரே நிர்வாகத்தில் நிலைத்து, உயர்ரகத்தில், தரத்தில், ருசியில், சுத்தத்தில் கடந்த 17 வருடங்களாக முதலிடம் வகித்து உயர்ந்து நிற்கும் ஒரே உணவகம்


90 High Street, Tooting Broadway, Tooting, London SW17 ORN Entrance: side door (rear of our premises)

**020 8672 7786, 020 8767 6668 Website: www.jaffnahouse.co.uk**

**Pride for Sri Lankan Winning the Best Restaurant Award for 2004**

## திருமண சேவை

"சுய தெரிவு முறை முன்னோடி" குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனிடம் இன்று கடிதக் கோப்புக்கள் கையிருப்பு 1830!
அவற்றுள் மணமகன்: உள்நாடு 225 வெளிநாடு 675 ஆக மொத்தம் 900.
மணமகள்: உள்நாடு 710 வெளிநாடு 220 ஆக மொத்தம் 930.
அதிகுறைந்த வயது: மணமகன் 24 மணமகள்: 19
அதி உயர்ந்த வயது: மணமகன்: 52 மணமகள்: 50



இன்னுமேன் தாமதம்?....
இன்றே இலங்கையில் தன்னிகரற்ற தனித்துவத்திற்கு முத்திரை பதித்த "தனிநபர் நிறுவனம்", சர்வதேசத் தமிழ் இனப்பல்சமூகத் திருமண ஆற்றுப்படுத்துநர் வேல் அமுதனைச் சந்தியுங்கள்!

விவரங்களைத் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மாலை, வேல் அமுதனுடன் தொடர்பு கொண்டு விசாரித்தறிகுக!

**நேரடிக் கொழும்பு தொலைபேசி:**
**4873929, 2360488, 060-2158067**

முகவரி: 6-3-3, மெற்றோ மாடிமனை
(வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு
முன்பதாகவுள்ள 33ஆம் ஒழுங்கை வழி)
55ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை,
கொழும்பு 06, இலங்கை

துரிதமான சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுய தெரிவு முறையே!
மகத்தான மகிழ்ச்சிகரமான திருமண வாழ்வுக்குக் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனே!

# நலம் காப்போம்

இலங்கையில் வட-கிழக்கு வாழ் சத்துணவுகுன்றிய கர்ப்பிணிப்
பெண்களுக்கான சத்துணவு வழங்கும் உதவித் திட்டம்

## NUTRITIONAL SUPPORT FOR MALNOURISHED PREGNANT MOTHERS IN NORTH & EAST OF SRI LANKA

# PROJECT PRESENTATION

**at Atlanta Hall, 1240 Ellsmere Road, Scarborough, Ontario**
**on Saturday April 05, 2008**
**from 6:00pm - 10:00pm**

*Project Implemented by*
*International Medical Health Organization (IMHO)*
*a USA based 501(3)(c) non-profit organization*

**Dinner will be served**

**Contribution: $100 or more per person is welcome**

*to help provide nutritional supplements to less fortunate pregnant mothers*

**Co-ordinators:**

**Dr. R.Lambotharan @416 299 8100**
**Manuel Jesudasan @416 444 8070**
**Tam Sivathasan @416 759 6000**
**S.Sivarajan @416 659 5536**
**Ratheeshan @647 400 2427**
**Dr. Deepa Yoganathan @647 344 3306**
**K.Thuraisingham @416 299 4492**



INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION

*www.imhousa.org*